
Not for sale

மே - ஜூன் 2015

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom




# உயிர்த்தெழுதல்

உயிர்த்தெழுதலின் பொருள் நம்பிக்கை • ஒரே மனுஷனாலே வந்த உயிர்த்தெழுதல்

கல்வாரிக்கு முன் நடந்த தற்காலிகமான உயிர்த்தெழுதல்கள் • இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

விசுவாசமுள்ள சபையின் உயிர்த்தெழுதல் • திரள் கூட்டத்தாரின் உயிர்த்தெழுதல்

முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் • முழு உலகத்தின் உயிர்த்தெழுதல் • இறுதி பரீட்சைக்குப் பின்

உயிர்த்தெழுதல்

# ஆதியிலே



தங்களால் நேசிக்கப்பட்டவர்கள், மரணத்திலிருந்து திரும்புவதை காண்பதற்கு எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கும்? ஆனால் இந்தப் பிரதியில், "அவனவன் தன் தன் வரிசையில் உயிர்ப்பிக்கப்படுவான்" என்பதை வரிசைப்படுத்தப்பட்டிருக்கும் கட்டுரைகள் காட்டுகிறது.

உயிர்த்தெழுதலைக்குறித்து ஒருவரும் திகிலடைய வேண்டாம். மாறாக அது அனைவருக்கும் நம்பிக்கையூட்டக் கூடியதாக இருக்கும் காரியத்தை மையப்படுத்தும் படி, "உயிர்த்தெழுதலின் பொருள் நம்பிக்கையே" என்ற கட்டுரைக் காட்டுகிறது. பாவங்களுக்காகச் செலுத்தப்பட்ட, இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியே உயிர்த்தெழுதலின் நம்பிக்கைக்குரிய அடிப்படை என்ற வசனங்களிலிருந்து, "ஒரே மனுஷனாலே வந்த உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பு வசனங்களிலிருந்து காட்டுகிறது. கிறிஸ்து அனைவருக்காக ஒருமுறை மரித்ததால், அனைவரும் நன்மையடைய வேண்டாமோ?

இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் அவருடைய உயிர்த்தெழுதலுக்கு முன் எழுப்பப்பட்ட மரித்துப்போன ஆறு நபர்களுக்கும், வாக்களிக்கப்பட்ட உயிர்த்தெழுதலுக்கும் உள்ள வித்தியாசத்தை, "கல்வாரிக்கு முன் நடந்த தற்காலிகமான உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பு வேறுபடுத்திக் காட்டுகிறது.

நித்தியமான முதல் உயிர்த்தெழுதல், "இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ளது. அவர் உலகில் முதன்மையான இடத்தைச் சம்பாதித்தார். இயேசுவின் உயிர்த்தெழுதலின்மேல் அனைவரின் நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கைகளும் சார்ந்திருக்கிறது.

பரலோக உயிர்த்தெழுதலைப் பெறக்கூடிய விசுவாசமுள்ள கிறிஸ்துவின் மணவாட்டி, ஜீவனையும் அழியாமையையும் பெறக்கூடிய கால அவகாசத்தையும், வரிசை முறைகளையும், வசனங்களின் இசைவோடு, "விசுவாசமுள்ள சபையின் உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பு விவாதிக்கிறது.

தேவனுடைய அழைப்பை ஏற்றுக்கொண்டு, அதற்குப் பின் தடுமாறினாலும், காலபோக்கில் எல்லாவற்றையும் மேற்கொள்ளக்கூடியவர்களுக்கு என்ன நேரிடும் என்பதை, "திரள் கூட்டத்தாரின் உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பு சிந்திக்கிறது. அர்ப்பணிக்கப்பட்டவர்களுக்காக சில நயவஞ்சகமான ஆபத்துகளை இந்தத் தலைப்பு ஆராய்கிறது.

கிறிஸ்துவுக்கு முன்னிருந்த ஆபிரகாம் மற்றும் விசுவாசமுள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் முதன்மை, "முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பு காட்டுகிறது. இந்தப் பூமியின்மேல் இவர்கள் முதலில் உயிர்ப்பிக்கப்படுவார்கள். இவர்களே உயிர்த்தெழுதலுக்கு முன்னோடியான மாதிரிகளாக இருப்பார்கள்.

முழு உலகமும் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்படுவதை, "முழு உலகத்தின் உயிர்த்தெழுதல்" என்ற தலைப்பு காண்கிறது. பரலோக அழைப்புக்குரியவர்கள் முன்னதாகவே பூரணப்பட்டிருந்தாலும், இந்த உலகத்தார் நீதியைக் கற்றுக் கொள்வதற்கு அதற்குப் பின் எழுப்பப் படுவார்கள். உண்மையில், நாத்திகர் களையும் இந்த உயிர்த் தெழுதல் நம்ப வைக்கும். இப்போது மற்றவர்களுக்கு நன்மை செய்வதற் குக் கற்றுக்கொள் வதற்கான காலத்தை ஜனங்கள் பெற்றிருப்ப தைக் காட்டிலும், இனி வரக்கூடிய யுகத்தில் அதிகமான வருடங்களைப் பெற்றிருப்பார்கள்.

"உயிர்த்தெழுதலின் வேலை நிறைவடையும் போது ஒவ்வொரு தனிநபரும் சாத்தானுக்குக் கொடுக்கப்பட்ட கொஞ்ச காலத்தில் இறுதியாக ஒருமுறை சோதிக்கப்பட்ட பின் மணரமும், நரகமும் நித்தியமாக அழிக்கப்படும் என்பதை, "இறுதி பரிட்சைக்குப் பின்" என்ற தலைப்பு நமக்கு நினைப்பூட்டுகிறது. அதற்குப் பின் பரலோகங்களும், பூமியின் திரள்களும் நித்தியத்திற்கும் இசைந்து வாழும்.

**மே-ஜுன் 2015**


**உயிர்த்தெழுதலின் பொருள் நம்பிக்கை** 2
முழு மனுக்குலத்திற்கும் உண்டான நம்பிக்கை

**ஒரே மனுஷனாலே வந்த உயிர்த்தெழுதல்** 5
ஈடுபலி - எல்லா உயிர்த்தெழுதலின் நம்பிக்கைளுக்கு அடிப்படை

**கல்வாரிக்கு முன் நடந்த தற்காலிகமான உயிர்த்தெழுதல்கள்** 10
கல்வாரிக்கு முன் எழுப்பப்பட்டவர்கள், உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறது

**இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்** 13
இயேசு நமக்காக தம்முடைய ஜீவனைக் கொடுத்து, தெய்வீக சுபாவத்திற்கு உயர்த்தப்பட்டார்

**விசுவாசமுள்ள சபையின் உயிர்த்தெழுதல்** 17
மணவாட்டி தன்னுடைய மணவாளனைப் போல எழுப்பப்படுகிறாள்


**திரள் கூட்டத்தாரின் உயிர்த்தெழுதல்** 22
ஆவிக்குரிய ஒரு குறைவான பரிசு

**முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல்** 25
இவர்கள் இந்தப் பூமியின்மேல் உள்ள அநேகரை நீதியின் பக்கமாகத் திருப்புவார்கள்

**முழு உலகத்தின் உயிர்த்தெழுதல்** 29
எஞ்சியுள்ள உலகம் நீதியைக் கற்றுக்கொள்ளும்

**இறுதி பரீட்சைக்குப் பின்** 32
பாவமும் மரணமும், நித்திய ஜீவனுக்கு வழி கொடுக்கும்

**தீர்க்கதரிசனத்தில் இன்று . . .** 34



"மரித்தோருடைய உயிர்த்தெழுதலைப்பற்றிய நம்பிக்கையைக்குறித்து நான் நியாயம் விசாரிக்கப்படுகிறேன்" (அப்போஸ்தலர் 23:6)

# உயிர்த்தெழுதலின் பொருள் நம்பிக்கை

"நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, . . . ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1 பேதுரு 1:3-4).

**Ryan Hangs**

நம்முடைய அன்றாட வாழ்க்கையின் கவலைகளும், அழுத்தங்களும் குறையும்படியாக, பழைய எற்பாட்டு விசுவாசிகள் தங்களுடைய நம்பிக்கைகளுக்கு அடிப்படையாக தேவனுடைய வார்த்தையைச்சார்ந்திருந்ததுபோல (அப்போஸ்தலர் 26:6-8) நம்முடைய நம்பிக்கைகளும் தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களையே சார்ந்திருக்கிறது என்று நமக்கு அறிவுறுத்தப்படுகிறது (ரோமர் 15:4; 1பேதுரு 3:15). நிலையற்ற சூழ்நிலையோடு இப்போது காணப்படும் இப்படிப்பட்ட ஆர்வமூட்டும் நம்பிக்கை, நம்முடைய கடுமையான அனுபவங்களைப் பொறுமையோடு சகிப்பதற்கு நம்மை ஊக்குவிக்கிறது (ரோமர் 8:28; 1 தீமோத்தேயு 2:3-4). இதன் பலனாக, தேவனுடைய விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களிலுள்ள நம்முடைய நம்பிக்கை வாழ்க்கையின் ஏற்றத்தாழ்வுகளைத் தணிப்பதற்கான கிறிஸ்தவர்களின் கருவிகளில் மதிப்பற்ற கருவிக்கும் அவநம்பிக்கைக்கும் எதிரான பலமும், ஆற்றல் வாய்ந்த செயல்முறையாக இருக்கிறது.

"நம்பிக்கையின் தேவனை" நாம் பெற்றிருக்கிறோம் (ரோமர் 15:13). ஆகவே வேதாகமத்தில் சுமார் 150 முறைகள் "நம்பிக்கை" என்ற வார்த்தை காணப்படுவதில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஒரு நபர் அல்லது உலகளாவிய அளவில், ஒரு சாதகமானக் காரியத்தை, நம்பிக்கையோடு எதிர்பார்க்கக்கூடிய மகிழ்ச்சியான ஒரு உணர்வை, நம்பிக்கை என்ற வார்த்தையின் பொருள் குறிப்பிடுகிறது. மனித சரீரத்தின் ஆரோக்கியத்தை, நீடித்திருக்கும்படி நம்பிக்கையின் வல்லமை மனித சிந்தையில் பாதிப்புகளை ஏற்படுத்துவதாக மனோதத்துவ மருத்துவர்கள் கண்டுபிடித்துள்ளார்கள்.

எடுத்துகாட்டாக, நம்பிக்கை மட்டுமே எந்த விதமான மருந்துகளின் உதவியின்றி, உடல் நல ஆரோக்கியத்தின் நன்மையான மாற்றங்களை ஏற்படுத்தும் என்பதற்காக, மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சோதிக்கப்பட்ட மருந்துகளின் பலன்களைத் தெளிவாக இருப்பதில்லை என்பதை நிரூபிக்கும்படியாகத் தங்களுடைய அன்றாட மருத்துவ சோதனைகளில் காலியான அதாவது மருந்தற்ற கேப்சுயுல்ஸ்களை பயன்படுத்துகிறார்கள்.

**உயிர்த்தெழுதலின் முக்கியத்துவம்**

தேவன் தம்முடைய அநேக விலையேறப்பெற்ற வாக்குத்தத்தங்களை நிறைவேற்றும்படியாக, அனைத்து மனுக் குலத்திற்கும் மரணத்திற்குப் பின் ஜீவனைக் கொடுப்பதற்கு ஒரு செயல்முறை தேவைப்பட்டது. உயிர்த்தெழுதலே இந்தச் செயல்முறை.

நடைமுறையில், இந்த உயிர்த்தெழுதலின் உபதேசம் மற்ற எல்லா மதங்களிலிருந்து கிறிஸ்துவத்தை வேறுபடுத்துகிறது. அழியா ஆத்துமா என்ற உபதேசத்திற்கு, உயிர்த்தெழுதலின் போதனை ஒவ்வாததாக காணப்படுகிறது. அழியா ஆத்துமாவைப்பற்றிய உபதேசம், இயற்கையாகவே நுட்பமான பெருமையின் உணர்வுகளைப் பெற்றுள்ளது (அதாவது அதுவே போதுமான இரட்சிப்பு). ஆகவே, "நீங்கள் சாகவே சாவதில்லை"( ஆதியாகமம் 3:4) என்ற தப்பறையான நம்பிக்கையை - பொய்யுக்கும், பெருமைக்கும் தந்தையாகிய நம்முடைய எதிராளியான சாத்தான், துவக்கி வைத்ததில் எந்த ஆச்சரியமும் இல்லை. ஆத்துமா அழியாதது என்றால், கிறிஸ்து மரித்திருக்க வேண்டிய காரணமென்ன? மனுஷனுடைய நம்பிக்கை மரணத்தின் நிஜத்தை மறுப்பதில் அல்ல, மாறாக, வாக்களிக்கப்பட்ட மரித்தோரின் உயிர்த்தெழுதலின் மேல் உள்ளது.

**இயேசுவின் மரணம் அனைவரின் உயிர்த்தெழுதலுக்கான உபாயத்தை அளிக்கிறது**

விழுந்துபோன ஆதாமின் சந்ததியாகிய நாம் அனைவரும் பாவத்தில் கர்ப்பம் தரித்து துர்குணத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறோம் (சங்கீதம் 51:5). ஆகவே தேவனுடைய பரிபூரண நீதியின் அடிப்படையில், நம்முடைய பாவநிலைக்கு மரணமே நியாயமான தீர்ப்பாக உள்ளது (ஆதியாகமம்

2:17; எசேக்கியேல் 18:4; ரோமர் 6:23). மேலும் மரணம், கல்லறையில் ஒன்றுமில்லா நிலையைக்கொண்டிருப்பதினால் (சங்கீதம் 146:4; பிரசங்கி 9:10). பாவம் மற்றும் மரணத்தின் வல்லமையிலிருந்து இரட்சிக்கப்பட்டு, விடுவிக்கப்படுவதற்கு, நம்முடைய மீட்பும், உயிர்த்தெழுதலுமே நாம் கொண்டிருக்கும் ஒரே நம்பிக்கையாக உள்ளது (அப்போஸ்தலர் 4:12). இயேசுவின் வழியாக தந்தையாகிய ஆதாமை (அவருடைய சந்ததியையும்) மீட்பதற்கு குறைபாடற்ற திட்டத்தை நம்முடைய பிதா வடிவமைத்திருப்பதை அறிந்தவர்களாக, நித்தமும் நாம் மகிழ்க்கிறோம். அந்தத் திட்டம் தேவனுடைய பரிபூரணமான நீதியை திருப்திப்படுத்தி, முழு மனுக்குலமும் உயிர்த்தெழுதலைப் பெறுவதற்கு அனுமதிக்கிறது. மீண்டும் தேவனோடு ஒப்புரவாகி, நித்தியமாக ஜீவனைப் பெறுவதற்கு அனைவருக்கும் வாய்ப்பளிக்கிறது (ஓசியா 13:14; ரோமர் 5:18-19).

"உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் மட்டுமே காணப்பட்டாலும், பழைய ஏற்பாட்டின் காலங்களில் இந்தக் கருத்து ஒரு பொதுவான நம்பிக்கையாக இருந்தது. இயேவுக்கு முன் வந்த சிலர் இனி வரக்கூடிய உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கை உடையவர்களாக இருந்ததே இதற்கான ஆதாரம். இதில் சாமுயேல் (1சாமுயேல் 2:6); யோபு (19:25-26); தாவீது (சங்கீதம் 30:3); ஏசாயா (26:19); எசேக்கியேல் (16:55); தானியேல் (12:2); பரிசேயர்கள் (அப்போஸ்தலர் 23:8) மற்றும் ஆபிரகாமும் (எபிரெயர் 11:19) அடங்குவர். மரணம் ஒரு செயலற்ற நிலை என்றும் அதிலிருந்து அனைவரும் எழுந்து வருவார்கள் என்பதை வெளிப்படையாகத் தெரிவிக்கும்படி வேதாகமத்தில் அடிக்கடி, மரணத்தை "நித்திரைக்கு" ஒப்பிட்டுப் பேசப்படுகிறது. (எடுத்துக்காட்டாக 1 இராஜாக்கள் 2:10; தானியேல் 12:2; யோவான் 11:11, 14; அப்போஸ்தலர் 7:60; 24:15).

### மனுக்குலத்தின் சீர்பொருந்தலுக்கு இயேசுவின் உயிர்த்தெழுதல் மிக அவசியம்

மரணத்திற்குப் பின் உயிர்த்தெழுதலே மனுக்குலத்தின் ஜீவனுக்கான ஒரே நம்பிக்கையாகும். இந்தப் பூமியின்மேல் பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை முடிவுகட்டி தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில், மனுக்குலத்தை மீண்டும் சீர்பொருத்துவதற்கு உயிர்த்தெழுதல் ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது. நம்முடைய தலைப்பு கூறுகிற படி மரித்த அனைவருக்கும், **உயிர்த்தெழுதல் என்பது நம்பிக்கை** என்று பொருள்படுகிறது. இதற்கு நம்முடைய ஆண்டவர் இயேசு விதிவிலக்கல்ல. தந்தையாகிய ஆதாமுக்கு, இயேசு செலுத்தின ஈடுபலியானது, அவருடைய வருங்காலத்திற்கு உத்திரவாதம் கொடுக்கவில்லை. அதற்குப் பதிலாக, "இந்த உலகத்தின் ஜீவனுக்காக" அவருடைய ஜீவனைக் கொடுத்ததினால், அவருடைய ஜீவன் அணைந்துபோனது (யோவான் 6:51, 11:25, 14:6). தேவனுடைய நீதியைத் திருப்திப்படுத்தும்படியாக தந்தையாகிய ஆதாமை மீட்பதற்கு இயேசு சரி நிகர் சமான விலையானார் (ஒரு பரிபூரண மனுஷனுக்காக ஒரு பரிபூரண மனுஷன்). இப்படியாக, ஆதாமின் மரணநிலையை இயேசு மூன்று நாட்கள் பங்கெடுத்தார்.

இயேசுவின் உயிர்த்தெழுதல், மூன்று முக்கியமான கோட்பாடுகளை உறுதிப்படுத்துகிறது: (1) இயேசுவின் 31/2 வருட ஊழியத்தையும், அதில் சிலுவையில் ஆதாமுக்காக அவர் கொடுத்த ஈடுபலியையும் தேவன் அங்கீகரித்தார் (1கொரிந்தியர் 15:21-22), (2) திவ்விய சுபாவத்திற்கு உயிர்த்தெழுப்பக்கூடிய தேவ வல்லமை வெளிப்பட்டது (பிலிப்பியர் 2:8-10) மற்றும் (3) மரண சிறையிலிருந்து முழு மனுக்குலத்தையும் விடுவிப்பதற்கான உத்திரவாதம் கிடைத்தது (ஏசாயா 61:1; அப்போஸ்தலர் 17:31).

### உயிர்த்தெழுதலின் நம்பிக்கைகள் அனைத்தும் சமமானது அல்ல

முழு மனுக்குலத்திற்கும், உயிர்த்தெழுதலின் நம்பிக்கை உறுதியளிக்கப்பட்டாலும், நம்முடைய ஆண்டவர் கூறுகிறபடி உயிர்த்தெழுதல்களின் அனுபவங்கள் அவர்களுக்குள் வேறுபடும். "அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28-29). இந்தப் பிரதியில், தொடர்ந்து வரக்கூடிய கட்டுரைகளில் விவாதிக்கப்பட்டிருக்கிற படி, வெவ்வேறு வகுப்புக்குரிய தனிப்பட்ட நபர்கள், உயிர்த்தெழுதலின் அனுபவங்களைப் பெறுவதில் இயேசு, விசுவாசமுள்ள சபை, திரள் கூட்டம், மற்றும் முற்பிதாக்கள் அடங்குவார்கள்.

மீதியுள்ள உலகத்தின் மனுக்குலம் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு, இந்தப் பூமியின்மேல் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ளும்போது நித்தியமாக ஜீவிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு அவர்களுக்குக் கொடுக்கப்படும். சாத்தானுடைய

பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை மேற்கொள்ளும்படியாக (அதன் நாசகரமான பாதிப்புகளையும்) பூமியின் முழு மனுக்குலமும் மனரீதியாகவும், குணங்களிலும், சரீர ரீதியாகவும் பரிபூரண நிலையை அடைந்து தேவனுடைய புத்திரர்கள் என்று அழைக்கப்படுவதற்குப் பாத்திரமாக மாறும் போது முழு உணர்வோடு, இந்த உயிர்த்தொழுதலின் வேலைகள் முடிவடையும் (லூக்கா 20:35-36; 1கொரிந்தியர் 15:26).


விழுந்துபோன மனுக்குலத்தின் நிலையை இரட்சிப்பதற்கு உயிர்த்தெழுதலின்றி எந்த விதமான நன்மையான மாற்றங்களையும் ஏற்படுத்த முடியது. ஈடுபலி ஒரு வழி (அதாவது முதன்மையானது). ஆனால் உயிர்த்தெழுதல், பூமியின் குடும்பங்களை ஆசீர்வதிப்பதற்கு ஒரு செயல்முறையாக இருக்கிறது. உயிர்த்தெழுதலை ஒரு அடிப்படையான கிறிஸ்துவ உபதேசமாக பவுல் கருதுகிறார் (எபிரெயர் 6:1-2). தேவனுடைய திட்டத்தில் சம்பந்தப்பட்டிருக்கும் நம்பிக்கைகளை, ஒரு சக்கரத்தின் வழியாக ஒப்பிட்டுப்பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும். இந்த உயிர்த்தெழுதல் (சக்கரத்தில் சுற்றியுள்ள ரிம்) தேவனுடைய திட்டத்தை முன்னேறிச் செல்வதற்குத் தேவைப்படும் ஆதாரம் அல்லது ஊன்று கோலாகச் செயல்படுத்தக் கூடியதாக இருக்கிறது. இது தனிப்பட்ட நபர்கள் இணைந்திருக்கும் வெவ்வேறு வகுப்பாருக்குத் தேவனுடைய விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்களை (சக்கரத்தின் குறுக்குக் கம்பிகள்) அடிப்படையாகக்கொண்ட எல்லா நம்பிக்கைகளையும் உணரச்செய்திடும். நம்முடைய ஆண்டவரின் ஈடுபலி (சக்கிரத்தின் மையப் பகுதி) தேவ திட்டத்தின் மையமாகும். ஆயினும் சக்கரத்தில் சுற்றியுள்ள ரிம், மையம் மற்றும் குறுக்குக்கம்பிகள் இல்லாமல், அனைத்தும் பயனற்றதாக இருக்கம். ஆகவே உயிர்த்தெழுதல் இன்றி, இயேசுவின் ஈடுபலியின் மூலம் நிறைவேற்றப்பட்ட தேவனுடைய நீதி பயனற்றதாயிருக்கும். இதன் பலனாக மனிதனுடைய நம்பிக்கைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டிருக்காது.

**உயிர்த்தெழுதலின் நம்பிக்கையில் பங்கெடுத்தல்**

தேவனற்றவர்களின் நம்பிக்கைகள் அழிந்து போவதற்கு எதிராக (யோபு 8:13; நீதிமொழிகள் 11:7; எபேசியர் 2:12), நம்முடைய நம்பிக்கைகள் தேவன் மேலும், அவருடைய வார்த்தைகளின் மேலும் உறுதியாக பொருத்தப்பட்டிருக்கிறது (ரோமர் 15:4; 1தீமோத்தேயு 6:17). நம்மைச் சுற்றியுள்ள உலகத்திற்கு ஒப்பிட்டுப்பார்க்கும் போது இவைகள் நம்முடைய வாழ்க்கையில் ஆறுதலையும், உற்சாகத்தையும் அளித்து, அழுத்தங்களைக் குறைக்கிறது. நாம் அதிகமாக நேசித்தவர்களின் மரணம் குறிப்பாக, இரட்சகரோடுகூட நம்முடைய விசுவாசத்தில் பங்கெடுக்காதவர்களின் மரணத்தைப் பொறுத்தவரையில், நம்முடைய நம்பிக்கை நமக்குள் ஏற்படும் அதிர்ச்சியைக் குறைப்பது தெளிவாக காணப்படுகிறது. காலபோக்கில் மரணத்தை வேரோடு பிடுங்கி, குறித்த காலத்தில் முழு மனுக்குலமும் உயிர்த்தெழும் என்ற நம்முடைய பரம தந்தையின் திட்டங்களை நாம் அறிந்திருப்பது எத்தனை ஆசீர்வதிக்கப்பட்ட ஆறுதலாக இருக்கிறது (1கொரிந்தியர் 15:26; 1தெசலோனிக்கேயர் 4:13). இறந்தவர்களுடைய உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், தேவனை மகிமைப்படுத்தக்கூடிய சத்தியங்களை அறிவித்து, அவர்கள் அனைவரும் இராஜ்யத்தில் ஒன்றிணைக்கப்படுவதே நம்முடைய பெரிதான கிறிஸ்துவ சிறப்புரிமைகளில் மிகச் சிறப்பானதாகும். அவர்கள் படும் வருத்தத்தினிமித்தம் உண்மையான சுவிசேஷத்தின் நம்பிக்கையைப் பகிர்ந்துக் ("இதோ, **எல்லா ஜனத்துக்கும்** மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்"லூக்கா 2:10) கொள்ளக்கூடிய காரியமானது, அவர்களுக்குத் தேவையான ஆறுதலையும், விடுதலையும் மட்டுமல்ல, மரணபரியந்தம் ஆண்டவரிடத்தில் விசுவாசமுள்ளவர்களாக இருப்பதற்கான நம்முடைய முயற்சிகளை ஊக்குவிக்கும் (நீதிமொழிகள் 11:25; 1கொரிந்தியர் 9:16; 1பேதுரு 3:15) அனைவருக்காகவும் தேவன் வாக்களித்திருக்கிறார். உயிர்த்தெழுதலுக்கான நம்பிக்கையின் எதிர்பார்ப்புகளை நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுத்தி, நடமாடும் நிருபங்களாகத் தொடர்ந்து நாம் வாழக்கடவோம்.

அனைவருக்கும் ஒரே ஈடுபலி

# ஒரு மனிதனின் வழியாக வந்த உயிர்த்தெழுதல்



"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன்" (யோவான் 11:25).

ஆதாம் பாவம் செய்யும் வரையில், உயிர்த்தெழுதலுக்கு அவசியம் இல்லாதிருந்தது. ஆயினும் மனுஷன் பாவத்தின் கொடூரமான விளைவுகளைக் கற்றுக்கொள்வதற்கு, சரி மற்றும் தவறு ஆகிய இரண்டில் ஒன்றை தெரிந்தெடுத்துக்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை தேவன் ஆதாமுக்குக் கொடுத்தார். இதிலிருந்து கற்றுக்கொண்ட பாடத்தின் வழியாக நன்மைகளைப் பெறுவதற்கு உயிர்த்தெழுதலைக் கொடுப்பது மிக அவசியமானது.

யேகோவா தேவன் ஆதாமை சிருஷ்டித்தார். "தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்" (ஆதியாகமம் 2:7). அதற்குப் பின் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனை, ஏதேனின் கிழக்குப் பக்கத்திலுள்ள ஒரு தோட்டத்தில் வைத்தார். மேலும் அங்கு இரண்டுவிதமான கனி தரும் விருட்சங்களை வைத்திருந்தார். "ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார். "அதற்குப் பின் தேவன், "நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம். ஆனாலும் நன்மைதீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்கவேண்டாம். அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்" (ஆதியாகமம் 2:9; 16-17).

அண்டசராசரத்தின் மூன்றாவது உயர்ந்த இடத்தில் இருந்த நபரின் பெயர், "அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி" (எபிரெய பதம் - ஹேலேல் (Heylel), கிரேக்க பதம் - யூஸ்போரஸ் (Eosphoros), லத்தீனில் - லூசிஃபர்). ஏதேன் தோட்டத்தில் காவல் கேரூபாக நியமிக்கப்பட்டிருந்தான். ஆனால் அவன் தன்னை தான் உன்னதமானவனாக உயர்த்த திட்டமிட்டு, ஒரு சர்ப்பத்தைப் பயன்படுத்தி, (ஒருவேளை சர்ப்பமாகவே மாறி) "நீங்கள் இதைப் புசிக்கும் நாளிலே உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப்போல் இருப்பீர்கள்" (ஆதியாகமம் 3:1-5) என்று ஏவாளை வஞ்சித்தான். இப்படியாக, நம்முடைய ஆதி பெற்றோர் பாவத்தின் கண்ணியில் சிக்கினார்கள்.

யோகோவா தேவன், நேரடியாகக் கேள்வி எழுப்பினபோது, ஆதாம், ஏவாளின்மேல் பழி சுமத்தினான், ஏவாள் சர்ப்பத்தைக் குற்றம் சாட்டினாள். தேவன் இந்தச் சர்ப்பத்திற்கான சாபத்தை அறிவித்தார். (இப்போது சாத்தான் அல்லது எதிராளி என்பவன்) சாத்தானுக்கும் ஸ்திரீக்கும், சாத்தானுடைய வித்துக்கும், (2 தெசலோனிக்கேயர் 2-ஆம் அதிகாரத்தில் அக்கிரமக்காரன்) ஸ்திரீயினுடைய வித்துக்கும் (இயேசு மற்றும் விசுவாசமுள்ள சபை) பகை உண்டாக்குவேன் என்றார். சாத்தான் அவருடைய காலை நசுக்குவான் என்றும், அதற்குப் பின் அந்த "ஸ்திரீயின் வித்து" அவனுடைய தலையை நசுக்குவார் என்றும் கூறினார். "சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார்" (ரோமர் 16:20).

பாவத்தின் இயல்பானது, தவிர்க்க முடியாததுமான விளைவுகளை தேவன் விவரித்தார். "ஏவாளுக்குப் பிள்ளைப்பெறுவது முற்றிலும் மகிழ்ச்சியானக் காரியமாக இராமல், வேதனைக்குரியதாக இருக்கும் என்றும், ஆதாமைப் பொறுத்தவரையில், நெற்றி வேர்வை நிலத்தில் சிந்தும்படி பாடுப்பட வேண்டும் என்றார் (எபிரெய பதம் - ஆதாமை - ஆதாமா) "மண்ணாயிருக்கிறாய் மண்ணுக்குத் திரும்புவாய்." அந்த மரணத்திற்குப் பின் எந்தவிதமான உபத்திரவத்தைப் பற்றியும் அவர் கூறவில்லை. ஏனெனில், "பாவத்தின் சம்பளம் **மரணம்**" என்றே கூறப்பட்டுள்ளது (ரோமர் 6:23).

ஆனால் சங்கீதக்காரர், "நான் குழியில் இறங்குகையில் என் இரத்தத்தால் என்ன லாபமுண்டு? புழுதி உம்மைத் துதித்து, உமது சத்தியத்தை அறிவிக்குமோ?"

"மரித்தவர்களுக்கு அதிசயங்களைச் செய்வீரோ? செத்துபோன வீரர் எழுந்து உம்மைத் துதிப்பார்களோ?"

"மரித்தவர்களும் மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்" (சங்கீதம் 30:8; 88:10; 115:17 ) என்று கேட்கிறார்.

### பரிபூரணமான திட்டம்

நாம் ஒவ்வொருவரும் சற்று நிதானிக்கலாம். இந்தப் பிரச்சனைக்குத் தீர்வு காணும்படி தேவன் என்ன செய்வார் என்பதை ஒருவர் எப்படி சிந்திக்க முடியும்? பாவத்தின் அகோரமான விளைவுகளை மனுஷன் கற்றுக்கொள்வதற்கு அவன் மரிக்க வேண்டியதாக இருந்தது. ஆனால், ஒருவர் இந்த நீண்ட கால அவகாசத்தினால் எவ்வாறு பயனடைய முடியும்? ஆதாம் செய்த ஒரு பாவத்தினிமித்தம் அவரும், அவருடைய சந்ததியும் மரணத் தீர்ப்பின் கீழ் இருந்தனர். மரணத்தில் ஆதாமின் இடத்தை எடுத்துக்கொள்ள ஒரு பரிபூரண மனுஷன் தேடி கண்டுபிடிக்கப்பட்டிருந்தால், ஆதாமை மரணத்திலிருந்து மீட்டிருக்கலாம். ஆனால் ஆதாமைக் காட்டிலும், பாத்திரமான அந்த மனுஷன் மரித்துப்போயிருப்பார்.

"இயேசுகிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று, எல்லாருக்கும் வெளிப்படையாக காண்பிக்கிறதற்கு, இந்தக் கிருபை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது" (எபேசியர் 3: 9, 11). ஆகவே நாம் திட்டமிடுவதை தேவனிடம் விட்டுவிட்டு, அவருடைய வார்த்தைகளின் வழியாக, அவருடைய திட்டத்தைக் கற்றுக்கொள்ள முயற்சிசெய்து அவரோடுகூட இணைந்து செயல்படுவதற்கு ஒத்துழைக்கலாம்.

எதேனிலிருந்து, ஆதாமும் ஏவாளும் வெளியேற்றப்பட்டப் பின், மனுஷரும், அதற்குப் பின் வந்த தூதர்களும் கலகக்காரரான பிள்ளைகளைப் பெற்றெடுத்தார்கள் (2 பேதுரு 2:4; யூதா 6). ஜலப்பிரளயம் முடிந்து, பத்து தலைமுறைகள் கடந்தபோது, மனிதர்களும் சரி, தூதர்களும் சரி, இவர்களின் கடுமையான முயற்சியினால் உலகத்தைத் துன்மார்க்கமான சந்ததியினால் நிரப்பினார்கள். "அப்பொழுது கர்த்தர்: என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்" (ஆதியாகமம் 6:1-7).

அதற்குப் பின் பத்து தலைமுறைகள் கடந்த போது ஆபிரகாம், ஈசாக்கு மற்றும் யாக்கோபு இந்த உலகத்தில் பிறந்தார்கள். இதற்கிடையில் வந்த நிம்ரோதும் அவனுக்குப் பின் வந்தவர்களும் இந்த உலகத்தை, யேகோவா தேவனை விட்டு வெகுதூரம் இழுத்துச் சென்று, மிக மோசமான நிலையான, அடிமைத்தனத்திற்கும் கலகத்திற்கும் நோக்கித் திருப்பினார்கள்.

அதற்குப் பின் இஸ்ரயேலர்களை வழிநடத்தும்படியாக தேவன் மத்தியஸ்தராகிய மோசேயின் வழியாக நியாயப்பிரமாணத்தைக் கொடுத்தார். அவர்கள் பரிபூரணமான நியாயப்பிரமாணத்தைக் கடைபிடிக்க இயலாதவர்களாக, தங்களைப்பற்றி அறிந்துகொண்டு தங்களுடைய பாவநிலையை உணர்ந்து, அதிலிருந்து ஒரு மாற்றத்தைப் பெற வேண்டும் என்ற உணர்வை அவர்கள் பெறும்படி இந்தப் பிரமாணத்தைக் கொடுத்தார். மேலும் அவர்களுக்குள் இப்படிப்பட்ட மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு ஒரு இரட்சகர் தேவை என்பதை உணரும்படிச் செய்தார் (கலாத்தியர் 3:24).

அதற்குப் பின் பிதாவாகிய தேவன் சுவிசேஷ யுகத்தை துவங்கும்படி இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவை அனுப்பினார். இனி வரக்கூடிய யுகத்திற்காக - ஆயிரவருட கிறிஸ்துவின் இராஜ்யம் இரண்டாயிரம் வருடங்கள்கொண்ட சுவிசேஷ யுகத்தில் ஆவிக்குரிய ஆசாரியத்துவம் - பூமியிலுள்ள முழு குடும்பங்களை ஆசீர்வதிப்பதற்கு வளர்ச்சி அடைந்துக்கொண்டிருக்கிறது.

### ஈடுபலி மற்றும் மீட்பு

ஆசாரியத்துவம் இரண்டு கடமைகளைக் (பொறுப்புகளைக்) கொண்டிருக்கிறது - பலி செலுத்துதல் மற்றும் ஆசீர்வதித்தல். இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய விசுவாசமுள்ள சபை சுவிசேஷ யுகத்தில் பலி செலுத்தி, ஆயிரவருட ஆட்சியிலும், அதற்குப் பின்வரும் நித்திய காலத்திற்கும் ஜனங்களை ஆசீர்வதிப்பது அவர்களுடைய கடமையாக இருக்கும்.

ஆதாம் செய்த பாவத்தைப் போக்கி தேவனோடு ஒப்புரவாகுவதற்கு இயேசு கிறிஸ்துவின் ஈடுபலி மிக அத்தியாவசியமானது. தேவனுடைய இரட்சிப்பின் திட்டத்தில் இதுவே அடிப்படையானது. விசுவாசமுள்ள சபையின் தனிப்பட்ட நபர்களின் பலிகள், அவர்களின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு மிக முக்கியமானது. ஆனால் அவர்களின் பலிகளில் ஒப்புரவாகுதலின் புண்ணியங்கள் இருப்பதில்லை.

"ஆகையால் ஒரே மீறுதலினாலே **எல்லா** மனுஷருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானதுபோல, ஒரேநீதியினாலே **எல்லா** மனுஷருக்கும் ஜீவனை அளிக்கும் நீதிக்கு ஏதுவான தீர்ப்பு உண்டாயிற்று. அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே **அநேகர்** பாவிகளாக்கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே **அநேகர்** நீதிமான்களாக்கப படுவார்கள்" (ரோமர் 5:18-19) என்று ஆதாமின் பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படுவதைக் குறித்து பவுல் எழுதுகிறார்.

ஆதாம் பெற்ற மரண தீர்ப்பு அனைவரையும் வந்து சேர்ந்ததுபோல, நீதிமானாக்கப்பட்ட நிலைமையும் (சுவிசேஷ யுகமானாலும் சரி, ஆயிரவருட ஆட்சியானாலும் சரி) அனைவரையும் வந்து சேரும் என்று 18-ஆம் வசனம் கூறினாலும், அதன் காலங்கள் குறிப்பிடப்படவில்லை. ஆனால் 19-ஆம் வசனம் காலத்தைக்குறித்து வெளிப்படையாகக் கூறுகிறது. கடந்த காலத்தில் முழு மனுக்குலத்தின்மேல் ஆதாமின் பாவத்தையும் அதன் பாதிப்பையும் அது சுமத்துகிறது. அதற்குப் பின் வருங்காலத்தில் அதே மனுக்குலத்தை நீதிமான்களாக்குகிறது.

மீண்டுமாக, "கிறிஸ்துவோ மரித்தோரிலிருந் தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் முதற்பலனானார். மனுஷனால் **மரணம்** உண்டானபடியால், மனுஷனால் மரித்தோரின் **உயிர்த்தெழுதலும்** உண்டாயிற்று. ஆதாமுக்குள் **எல்லாரும்** மரிக்கிறதுபோல, கிறிஸ்துவுக்குள் **எல்லாரும்** உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவனவன் தன்தன் வரிசையிலே உயிர்ப்பிக்கப்படுவான், முதற்பலனானவர் கிறிஸ்து; பின்பு அவர் வருகையில் அவருடையவர்கள் உயிர்ப்பிக்கப்படுவார்கள். அதன்பின்பு முடிவு உண்டாகும்; அப்பொழுது அவர் சகல துரைத்தனத்தையும் சகல அதிகாரத்தையும் வல்லமையையும் பரிகரித்து, தேவனும் பிதாவுமாயிருக்கிறவருக்கு ராஜ்யத்தை ஒப்புக்கொடுப்பார். எல்லாச் சத்துருக்களையும் தமது பாதத்திற்குக் கீழாக்கிப்போடும்வரைக்கும், அவர் ஆளுகைசெய்யவேண்டியது. பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்" (1கொரிந்தியர் 15:20-26).

வாற்கோதுமையின் முதற்பலன்கள், (ஓய்வுநாளாக இருந்தாலும் சரி, அல்லது பஸ்கா பண்டிகையின் முதல் நாளானாலும் சரி) அந்த நாளில் தானே கிபி 33-இல் இயேசு மரணத்திலிருந்து எழுப்பப்பட்டார். நாற்பத்தொன்பது நாட்களுக்குப் பின் (50-வது நாள், பெந்தெகொஸ்தே நாள்) கோதுமையின் முதற்பலன்கள் படைக்க வேண்டும். அந்த நாளிலே கிபி 33-இல் கிறிஸ்துவின் சீஷர்கள் பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டார்கள் (23-ஆம் வசனத்தோடு ஒப்பிட்டுப்பார்க்கவும்.)

ஆதாமுக்குப் பதிலாக இயேசு கிறிஸ்துவின் ஒப்புரவாகுதலின் பலி 21-ஆம் வசனத்தில் குறிப்பிடப்படுகிறது. ஆதாமின் ஜீவனுக்காக ஒரு பரிபூரண மனுஷனுடைய ஜீவன் பலி செலுத்தப்பட்டது. ஆதாமுக்குள் மரித்த அனைவரும் கிறிஸ்துவுக்குள் இரட்சிக்கப்படுவார்கள் என்று 22-ஆம் வசனம் மீண்டும் வலியுறுத்துகிறது. ("அனைவரும்" என்பதற்கு முழு மனுக்குலத்தையும் பொருள்படுத்துகிறது. விசுவாசிகள் மட்டும் கிறிஸ்துவுக்குள் உயிர்த்தெழுப்பப்படுவார்களானால், ஆதாமுக்குள் விசுவாசிகள் மட்டுமே மரித்திருக்க வேண்டும் அல்லவா? இது ஒரு நிரூபிக்க இயலாத சிந்தனை). ஏதேனின் தொலைந்துபோன பரிபூரணத்தைப் பெறுவதற்கு, கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டு வெகு சீக்கிரத்தில் வழிநடத்தப்படுவார்கள். இந்த உலகளாவிய இரட்சிப்பு உலகளாவிய சரிகட்டுதல் அல்ல. ஆயினும் இது உலகம் அனைத்திற்கும் கொடுக்கப்படும் வாய்ப்பாகும்.

இந்த உயிர்த்தெழுதல், வரிசையாகவும், கிரமமாகவும் நடைபெறும் - சுவிசேஷ யுகத்தில் இயேசு கிறிஸ்துவும், பூரணப்பட்ட விசுவாசமுள்ள சபையும் முதலில் உயர்த்தெழுப்பப்படுவார்கள். அவர்களைத் தொடர்ந்து திரள் கூட்டத்தார் எழுப்பப்படுவார்கள். (1கொரிந்தியர் 3:10-17 வசனங்களில் மூன்று வகுப்பாரைப் பற்றி கொடுக்கப்பட்டுள்ளது - மணவாட்டி, திரள் கூட்டம் மற்றும் அவிசுவாசிகள் - மீண்டும் உயிர்த்தெழுதலைப் பெறாதவர்கள்). அதற்குப் பின் ஆயிரவருட ஆட்சியில் முற்பிதாக்கள் (ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, மோசே...) உயிர்ப்பிக்கப்படுவார்கள். அவர்களைத் தொடர்ந்து மாம்ச இஸ்ரயேலர்களும், அவர்களுக்குப் பின் மீதியுள்ள உலக மனுக்குலமும் உயிர்ப்பிக்கப்படுவார்கள்.

"அதன்பின்பு முடிவு உண்டாகும்" என்ற 24-ஆம் வசனம் கூறுகிறது. நித்தியமான இராஜ்யத்தை தேவன் பெறும்போது, அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டதாக இருக்கும். பாவம்

மட்டுமல்ல, மரணமும், இனி ஒருபோதும் காணப்படாதபடிக்கு அழிக்கப்படும். "மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. . . மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்" வெளிப்படுத்தல் 20:13-14).

### அனைவருக்கும் கொடுக்கப்பட்ட ஒரு ஈடுபலி

"நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு. . . எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார். தேவன் ஒருவரே, தேவனுக்கும் மனுஷருக்கும் மத்தியஸ்தரும் ஒருவரே. **எல்லாரையும் மீட்கும்பொருளாகத்** தம்மை ஒப்புக்கொடுத்த மனுஷனாகிய கிறிஸ்து இயேசு அவரே; இதற்குரிய சாட்சி ஏற்ற காலங்களில் விளங்கிவருகிறது" (1தீமோத்தேயு 2:3-6)

எப்படியாக, தேவன் நமக்கு இரட்சகரானார்? இயேசு இந்த முழு மனுக்குலத்தின் சார்பாக பலி செலுத்தி, உலக இரட்சகராவதற்கு தேவன் அவரை மாம்சத்தில் அனுப்பினார். ஆபிரகாம், ஈசாக்கைப் போல தேவனுடைய திட்டத்தில் இயேசு மனப்பூர்வமாகப் பலி செலுத்தக்கூடியவராக இருந்தார். ஆகவே நம்முடைய இரட்சகராக இருப்பதற்கு இருவரும் தன் தன் வேலைகளில் இணைந்து செயல்பட்டார்கள். நம்முடைய இரட்சகராக, இருவரையும் அறிக்கையிடுவதற்கு நாம் தயங்க வேண்டாம்.

இயேசு, "அனைவருக்கும் ஈடுபலியானார்" என்றால், அனைவரும் மரணமாகிய எதிராளியிடமிருந்து விடுவிக்கப்பட வேண்டுமல்லவா? ஆனால் இந்த உலகம் உயர்த்தெழுப்பப்படும் போது, அனைவரும் ஒருங்கிணைந்து காணப்படமாட்டார்கள். இவர்கள் தேவனோடு ஒப்புரவாகுவதற்கு ஒரு மத்தியஸ்தர் தேவை. தேவனுக்கும் மனுஷனுக்கும் இயேசுவே சிறந்த மத்தியஸ்தர். அவர் மனுஷனாக இருந்தவர். இப்போது தேவனைப் போல தெய்வீக சுபாவத்தில் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கிறார். அவர் இரண்டு நிலைகளிலும் வாழ்ந்தவர்.

இயேசு கிறிஸ்து தாமே - அவருடைய மனித வாழ்க்கையை - **முழு** மனுக்குலத்திற்காக ஈடுபலி செலுத்தினர். விழுந்தபோன ஆதாமுக்குப் பதிலாக, இயேசுவின் பரிபூரண மனித இயல்பு பொருத்தமானதாக இருந்தது. சுவிசேஷ யுகத்தில் இப்போது விசுவாசமுள்ள சபைக்கும் ஆயிரவருட ஆட்சியில் இந்த மீதியுள்ள முழு மனுக்குலத்திற்குச் சாட்சியாக அறிவிக்கப்படும் (ஆகவே பவுல், "அதனதன் **காலங்களில்**" என்று குறிப்பிடுகிறார்).

இந்த மனித இனத்தை இரட்சிப்பதற்கு, நான்கு முக்கியமான படிகள் இயேசுவுக்குத் தேவைப்பட்டது:

(1) ஞானஸ்நானம் (யோர்தான் நதியில்). இயேசு தம்முடைய பிதாவின் சித்தத்திற்குத் தாமே அர்ப்பணிக்க வேண்டியதாக இருந்தது. (அப்போது அவர் பரிசுத்த ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டார்).

(2) சிலுவை மரணம். அவர் தம்முடைய மாம்சத்தை இந்த உலகத்தின் ஜீவனுக்காகக் கொடுக்க வேண்டியதாக இருந்தது (யோவான் 6:51). "கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி பாவங்களினிமித்தம் ஒருதரம் மாம்சத்திலே **கொலையுண்டார்**" (1பேதுரு 3:18).

(3) உயிர்த்தெழுதல். "கிறிஸ்து **எழுந்திராவிட்டால்**, உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்" (1கொரிந்தியர் 15:17).

(4) பரமேறுதல். "கிறிஸ்துவானவர் பிரவேசியாமல், **பரலோகத்திலே** தானே இப்பொழுது நமக்காகத் தேவனுடைய சமுகத்தில் பிரத்தியட்சமாகும்படி பிரவேசித்திருக்கிறார்" (எபிரெயர் 9:24).

இயேசுவின் பலியின் (தியாக) மரணம், உயிர்த்தெழுதலுக்கு உத்தரவாதம் அளித்தது. "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவனெவனும் என்றென்றைக்கும் மரியாமலும் இருப்பான்" (யோவான் 11:25-26) என்று இயேசு சுருக்கமாகக் கூறினார்.

"கிறிஸ்துவும் அநேகருடைய பாவங்களைச் சுமந்து தீர்க்கும்படிக்கு ஒரேதரம் பலியிடப்பட்டு, தமக்காகக் காத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு இரட்சிப்பை அருளும்படி இரண்டாந்தரம் பாவமில்லாமல் தரிசனமாவார்" (எபிரெயர் 9:28). கிறிஸ்துவின் பலியின் நன்மையினால் சபையின் பாவம் தொலைக்கப்படும் காரியம், பெந்தெகொஸ்தே நாளில் நிறைவேறியது. இந்த உலகம் தங்களுடைய சார்பாக பாவங்கள் மன்னிக்கப்படுவதற்கு இன்னும் காத்திருக்கிறார்கள். இதுவே அவர்களின் உயிர்த்தெழுதலைப் பொருள்படுத்தும்.

## இயேசுவுக்கும் கிடைத்த ஒரு அநுகூலம்

இயேசு நமக்காக அவருடைய ஜீவனை ஊற்றினார், "அனைவருக்காகவும் மரணத்தை ருசிப்பார்த்தார். ஆனால் இந்தச் செயல் முறையில் பரிபூரணமானவர், குணாதிசயங்களில் மேலும் வலுவடைந்தார்.

"அவர் குமாரனாயிருந்தும் பட்டபாடு களினாலே கீழ்ப்படிதலைக் **கற்றுக ̇கொண்டு**" (எபிரெயர் 2:9, 10; 5:8). "இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், பாவத்திற்கு விலகினவருமாக" இருந்தபோதிலும், இந்தப் பரிபூரண மனுஷன் தேவனுக்குரிய கீழ்ப்படிதலும் குணாதிசயங்களிலும் இன்னும் அதிகமாகப் பலப்பட்டார்.

"ஆகிலும் நான் முழுகவேண்டிய ஒரு ஸ்நானமுண்டு, அது முடியுமளவும் எவ்வளவோ **நெருக்கப்படுகிறேன்**" (லூக்கா12:50 ) என்று இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கூறினார். யோர்தான் நதியில் மூழ்கி எழுந்தது மட்டும் ஞானஸ்நானமல்ல, மாறாக, பலமுள்ள குணாதிசயங்களில் வளர்ந்து ஒரு புது சிருஷ்டியாக முழுமைப் பெறுவதற்கு வாழ்நாள் முழுவதும் செய்திட்ட ஞானஸ்நானமாக இருந்தது. இப்படியாக, வாழ்நாள் முழுவதில் ஞான்நானத்தைக் கிறிஸ்தவர்கள் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம் (மாற்கு 10:38-39).

வார்த்தையின் (லோகோஸ்) இயல்பை தேவன் இரண்டு முறை மாற்றினார். (1) தேவனுடைய சிருஷ்டிப்பில் **ஆதியில்** அந்த வார்த்தையாக (லோகோஸ்) இருந்தார் (வெளிப்படுத்தல் 3:14; யோவான் 1:1-2; 1கொரிந்தியர் 8:6). "யேகோவா தேவனின் தூதன்" (சகரியா 3:1). தேவன் ஒரு சிற்பியாகவும், அந்த வார்த்தை (லோகோஸ்) இப்போது வல்லமையாகச் செயல்படக்கூடிய கருவியானார். மற்ற ஜீவிகளைப் பிதாவோடு கூட சிருஷ்டிக்கையில், அவர் அவர்களை நேசிக்கக் கற்றுக்கொண்டார். (2) ஆதாமுக்கு ஈடுபலியைக் கொடுப்பதற்காக (முழு மனுக்குலம்) அந்த வார்த்தை (லோகோஸ்) **மாம்சமானது** (மனிதன்) மேலும், கடுமையான சூழ்நிலையிலும், எதிர்ப்புகளின் மத்தியிலும், கீழ்ப்படிதலைக் கற்றுக்கொண்டு, பகைவர்களை நேசிக்கக்கூடிய அன்பையும் அவர் கற்றுக்கொண்டார். (3) அந்த வார்த்தை தெய்வீக சுபவாத்தில் உயிர்த்தெழுப்பப்பட்டது. ஆகவே இப்போது, "இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் **சொரூபமுமாயிருந்து**" (எபிரெயர் 1:3). தேவ திட்டத்தின் நிர்வாகத்தில், மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலை இயேசு கொடுத்தார். அதோடுகூட அவர் தேவனைப் போல தெய்வீக சுபாவத்தைப் பெறுவதற்கு அவர் வளர்ச்சியடைந்தார். மேலும் அநேக பிள்ளைகளை மகிமையில் கொண்டுவந்து சேர்ப்பதற்கும் வாய்ப்பளித்தார். பிரதான தூதனாக இருந்து, அதற்குப் பின் அவர் மனிதனாகி, அதற்குப் பின் தெய்வீக சுபாவத்தைப் பெற்றார்.


ஆண்டவராம் இயேசுவை தம்மைப் போல அழியாமையில் எழுப்புவதற்கு, தேவன் பூமிக்குரிய மனித உபத்திரவங்களைப் பயன்படுத்தி இயேசுவுக்கு இன்னும் வல்லமையான குணங்களை வளர்ச்சியடையச் செய்தார். ஆகவே, "தேவனே, உமது சிங்காசனம் என்றென்றைக்குமுள்ளது, உமது ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது" (சங்கீதம் 45:6; எபிரெயர் 1:8) என்று தாவீது கூறுகிறார்.

இதில் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பாடம்: "கிறிஸ்து இயேசுவிலிருந்த **சிந்தையே** உங்களிலும் இருக்கக்கடவது; அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். ஆதலால் தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி, இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார்" (பிலிப்பியர் 2:5-11).

வரக்கூடிய காரியங்களுக்கு ஒரு நிழல்

# கல்வாரிக்கு முன் நடந்த தற்காலிகமான உயிர்த்தெழுதல்கள்

"நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான், நான் அவனை எழுப்பப்போகிறேன் என்றார்" (யோவான் 11:11).



James Parkinson

இந்த உலகத்திற்கான ஒரு மிகப் பெரிய நம்பிக்கையை வேதாகமம் நமக்குச் சுட்டிக்காட்டுகிறது - மரித்தோரின் உயிர்த்தெழுதல். மேலும் இன்றியமையாத முக்கியமான இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை மட்டுமல்ல, அதற்கு முன் மரித்துப் போன எட்டு நபர்கள் எழுப்பப்பட்டதைப் பற்றியும் கூறுகிறது.

பழைய ஏற்பாட்டில், மரித்தேரிலிருந்து எழுப்பப்பட்ட மூன்று நபர்களும் எலியா மற்றும் அவருடைய சீஷனாகிய எலிசாவோடு சம்பந்தப் பட்டிருக்கிறார்கள். "பரலோகத்திலிருந் திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:13). ஆனால் இயேசு கிறிஸ்து மற்றும் அவருடைய விசுவாசமுள்ள சபை பிற்காலத்தில் பரலோக சுபாவத்தைப் பெற்றுக்கொள்வதை அடையாளப்படுத்தும்படி, எலியாவின் வாழ்க்கை ஒரு சூறாவளியால் துண்டிக்கப்பட்டது. அதற்குப் பின் எலியாவின் ஜீவன் முடியும் வரையில் எலிசா அவருக்குப் பணி செய்து, அதற்குப் பின் இந்தப் பூமியில் தொடர்ந்து வேலை செய்தார். அதுபோல இந்நாளிலும், விசுவாசமுள்ள சபை இந்தப் பூமியிலிருக்கும் வரையில், உதவியாளர்கள் அவர்களுக்குப் பணிபுரிவார்கள். அதற்குப் பின் எலிசா, எலியாவைப் போல இரட்டிப்பான அற்புதங்களைச் செய்தது போல, சபை நிறைவு பெற்ற பின் அவர்களுக்கு உதவி செய்தவர்கள் இரட்டிப்பான வல்லமையைப் பெற்று செயல்படுவார்கள். சபை உயிர்த்தெழுந்தபின், ஆபிரகாம், ஈசாக்கு, யோசேப்பு, மோசே, தாவீது, தானியேல் மற்றும் பலர் இந்தப் பூமியின்மேல் உயிர்த்தெழுவார்கள். அதற்குப் பின் இந்தப் பூமியின்மேல் உயிர்த்தெழும் உலக மனுக்குலம் ஏதேனில் தொலைத்த பரிபூரண நிலையைத் திரும்பப் பெற வழி நடத்துவார்கள் (எபிரெயர் 11:4-39).

இந்த உயிர்த்தெழுதல்கள் முழு மனுக்குலத்திற்கும் வாக்களிக்கப்பட்ட உயிர்த்தெழுதல் அல்ல. மாறாக, இது தற்காலிகமானது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஏனெனில், அன்று உயிர்த்தெழுந்தவர்கள் இந்நாள் வரைக்கும் ஒருவரும் உயிரோடு இல்லை.

**எலியா (யேகோவாவே தேவன்)**

சீதோனிலுள்ள கானானிய ஸ்திரீயாகிய யேசபேலை, இஸ்ரயேலின் பத்து கோத்திரத்து இராஜாவாகிய ஆகாப் திருமணம் முடித்து, பாகாலுக்கு ஒரு பலி பீடத்தையும், கோவிலையும் கட்டி, அவனுக்கு முந்தியிருந்த இராஜாக்களைக் காட்டிலும் மோசமான பாவங்களைச் செய்தான். ஆகவே எலியா செல்லும்வரைக்கும் இனி தேசத்தில் மழை பெய்யாது என்று தேவன் எலியாவின் மூலம் ஆகாபுக்குச் சொல்லி அனுப்பினார். 31/2 வருடங்கள் மழை பெய்யவில்லை (லூக்கா 4:25; யாக்கோபு 5:17). பஞ்சத்தின் போது தேவன் எலியாவைப் போஷிப்பதற்கு, யேசபேலின் தாய் வீடாகிய சீதோனிலுள்ள சாரீபாத்துக்கு ஒரு விதவையின் வீட்டிற்கு அனுப்பினார். பஞ்சகாலம் முடியும் வரை அவளுடைய பானையில் மாவும், கலசத்தில் எண்ணெயும் குறையவில்லை.

பஞ்சத்தில் சில காலம் கடந்த பின்பு, அவளுடைய மகன் வியாதிப்பட்டு, ஜீவனைவிட்டான். எலியா அந்தப் பிள்ளையைத் தன்னுடைய படுக்கையில் கிடத்தி, அவன்மேல் விழுந்து, "என் தேவனாகிய கர்த்தாவே, இந்தப் பிள்ளையின் ஆத்துமா அவனுக்குள் திரும்பிவரப்பண்ணும் என்று கர்த்தரை நோக்கி விண்ணப்பம்பண்ணினான்."எலியா கேட்டுக்கொண்ட பிரகாரமாகவே தேவன் செய்தபடியால், "அவன் பிழைத்தான்." "நீர் தேவனுடைய மனுஷன் என்றும், உம்முடைய வாயிலிருந்து பிறக்கும் கர்த்தரின் வார்த்தை உண்மை" என்றும் அந்த விதவை எலியாவிடம் கூறினபோது தேவனுடைய நோக்கம் நிறைவேறிற்று (1இராஜாக்கள் 17:17-24).

இந்தச் சம்பவம் திரும்பக் கொடுத்தலின் காலத்தின் நிழலாக இருக்கிறது. அக்காலத்தில், உயிர்த்தெழுந்த இயேசுகிறிஸ்துவும் அவருடைய விசுவாசமுள்ள சபையும், பூமியிலுள்ள மனுக் குலத்தைப் பூரண நிலைக்குச் சீர்பொருத் துவார்கள்.

**எலிசா (தேவனே இரட்சிப்பு)**

சூனேமியா ஊராளாகிய ஒரு ஸ்திரீ, எலிசாவுக்குப் போஜனம் கொடுத்துவந்தாள். அதற்குப்பின் அவளும், அவளுடைய வயது சென்ற கணவரும் எலிசாவுக்கு ஒரு அறையை மேல் வீட்டில் கட்டிக்கொடுத்தார்கள். ஆனால் அவளுக்குப் பிள்ளையில்லாமல் இருந்தது. அவளுக்குப் பன்னிரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு ஆண் குழந்தை பிறக்கும் என்று எலிசா வாக்களித்தார். அவர் சொன்னது போல அவள் ஒரு ஆண் பிள்ளையைப் பெற்றாள்.

அந்தப் பிள்ளை வளர்ந்து, அறுவடையின் போது அவனுடைய தந்தையோடு வயலுக்குச் சென்று வியாதிப்பட்டான். மத்தியானம் அவன் மரிக்கும்வரை அவனுடைய தாய் அவனைத் தன்னுடைய மடியில் வைத்திருந்தாள். அதற்குப் பின் அவள் அந்தப் பிள்ளையை எலிசாவின் படுக்கையின்மேல் கிடத்தினாள் (எலியா விதவையின் மகனை உயிர்ப்பித்த விதத்தை நினைவில்கொண்டு). அதற்குப் பின் அவள் எலிசாவை காணும்படிக்கு கர்மேல் பர்வதத்திற்குச் சென்றாள் (வடமேற்கு திசையை நோக்கி 20-30 மைல்கள்). எலிசாவின் ஊழியக்காரனால் ஒன்றும் செய்ய இயலவில்லை. ஆனால் எலிசா சீக்கீரமாய் வந்து பிள்ளையின்மேல் விழுந்து வாயோடு, வாய் வைத்து ஊதினார் (2 இராஜாக்கள் 4:17-37).

இந்தச் சம்பவமும் திரும்பக் கொடுத்தலின் காலங்களுக்கு நிழலாக இருந்தது. இதில் மாம்ச இஸ்ரயேலர்களும், மீதியுள்ள உலகத்தாரும், ஜீவனுக்குள் பூரணப்படுவார்கள். (3 லைன்)

இன்னும் ஒரு சந்தர்ப்பத்தில் எலிசா மரித்துப் போன பிறகும் ஒரு அற்புதம் நிகழ்ந்தது. மோவாபியர்கள் இஸ்ரயேலுக்கு விரோதமாகப் படை எடுத்தார்கள் (வருடத்தின் துவக்கமாகிய நீசான் மாதமாக இருக்க வேண்டும்). அப்போது ஒரு சடலத்தை அடக்கம் செய்வதற்கு கல்லறை வெட்டிக்கொண்டிருந்த போது, மோவாபிய சேனைகள் வருவதைக் கண்டு, அந்தச் சரீரத்தை எலிசாவின் கல்லறையின்மேல் போட்டுவிட்டு ஓடிப்போனார்கள். ஆனால் மரித்துப் போன அந்த மனுஷனின் சரீரம் எலிசாவின் எலும்புகளைத் தொட்ட போது அவன் உயிர்பெற்று எழுந்து நின்றான் (2 இராஜாக்கள் 13:21).

**இயேசு (யேகோவவே இரட்சிப்பு)**

கட்டளையிடப்பட்ட பண்டிகைகளில், மூன்று பண்டிகைகளை (லேவியராகமம் 23) அனுசரிப்பதற்கு இயேசு கப்பர்நகூமிலிருந்து எருசலேமுக்குச் சென்றிருக்க வேண்டும். அப்போது அவரும், அவருடைய சீஷர்களும், திரளான கூட்டங்களும் நாயீன் ஊருக்கு வந்தபோது, அங்குள்ள ஒரு விதைவையின் ஒரே மகன் மரித்துப் போனான் என்பதை இயேசு அறிந்து, அவள்மேல் மனதுருகி, பாடையைத் தொட்டார். அப்போது பாடையைச் சுமந்துச் சென்றவர்கள் நின்றார்கள். "வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார். மரித்தவன் எழுந்து உட்கார்ந்து, பேசத்தொடங்கினான். அவனை அவன் தாயினிடத்தில் ஒப்புவித்தார். எல்லாரும் பயமடைந்து: மகாதீர்க்கதரிசியானவர் நமக்குள்ளே தோன்றியிருக்கிறார் என்றும், தேவன் தமது ஜனங்களைச் சந்தித்தார் என்றும் சொல்லி, தேவனை மகிமைப்படுத்தினார்கள்" (லூக்கா 7:11-15).

அதுபோல, இயேசுவின் ஊழியத்தின் துவக்க காலத்தில், இயேசு தம்முடைய சீஷர்களோடு கலிலேயா கடலை கடந்து கப்பர்நகூமுக்கு வரும்போது, மதிப்புக்குரிய ஜெபஆலயத்தலைவன் யவீரு தன்னுடைய 12 வயதான ஒரே மகள் மரித்துக்கொண்டிருந்தாள் என்பதை இயேசுவினிடம் அறிவிக்க வந்தபோது, அவள் மரித்து விட்டாள் என்ற செய்தி, அவருக்கு வந்தது, அதைக் கேட்ட இயேசு, "பயப்படாதே; விசுவாசமுள்ளவனாயிரு, அப்பொழுது அவள் இரட்சிக்கப்படுவாள் என்றார். அவர் வீட்டில் வந்தபோது... அழாதேயுங்கள், அவள் மரித்துப்போகவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார்... அவளுடைய கையைப்பிடித்து: பிள்ளையே எழுந்திரு என்றார். அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது; உடனே அவள் எழுந்திருந்தாள்; அவளுக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார்" (லூக்கா 8:41-56).

இயேசுவின் ஊழியத்தின் கடைசி நாட்களில், மார்த்தாள் மற்றும் மரியாளின் சகோதரரான லாசருவை எழுப்பினார். லாசரு வியாதிப்பட்டிருப்பதாக இயேசு கேள்விப்பட்டபோது, லாசரு கல்லறையில் நான்கு நாட்கள் வைத்திருக்கும் வரையில் இயேசு தம்முடைய பயணத்தைத் தாமதித்தார். "கடைசி நாளில் லாசரு எழுந்திருப்பார்" என்பதை அறிந்திருப்பதாக மார்த்தாள் கூறினாள். இயேசு தேவனுக்கு நன்றி செலுத்தி, "லாசருவே வெளியே வா" என்று அழைத்தார். (இயேசுவையும், லாசருவையும் கொல்லுவதற்குப் பிரதான ஆசரியர்கள் சதித்திட்டம் போடும் அளவுக்கு இந்த ஒரு அற்புதம் பிரபலமான சாட்சியானது). ஆனால் தேவனுடைய

குமாரனாகிய இயேசுவுக்கு அவர்களாக என்ன செய்ய முடிந்தது? சில வாரங்களுக்குப் பின் இயேசு திரும்பி வந்தபோது மரியாள் ஒரு வருட கூலி மதிப்புள்ள விலையேறப்பெற்ற தைலத்தினால் இயேசுவை அபிஷேகித்தாள் (யோவான் 12:2, 5).

### பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் எழுப்பப்பட்டவர்கள்

இயேசு சிலுவையில் அறையப்பட்டு, பரம பிதாவினால் எழுப்பப்பட்டு, பரமேறிய பின், மரித்தோரிலிருந்த இரண்டு நபர்களை புவல் மற்றும் பேதுரு எழுப்பினார்கள். யோப்பா பட்டணத்தில், ஏழைகளுக்கு வஸ்திரம் கொடுத்து அனைவருக்கும் உதவி செய்துகொண்டிருந்த தபீத்தாள் என்ற ஸ்திரீ வியாதிப்பட்டு மரித்துப் போனாள். பதினைந்து மைலுக்குத் தொலைவிலிருந்த பேதுருவை அழைத்து வரும்படி அனுப்பினார்கள். பேதுரு துரிதமாக வந்து, அறையிலிருப்பவர்களை வெளியே அனுப்பிவிட்டு, தேவனை நோக்கி ஜெபித்து, "தபீத்தாளே எழுந்திரு" (இதே வார்த்தைகளையே நம்முடைய ஆண்டவராம் இயேசுவும் பயன்படுத்தினார்) அவள் எழுந்து உட்கார்ந்தாள். "அவன் அவளுக்குக் கைகொடுத்து, அவளை எழுந்திருக்கப்பண்ணி, பரிசுத்தவான்களையும் விதவைகளையும் அழைத்து, அவளை உயிருள்ளவளாக அவர்களுக்கு முன் நிறுத்தினான். இது யோப்பா பட்டணம் எங்கும் தெரியவந்தது. அப்பொழுது அநேகர் கர்த்தரிடத்தில் விசுவாசமுள்ளவர்களானார்கள்" (அப்போஸ்தலர் 9:36-42).

பவுல் துரோவா பட்டணத்தை விட்டுப் புறப்புடுவதற்கு பயணப்படுவதற்கு முன் நடுராத்திரி வரைக்கும் பேசிக்கொண்டிருந்தார். அப்போது ஐத்திகு என்ற ஒரு இளைஞன் மூன்றாவது மாடி ஜன்னலில் அமர்ந்து கொண்டிருந்தவன் தூங்கியதால், கீழே விழுந்து மரித்துபோனான் (அப்போஸ்தலர் 20:7-12).

இயேசு மட்டுமே நித்தியமாக உயிர்த்தெழுப் பப்பட்டார். மற்ற சம்பவங்களில், எழுப்பட்டவர்கள் இறுதியில், இயேசு மற்றும் அவருடைய விசுவாசமுள்ள சபையும் இணைந்து ஆயிரவருட ஆட்சியில் இந்த உலகத்தை உயிர்ப்பிப்பார்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.

### உயிர்த்தெழுப்பப்படாத இரண்டு நபர்கள்

நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரன் உயிர்த்தெழுப்பப்படவில்லை. ஏனெனில், அவன் மரித்துப்போகும் அளவுக்கு வியாதிப்பட்டிருந்தான். அவன் மரிக்கவில்லை (லூக்கா 7:2-10).

இயேசுவின் சிலுவை மரணத்தின் போது பூமி அதிர்ச்சி ஏற்பட்டு, அநேகர் காலத்திற்கு முன் யாருடைய உதவியும் இன்றி உயிரோடெழும்பினார்கள் என்று சிலர் எண்ணுகிறார்கள். "இயேசு, மறுபடியும் மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார்... பூமியும் அதிர்ந்தது, கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது, நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது" (மத்தேயு 27:50-52) என்று மத்தேயுவினால் பதிவு செய்யப்பட்ட சொல்லர்த்தமான சில காரியங்களே இதற்கு அவசியமில்லாமல் போனது.


இயேசுவின் உயிர்த்தெழுதல் மட்டுமே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மணி நேரம் கூட இயேசுவோடு விழித்திருக்காத சீஷர்கள், கல்லறையில் மறைந்து உறங்கிக்கொண்டி ருந்தார்கள். இவர்கள் பூமி அதிர்ச்சியினால் எழுந்தார்கள். இயேசு உயிர்த்தெழுந்து பரமேறிய பின், "மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேமுக்குத் திரும்பிவந்து, நாடோறும் தேவாலயத்திலே தேவனைப் புகழ்ந்து துதித்துக்கொண்டிருந்தார்கள்" (லூக்கா 24:52-53).

### நிறைவான சிந்தை

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடுகளாகிய இரண்டு ஏற்பாடுகளும், இயேசுவின் பலியினால் கிடைக்கக்கூடிய உயிர்த்தெழுதலுக்கு மாதிரிகளைத் தருகிறது. கிறிஸ்துவின் இராஜ்யத்தில் இந்த உலகத்திற்கு உயிர்த் தெழுதலின் நம்பிக்கை நாம் அறிவிக்காவிட்டால் வேறு யார் அறிவிப்பார்? தாழ்மையோடு, அன்போடு நாம் பேச துவங்கலாம்.

மிக முக்கியமான உயிர்த்தெழுதல்

# இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்



"கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும்; நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்"(1 கொரிந்தியர் 15:17).

Larry McClellan

ஆண்டவரின் சரீரத்திற்குச் சுகந்தவர்க் கமிடுவதற்கு மகதலேனா மரியாளும், யாக்கோபின் தாயாகிய மரியாளும் வாரத்தின் முதல் நாள் அதிகாலையில் ஆண்டவரின் கல்லறைக்குச் சென்றார்கள். கல்வாரிச்சிலுவையின் அருகில் ஆண்டவருடைய இறுதி நிமிடங்கள் வரைக்கும் அவரோடிருந்த இந்த இரண்டு ஸ்திரீகள் - "அவர் உயிர்த்தெழுந்தார்" என்ற வார்த்தைகளை இயேசுவின் கல்லறையை மூடிக்கொண்டிருந்த கல்லைப்புரட்டி, அதின்மேல் அமர்ந்திருந்த ஒரு பிரகாசமுள்ள தூதனிடமிருந்துக் கேட்பதற்கு முதலானவர்களாக இருந்தார்கள்.

ஆண்டவராகிய இயேசுவின்மேல் அவர்கள் கொண்டிருந்த அன்பு நிறைந்த பக்திக்குப் பரிசாக அந்தக் கல் அற்புதமாக அகற்றப்பட்டிருந்தது. அவர்களை மேற்கொண்டிருந்த பயத்தை உதறிவிட்டு கல்லறைக்குள் நுழைந்தார்கள். ஆண்டவரின் உயிர்த்தெழுதலைக்குறித்து அந்தத் தூதன் சொல்லியருந்ததை அவர்கள் மீண்டும் உறுதிப்படுத்திக்கொண்டனர். அவர்கள் கொண்டிருந்த மகிழ்ச்சி அவர்களின் இருதயத்தின் பாரங்களை வெளியேற்றியது. அவர்கள் உச்சக்கட்ட மகிழ்ச்சியடைந்து, "இயேசு மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார்" என்ற இந்த ஒரு முக்கியமான சம்பவத்தை அப்போஸ்தலர்களுக்கு அறிவிக்கும்படி ஓடினார்கள். இயேசுவின் உயிர்த்தெழுதலைக்குறித்த போதனை - கிறிஸ்து விசுவாசத்திற்கு அஸ்திபாரமான ஆதாரமாகும். இந்தத் தவிர்க்க இயலாத உபதேசம் உண்மையாக இராவிட்டால், மற்ற அநேக கிறிஸ்தவ உபதேசங்கள் இடறியிருக்கும் என்பதே அடிப்படையானது. மரித்தோரிலிருந்து இயேசு உயிர்தெழும் வரையில் நிகழ் வாழ்க்கைக்குப் பின் எந்த ஒரு மனுஷனுக்கும் **நம்பிக்கை இல்லாமல்** இருந்திருக்கக்கூடும். ஆனால் இயேசு மரணத்திலிருந்து உண்மையில் உயிர்த்தெழுந்தார் என்ற நிச்சயத்தில் நம்முடைய ஜீவனுள்ள நம்பிக்கை உறுதிப்பட்டிருக்கிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக; அவர், இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே... **ஜீவனுள்ள நம்பிக்கை** உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (1பேதுரு 1:3).

இயேசுவின் ஈடுபலியை அடிப்படையாகக் கொண்டிருக்கும், மரித்தோரின் உயிர்த்தெழுதலைக் குறித்த நம்முடைய கிறிஸ்துவ நம்பிக்கை அடிப்படையான உபதேசங்கள், இயசேுவின் உயிர்த்தெழுதலைவிட்டுப்பிரிக்க இயலாது என்பதை 1கொரிந்தியர் 15:12-22 வசனங்கள் மிகத் தெளிவாகக் காட்டுகிறது. (தயவு செய்து வசனங்களை வாசிக்கவும்)

கிறிஸ்து மரித்தேரிலிருந்து எழுந்திருக் காவிட்டால் ஒருவரும் உயிர்த்தெழுந்திருக்க வாய்ப்பில்லை என்று பவுல் வலியுறுத்துகிறார். அதற்கு மாறாக, கிறிஸ்து மரித்தேரிலிருந்து எழுந்ததினால், மரித்த அனைவருக்கும் உயிர்த்தெழுதல் உண்டு. கிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், அப்போஸ்தலர்களின் பிரசங்கமும் நம்முடைய விசுவாசமும் வீணாயிருக்குமே. நம்முடைய விசுவாசம் வீணாக இருந்தால், நாம் இன்னும் பாவத்தில் நிலைக்கொண்டிருப்போம் மற்றும் இது வரையில் மரித்தவர்கள், நித்தியமாக அழிந்திருப்பார்களே. இந்த வாழ்க்கையில் மட்டுமே நாம் கிறிஸ்துவுக்குள் நம்பிக்கைக் கொண்டவர்களாக இருந்தால், அனைத்து மனுஷரைப் பார்க்கிலும் நாம் பரிதபிக்கப்பட்டவர்களாக இருப்போம். இப்போது கிறிஸ்து மரித்தேரிலிருந்து எழுந்த **முதற்பல**

**னானார்**. "மனுஷனால் மரணம் உண்டான படியால், மனுஷனால் மரித்தோரின் உயிர்த்தெழுதலும் உண்டாயிற்று. ஆதாமுக்குள் **எல்லாரும் மரிக்கிறது** போல, கிறிஸ்துவுக்குள் **எல்லாரும்** உயிர்ப்பிக்கப்படுவார்கள்" (1கொரிந்தியர் 15:21-22).

மரித்தோர் எழுப்பப்படுவார்கள் என்ற **நம்பிக்கை** நாம் பெற்றிருப்பதினால் நாம் தேவனையும், நம்முடைய இயேசுவையும் புகழுவோம். ஏனெனில், இயேசு கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்தார் என்பதை முழுமையாக விசுவாசிக்கக்கூடிய **நம்பிக்கை** நமக்குண்டு.

நாம் வேதாகமத்திலுள்ள சாட்சிகளை முழுமையாக நம்புவதினால், நம்முடைய விசுவாசத்திற்கு ஒரு ஆதாரமுண்டு - அந்த ஆதாரம் நம்முடைய நம்பிக்கையே - நாம் கண்களினால் காணாமலிருந்தும், விசுவாசக் கண்களினால் கண்டு, மனதளவில் புரிந்துகொண்டு - நாம் வேதாகமத்தில் வாசிக்கக்கூடிய சகலமும் யேகோவா ஒருவர் இருக்கிறார் என்றும் அவரே அதற்கு ஆசிரியர் என்றும் அவருடைய ஞானம், நீதி மற்றும் அன்புக்கும் ஆதாரமாக நிரூபிக்கக்கூடிய பரிபூரண உணர்வை ஏற்படுத்துகிறது (யோவான் 3:16).

### இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கான சாட்சி

ஈடுபலி என்ற அடிப்படையானப் போதனையிலிருந்து, தீமையை அனுமதித்தல் மற்றும் இயேசுவின் பலியினால் பெறப்பட்ட உயிர்த்தெழுதலின் ஆசீர்வாதங்கள் வரையிலும், நம்முடைய நம்பிக்கை நம்முடைய விசுவாசத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. மேலும் வசனங்களின் பதிவுகளே, இதற்கான நியாயமான ஆதாரங்கள் - இயேசுவின் உயிர்த்தெழுதலை உறுதியாகக்கொண்டிருக்கும் முத்திரை. கூடுதலாக, பெந்தெகொஸ்தே நாளின் போது நடந்த காரியமானது, இயேசு உயிர்த்தெழுந்தார் என்ற உண்மையையும் இயேசுவின் பலி தெய்வீகமாக அங்கீகரிக்கப்பட்டதையும் உறுதிப்படுத்துகிறது. ஆதிகால கிறிஸ்துவர்கள் சுவிசேஷத்தை மேலும் பரப்புவதற்கு, மேல் வீட்டு அறையில் கூடியிருந்த ஜனங்களுக்குப் பிரிந்திருக்கும் நெருப்பு நாவுகளையும், பலத்த காற்று, பல பாஷைகளைப் பேசுவதற்கான அற்புதமான வல்லமையும் கொடுக்கப்பட்டதற்கான சாட்சிகள் ஆகும் (அப்போஸ்தலர் 2:1-6).

மேலும், இயேசு மரித்தோரிலிருந்து எழுந்ததற்குப் பதினோரு அப்போஸ்தலர்களின் சாட்சிகளையும் பெற்றிருக்கிறோம் - இறுதியாக, தமஸ்குவுக்குச் செல்லும் வழியில், **ஆவியில்** மகிமையடைந்த இயேசுவின் நிலைக்கு அப்போஸ்தலனாகிய பவுல் சாட்சி கொடுத்தார் (அப்போஸ்தலர் 9:3-5). இந்த ஒருமுறை மட்டுமல்ல, பத்து அல்லது பதினோரு முறைகள் இயேசு, உயிர்த்தெழுதலுக்குச் சாட்சியாக அவர் அப்போஸ்தலர்களுக்குக் காட்சியளித்தார்! இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் தீர்ப்பைக்குறித்து பன்னிரண்டு பேர்கொண்ட இந்த ஆய்வு குழு, முழு திருப்தி அடைந்ததினிமித்தம் அவர்கள் மரிக்கும் வரையில், பட்டப்பாடுகளை நீடிய பொறுமையோடு சகித்து, சாட்சியாக வெளிப்படுத்தினார்கள். (**ஆவிக்குரிய** மகிமை என்று கூறுகிறோம். இயேசு மனுஷ சரீரத்தில் எழுப்பப்படாமல் ஆவிக்குரிய மகிமையின் சரீரத்தில் எழுப்பப்பட்டார். அவருடைய பரிபூரணமான மாம்சீக ஜீவன் கடன்பட்ட ஆதாமுக்காக முழுமையான ஈடுபலியாகச் செலுத்தப்பட்டது ) (1தீமோத்தேயு 2:5-6; 1கொரிந்தியர் 15:21-22).

அப்போஸ்தலர்களுக்குப் பின் ஏற்படுத்தப்பட்ட விசுவாச அறிக்கையின் படி, அப்போஸ்தலர் 17:31-ஆம் வசனம் தவறாகப் புரிந்துகொண்டதினிமித்தம், இயேசு மற்றும் பரிசுத்தவான்களும் மாம்ச சரீரத்தில் உயிர்த்தெழுந்தார்கள் என்று போதிக்கப்படுகிறது. "மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்; அதிலே அவர் தாம் நியமித்த மனுஷனைக்கொண்டு, பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லாருக்கும் விளங்கப்பண்ணினார். "

ஆயினும், அதற்கான விளக்கத்தை 2 கொரிந்தியர் 5:16-ஆம் வசனம் தருகிறது. "ஆகையால், இதுமுதற்கொண்டு, நாங்கள்

ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம்; நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி **ஒருபோதும்** அவரை **மாம்சத்தின்** படி அறியோம்." இனி ஒருவரும் கிறிஸ்துவை மாம்சத்தில் காணமுடியாது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், அவர் ஒரு ஆவிக்குரிய ஜீவியாக எழுப்பப்பட்டார். அதுபோல நாமும் இப்பொழுது பெற்றிருக்கும் மாம்ச சரீரத்தில் அல்ல, **ஆவிக்குரிய** ஜீவியாக எழுப்பப்படுவோம். "மாம்சமும் இரத்தமும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிக்கமாட்டாது" (1கொரிந்தியர் 15:50). "ஆதலால் அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால், **அவர்** உயிர்த்தெழுதலின் சாயலிலும் இணைக்கப பட்டிருப்போம்" (ரோமர் 6:5).

கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசமாக இருக்கும் விசுவாசிகள் மற்றும் நீதிமானாக்கப்பட்ட அனைவரின் தெய்வீக தேவைகளை, தேவன் பூர்த்தி செய்வார் என்பதை, இயேசுவின் உயிர்த்தெழுதல் உறுதிப்படுத்துகிறது (ரோமர் 3:26). தெய்வீக பிரமாணத்தின்படி கடன்பட்ட ஒரு பரிபூரண வாழ்க்கையை மீட்பதற்கு ஒரு சமமான பரிபூரண வாழ்க்கை அவசியமாகத் தேவைப்படுகிறது. கண்ணுக்கு கண், வாழ்க்கைக்கு வாழ்க்கை. ஒரு பரிபூரண மனுஷன், கீழ்ப்படியாமையினால், முழு மனித இனத்தையும் மரணதீர்ப்புக்குள் நடத்தினார். ஒரு பரிபூரண மனுஷனால் மட்டுமே, ஒரு பரிபூரண ஜீவனைக் கொடுத்து விழுந்துபோன அந்தப் பரிபூரண மனுஷனையும், அவன் இனத்தையும் மீட்க முடியும்.

"அன்றியும் ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக் கப்பட்டதுபோல, ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (ரோர் 5:19). (அநேகர் என்பது அனைவரையும், அனைவர் என்பது அநேகரையும் குறிக்கும். இந்த உலகத்தில் **அநேகர்** வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். **அனைவரும்** மரண நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள் யோவான் 5:28-29). **முழு** மனுக்குலமும் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டு, ஆதாம் இழந்த உண்மையான பரிபூரண நிலையை மறுபடியும் பெற்றுக்கொள்ள வாய்ப்புப்பெறுவார்கள் என்று வேதாகமம் கூறுகிறது (அப்போஸ்தலர் 17:31; ரோமர் 3:26).

ஒருவர் மரணத்திலிருந்து எழுப்பப்படலாம், தொடர்ந்து மரண நிலையில் வாழ்ந்து மீண்டும் மரித்துவிடலாம். எடுத்துக்காட்டாக - லாசரு, நாயின் ஊர் விதவையின் மகன், தொறகாள் மற்றும் சூனேமியாளின் மகன். ஆனால் இவர்களின் உயிர்த்தெழுதலுக்கு, இயேசுவின் இரத்தம் எவ்விதமான பங்கும் அளிக்கவில்லை.

உயிர்த்தெழுதலுக்கான கிரேக்க வார்த்தையின் தெய்வீக கண்ணோட்டத்தை நாம் பார்க்கும் போது - எழுந்து நில் - என்று பொருள் கூறப்படுகிறது. (கிரேக்க - அனாஸ்டாசிஸ் - மீண்டும் ஜீவனோடு எழுந்திருப்பது. ஆதியில் ஆதாம் பெற்றிருந்தது போல முழுமையான ஜீவன்) வெளிப்படுத்தல் 20-ஆம் அதிகாரத்தில் காணப்படுகிறபடி ஆயிரவருட ஆட்சியில் மரணத்திலிருந்து இந்த முழு மனுக்குலம் உயிர்த்தெழுப்பப்பட்டு, உண்மையான பரிபூரணத்தை நோக்கிச் செல்வர்.

தெய்வீகமான பார்வையில் அனைவரும் மரித்திருக்கிறார்கள் என்று இயேசு நமக்குக் கற்பித்திருக்கிறார். "மரித்தோர் தங்கள் மரித்தோரை அடக்கம்பண்ணட்டும்" (மத்தேயு 8:22). மனுஷர் முழுமையான உயிர்த்தெழுதலை பெருமளவுக்கு உண்மையான ஜீவனைப் பெறவில்லை. (மனித பூரண நிலையாகிய முழுமையான திரும்பக்கொடுத்தல் - "உயிர்த்தெழுதல் மற்றும் சீர்பொருந்துதல் என்று விவரிக்கலாம்). ஆயினும், இயேசு பரிபூரண ஆவிக்குரிய இயல்பில் எழுப்பப்பட்டார். ஆகவே அவர் முழுமையான உயிர்த்தெழுதலைப் பெற்று, பரிபூண ஜீவனை அடைந்தார். அதுபோல 144000 பேராகிய சிறுமந்தையும் பரிபூரண ஆவிக்குரிய இயல்பில் எழுப்பப்படுவார்கள் என்று வேதாகமம் வாக்களித்திருக்கிறது (ரோமர் 6:4; 1யோவான் 3:2; வெளிப்படுத்தல் 14:1). இயேசுவுக்கு முன் பல

தனிப்பட்ட நபர்கள் மரணத்திலிருந்து எழுப்பப்பட்டாலும், மரணத்திலிருந்து முழுமையாக ஜீவனைப் பெறுவதற்கு இயேசுவே முதலானவர்.

**கிறிஸ்துவே முதற்பலன்**

"கிறிஸ்துவோ மரித்தோரிலிருந்தெழுந்து, நித்திரையடைந்தவர்களில் **முதற்பலனானார்**" என்று 1கொரிந்தியர் 15:20-ஆம் வசனம் கூறுகிறது. உயிர்த்தெழுதலைக்குறித்து நாம் நியாயமாக விவாதிக்கலாம். மரித்தோலிருந்து கிறிஸ்துவே **முதற்பலனாக** எழுந்தார் என்று நாம் கூறும்போது, அவருக்கு முன் மரித்தவர்களைக்குறித்து நாம் என்ன சொல்லுவோம்? உங்களுக்கு முன் மற்றவர்கள் சென்றிருந்தால், நீங்கள் முதன்மையாக இருக்க முடியாது. தானியேல், தாவீது இராஜா மற்றும் ஆபிரகாம் பரலோகத்தில் இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறது (யோவான் 3:13). சிலர் கிறிஸ்து வரவில்லை என்று நம்புகிறார்கள். ஆனால் சிலருடைய அடக்கத்தின் போது மரித்தவர்கள் பரலோக பரிசைப் பெற்று விட்டார்கள் என்று கூறுகிறார்கள். ஆனால், "கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள்" முதலாவது எழுந்திருப்பார்கள்' (1தெசலோனிக்கேயர் 4:16) என்று பவுல் கூறுகிறார். இந்த மரித்தோர் முதலில் எழுந்திருந்தால், நிச்சயமாக இவர்களுக்கு முந்தி, யாரும் உயிர்த்தெழுந்திருக்க முடியாது. கிறிஸ்து வருவதற்கு முன் அனைவரும் மரண நிலையில், நித்திரை செய்துகொண்டிருந்தார்கள் -ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்டவர்களும் கூட நித்திரையிலிருந்தனர் (1தெசலோனிக்கேயர் 4:13-16 வசனங்களை வாசிக்கவும்).


மரித்தோரிலிருந்து இயேசுவை தேவன் உயிர்த்தெழுப்பும் போது, மரணத்திலிருந்து எழும்பினவர்களில் இயேசுவே **முதற்பலனானார்**. "அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார்" (ரோமர் 8:11, 23).

நம்முடைய கோணத்தில் இயேசுவின் உயிர்த்தெழுதல் எதைப் பொருள்படுத்தும்? பாராட்டத்தக்க இயேசுவின் பலியும், பரமேறுதலும் என்பதற்கு நித்தியமாக நாம் மரணத்திலிருந்து தப்பித்துக்கொள்வது மட்டுமல்ல, அதோடுகூட எந்த மனுஷனுக்கும் இனி ஒருபோதும் கொடுக்கப்படாத மாபெரும் அழைப்பிதழ் என்ற பொருள் என்பதை எண்ணி நாம் மகிழ்ந்து உற்சாக உணர்வைப் பெறுகிறோமா?

இக்கால யுகத்தில், தேவனுடைய அழைப்பானது, மிக உயர்வான தெய்வீக நிலையில் ஜீவிப்பதற்கு வாய்ப்பளிக்கிறது (பாவமற்ற, அழியா, தெய்வீக நிலை). இந்த உலகம் மாம்சம் மற்றும் பிசாசை வெற்றிகரமாக ஜெயித்தால், நாம் அழியாதவர்களாக எழுப்பப்பட்டு, இந்தப் பூமியிலுள்ள **முழு** குடும்பங்களையும் ஆசீர்வதிக்கப்படுவதற்குத் தெய்வீக குடும்பத்தின் உறுப்பினராக மாறி, இந்த அண்டசராசரம் முழுவதும், நித்தியத்திற்கும் தேவனுடைய நாமத்தை மகிமைப்படுத்துவோம். ஆஹா, நம்முடைய ஆண்டவர், மரணத்திலிருந்து எழும்பினார் என்ற செய்தியை எவ்வளவு ஆழமாக நம்முடைய இருதயங்கள் புரிந்துகொண்டதினால் நாம் களிகூர்ந்து இந்தப் பூமியின் முழு குடும்பங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய ஆபிரகாமின் சந்ததியாக இருப்பதற்கு நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் மகிழ்ச்சியை எண்ணி தேவனைப் புகழ்ந்து போற்றலாம் (1பேதுரு 1:4; 2 பேதுரு 1:4; 1கொரிந்தியர் 15:53; கலாத்தியர் 3:29; 1பேதுரு 1:3 மற்றும் எபிரெயர்; 12:2).

இயேசுவால் பெற்றுக்கொள்ளப்பட்டது

# விசுவாசமுள்ள சபையின் உயிர்த்தெழுதல்



David Rice

"நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவான் 14:3).

இயேசுவின் வருகையில், பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுந்து, தங்களுடைய பரலோக பரிசைப் பெற்றுக்கொள்வார்கள் என்று தலைப்பு வசனங்கள் நமக்குக் குறிப்பிடுகிறது. நீண்ட காலத்திற்கு முன் மரித்த பரிசுத்தவான்கள் யுகத்தின் முடிவு வரைக்கும், நித்திரையில் இளைப்பாறிக்கொண்டு, அவர்களின் பரலோக பரிசை எதிர்பார்த்து சமாதானத்தோடு காத்திருந்தார்கள். இப்படியாக, முதல் இரத்த சாட்சியாகிய ஸ்தேவான் கல்லெறியப்பட்டு, கொலை செய்யப்பட்டபோது, "இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" என்று அப்போஸ்தலர் 7:60-ஆம் வசனம் கூறுகிறது. கிறிஸ்து வரும்வரையில், அதாவது பரிசுத்தவான்கள் உயிர்த்தெழும் வரையில் அந்தக் கால பகுதியை அறியாதவராக அவர் இளைபாறிக்கொண்டிருந்தார்.

சந்தேகத்திற்கு இடமின்றி ஸ்தேவானுடைய மரணத்தைக் கண்ட அப்போஸ்தலராகிய பவுல்தாமே, ஸ்தேவானைப் பற்றிய தெளிவான சாட்சிகளை, லூக்காவிடம் அறிவித்திருக்க வேண்டும். அதை லூக்கா ஆறாம் மற்றும் ஏழாம் அதிகாரத்தில் தெளிவாகக் கூறுகிறார். அந்நாளில், கிறிஸ்துவுடன் கூட எழுந்திருப்பதற்காக, பவுல் தம்முடைய வாழ்க்கையின் முடிவில், அவரும் நீண்ட காலம் காத்திருக்க வேண்டும் என்பதை ஒத்துக்கொண்டார். "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன்; நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாக கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்" (2 தீமோத்தேயு 4:6-8).

யுகத்தின் முடிவில் பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவார்கள் என்று தானியேல் 12:1-3-ஆம் வசனங்களில் குறிப்பிடப்படுகிறது. "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்... பூமியின் தூளிலே நித்திரைபண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்தியஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும் இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள். ஞானவான்கள் ஆகாயமண்டலத்தின் ஒளியைப்போலவும், அநேகரை நீதிக்குட்படுத்துகிறவர்கள் நட்சத்திரங்களைப்போலவும் என்றென்றைக்குமுள்ள சதாகாலங்களிலும் பிரகாசிப்பார்கள்." மாம்சத்தில் இயேசு வருதற்கு முன் அவர் "மிகாயேல்" என்ற பெயரைப் பெற்றிருந்தார் என்று அநேக சகோதரர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இப்படியாக, இயேசுவின் வருகையில் பரிசுத்தவான்களுக்குப் பரிசளிக்கப்படும் என்று இந்த வேதப் பகுதிகள் குறிப்பிடுகிறது.

இந்தப் புரிந்துகொள்ளுதல் மத்தேயு 16:24-27-ஆம் வசனங்களில் இயேசு பேசின வார்த்தைகள் உறுதிப்படுத்துகிறதாகத் தோன்றுகிறது. இங்கு சீஷர்கள் தங்களுடைய விசுவாசத்திற்கும் ஊழியத்திற்கும் பரிசைப் பெறக்கூடிய காலத்தைக்குறித்துப் பேசுகிறார் - "ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்... மனுஷகுமாரன் தம்முடைய பிதாவின் மகிமைபொருந்தினவராய்த் தம்முடைய தூதரோடுங்கூட வருவார்; அப்பொழுது, அவனவன் கிரியைக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலனளிப்பார்."

1874 - ஆம் வருடம் இயேசு திரும்ப வந்துவிட்டார் என்று சகோதரர்கள் மத்தியில் பிரபலமான ஒரு கருத்துண்டு. இந்தக் கருத்துக்கு ஆதாரமாக, கால தீர்க்கதரிசனத்தைக் குறிப்பிடும் - தானியேல் 12:12-ஆம் வசனத்திலிருந்து எடுக்கப்படுகிறது. "ஆயிரத்து முந்நூற்று முப்பத்தைந்து நாள்மட்டும் காத்திருந்து சேருகிறவன் பாக்கியவான்."

"ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்" மற்றும் "காத்திருப்பவர்கள்" ஆகிய இரண்டு வார்த்தைகளையும் லூக்கா 12:36-38 ஆம்

வசனங்களில் காணலாம். காத்துக்கொண்டிருக்கும் சீஷர்களுக்கு, கிறிஸ்துவின் வருகையைக்குறித்து இந்த வசனம் பேசுகிறது. 11-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டிருக்கும் 1290 -ஆம் வருடம், "பாழாக்கும் அருவருப்பு" அரசியல் அதிகாரத்தோடு ஸ்தாபிக்கப்பட்ட கிபி 539-ஆம் வருடம் துவங்கினது போல இந்தத் தீர்க்கதரிசனமும் அதே வருடத்தில் துவங்க வேண்டும்.

இப்படியாக, இந்தத் தீர்க்கதரிசனம் கிறிஸ்துவின் வருகையின் தேதியை (1874) நமக்குக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது. அவருடைய வருகை சுவிசேஷ யுகத்தின் முடிவு காலம் அல்லது அறுவடை காலத்தை அறிமுகப்படுத்தியது. (மத்தேயு 13:39 - யுகத்தின் முடிவு என்பதே சரியான மொழிபெயர்ப்பு) (aionos என்ற வார்த்தை "உலகம்" என்று மொழிபெயர்க்கப்படலாம், suntelia என்ற கிரேக்க வார்த்தை "முடிவு" என்ற வார்த்தையாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த வார்த்தை ஒரு முடிவைப் பற்றிக் குறிப்பிடாமல், இனி வரக்கூடிய சம்பவங்களின் உச்சக்கட்டத்தைக் குறிப்பிடு கிறதாக உள்ளது என்று Vine's Expository அகராதி கூறுகிறது.)

இப்படியாக நாம் 140 வருடங்கள் அறுவடையின் காலத்தில் வாழ்ந்துக் கொண்டிருக்கிறோம். இந்த காலப் பகுதியில் கிறிஸ்துவின் வளர்ச்சியை முழுமையாக அடைந்த தனி நபர்கள், மரிக்கும்போதே, மகிமையில் உயிர்ப்பிக்கப்பட்டு, பரிசுத்தவான்களாக கிறிஸ்துவோடு கூட்டிச் சேர்க்கப்படுகிறார்கள்.

### சூரியனோடு - ஒரே விதமான அனுபவம்

பரிசுத்தவான்கள் ஆவிக்குரிய உயர்ந்த நிலையில் உயிர்ப்பிக்கப்படுவதினால் - மனித கண்களுக்குப் புலப்படாதவர்களாக இருக்கிறார்கள். ஆகவே இவர்கள் அனைவரும் உயிர்த்தெழுந்ததற்கு - காணக்கூடிய எந்த ஆதாரமும் நமக்கு இல்லை. அதுபோல, (1) இயேசு ரூபம் எடுத்து, தான் உயிரோடிருப்பதைச் சீஷர்களுக்கு வெளிப்படுத்தாவிட்டால் மற்றும் (2) மரித்துப்போன மாம்ச சரீரத்தை தேவன் கல்லறையிலிருந்து அகற்றாவிட்டாலும் இயேசுவின் உயிர்த்தெழுதலும் இப்படியாகவே நடந்திருக்க வேண்டும். அதவாது இயேசுவின் உயிர்த்தெழுதலையும் ஒருவரும் கண்டிருக்கமாட்டார்கள்.

ஆகவே, இதுவரையிலும் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு நாம் காணக்கூடிய ஆதாரங்களைத் தேடாமல், வசனங்களில் சொல்லப்பட்ட குறிப்பான சாட்சிகளைத் தேடுகிறோம். சகோதரர்களின் உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிப்பட்ட சாட்சியை அப்போஸ்தலனாகிய பவுல், தெசலோனிக்கேயருக்கு எழுதின முதல் நிருபத்தில் 4-ஆம் அதிகாரம் 13-ஆம் வசனத்தில் பேசுகிறார். அவருடைய நாட்களில் கிறிஸ்துவுக் குள்ளாக ஒரு குறுகிய காலம் வாழ்ந்து மரித்துப்போன பரிசுத்தவான்களுக்கு இந்தப் பகுதியை ஆறுதலாகக் கூறுகிறார்.

"அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந் தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்." (இயேசுவின் வருகையின் போது பரிசுத்தவான்கள் அவரோடு கூட வருவார்கள் என்று இந்த வசனப்பகுதி பொருள்படுத்துவதில்லை. ஏனெனில், பரிசுத்தவான்கள் அவருடைய வருகைக்குப் பின் உயிர்த்தெழுப்பப்படுவார்கள். அதற்கு முன் அல்ல. மேலும், தேவன் நம்மை இயேசுவோடு, அதே உயிர்த்தெழுதலின் அனுபவத்திலே, நம்மை எழுப்புவார் என்று பொருள் படுகிறது).

தேவன் இயேசுவை எழுப்பினது போல, ஒவ்வொரு பரிசுத்தவான்களையும் தேவன் எழுப்புவார் என்று "அவரோடுக்கூட தேவன் எழுப்புவார்" என்பதே இந்த வசனத்திற்குப் பொருள் என்று பவுல் கூறுகிறார். "with" என்ற ஆங்கில வார்த்தைக்கு "சன்" என்ற கிரேக்க வார்த்தைப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இந்தக் காரியத்தில், காலங்கள் வேறுபட்டாலும் அனுபவங்கள் பங்கிட்டுக்கொள்ளப்படுகிறது என்று குறிப்பிடுகிறது. இதே வார்த்தையை பவுல் 2 கொரிந்தியர் 4:14-ஆம் வசனத்திலும் பயன்படுத்திகிறார். அதே பாடத்தைக்குறித்துப் பேசும்போது, வெளிப்படையாகச் சொல்லப்படவில்லை. ஆகவே நாம் New World Translation என்ற மொழிபெயர்ப்பைப் பார்க்கும்போது - "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக்கொண்டு எழுப்பி, உங்களுடனேகூடத் தமக்குமுன்பாக நிறுத்துவாரென்று அறிந்திருக்கிறோம்." இயேசுவின் உயிர்த்தெழுதலுக்கும், பரிசுத்தவான்களின் உயிர்த்தெழுதலுக்கும் இடையில் சுமார் 1800 வருடங்கள் உள்ளது. ஆனால் பரிசுத்தவான்கள், இயேசு பெற்ற அதே அனுபவங்களைப் பெற்று உயிர்த்தெழுவார்கள்.

"சன்" என்ற அதே வார்த்தையை பவுல் மீண்டும் கொலோசெயர் 2:12-13-ஆம் வசனத்தில் பயன்படுத்துகிறார். இந்த வசனங்களிலும், வெவ்வேறு

காலத்தில் பெற்ற ஒரே விதமான அனுபவத்தைக்குறித்தும் பேசுகிறார். இயேசு உயிர்த்தெழுந்து ஜீவன் பெறுவதை, நம்முடைய இக்கால கிறிஸ்துவ வாழ்க்கையில் ஆவிக்குரிய புது சிருஷ்டிகளாக ஜீவனைப் பெறுவதற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். இந்த விஷயத்தில் பவுல், "ஞானஸ்நானத்தில் அவரோடேகூட அடக்கம்பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடேகூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள். உங்கள் பாவங்களினாலேயும், உங்கள் மாம்ச விருத்தசேதனமில்லாமையினாலேயும் மரித்தவர்களாயிருந்த உங்களையும் அவரோடே உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் உங்களுக்கு மன்னித்து..." இயேசு உயிர்த்தெழுந்த அதே நேரத்தில் நாம் உயிர்த்தெழுப்பப்படப் போவதில்லை. ஆனால், நாம் கிறிஸ்துவுக்குள் வந்து, கிறிஸ்தவர்களாக புது ஜீவனைப் பெறக்கூடிய உணர்வுகளை அடையும்போது, அவரோடு அதே அனுபவங்களைப் பெற்றுக்கொள்கிறோம்.

**உயிரோடு மீதியிருப்பவர்கள்**

1தெசலோனிக்கேயர் 4:15-17 வரையுள்ள வசனங்களில் அவருடைய குறிப்பைத் தொடர்ந்து பேசுகிறார். அவர் 14-ஆம் வசனத்தை விவரிக்கும் வகையில், "கிறிஸ்துவோடு எழுப்பப்படுவோம்." (அதே அனுபவத்தோடு பல நூற்றாண்டுகளுக்கு பின்) "கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரை யடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை" (வசனம் 15) என்று குறிப்பிடுகிறார். மரித்துப்போன, கிறிஸ்துவுக்குள் இருக்கும் நம்முடைய சகோதர சகோதரிகள், உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களுக்கு முன்னதாகவே பரிசைப் பெற்றுக்கொள்வார்கள். "ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் **முதலாவது** எழுந்திருப்பார்கள்" (வசனம் 16).

இப்படியாக, பரிசுத்தவான்கள் ஒரு வரிசையில் உயிர்த்தெழுவார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன் மரித்தவர்கள் அவருடைய வருகையில் முதலாவது உயிர்ப்பிக்கப்படுவார்கள். இவர்களே உயர்த்தெழுதலில் முதலானவர்கள். கிறிஸ்துவின் பிரசன்னத்தில் "உயிரோடு மீதியிருப்பவர்கள்" தங்களுடைய பலிகளை முழுமையாக செலுத்தின பின் "மாம்சமாகிய திரைக்கு அப்பால்" முந்தி உயிர்த்தெழுந்தவர்களோடு ஆவிக்குரிய மகிமையில் இணைவார்கள்.

"பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்" (வசனம் 17). இந்த வசனத்தில், "அதற்குப் பின்" என்ற வார்த்தையை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

ஆகவே நித்திரையில் இருக்கும் பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் வருகையில் முதலில் மகிமையில் எழுப்பப்படுவார்கள். உயிருள்ள மீதியுள்ள பரிசுத்தவான்கள் அப்படிப்பட்ட அனுபவத்தைப் பெற்று அதற்குப் பின் உயித்தெழுப்படுவார்கள். இவர்கள் கிறிஸ்துவ பயிற்சியில் தங்களுடைய பணிகளும், பலிகளும் நிறைவடையும் வரையில், தொடர்ந்து மாம்சத்திலிருப்பார்கள். அதற்குப் பின், மற்ற பரிசுத்தவான்களைப் போல அவர்கள் மாம்சத்தில் மரித்து, ஆவியில் உயிர்ப்பிக்கப்பட்டு, அவர்களுக்கு முன் கூட்டிச் சேர்க்கப்பட்ட பரிசுத்தவான்களோடு இணைவார்கள். "இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்தியரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்" (1கொரிந்தியர் 15:51-52). அனைத்து பரிசுத்தவான்களும் மகிமையில் எழுப்பப்படுவதற்கு முதலில் மரிக்க வேண்டும் என்று இங்கு வலியுறுத்தப்படுகிறது. மேலும் சில பரிசுத்தவான்கள் ஒரு நொடியில் மாற்றப்படுவார்கள் என்று இந்த வாக்கியத்தில் காட்டப்படுகிறது. மற்றவர்களைப் போல் அல்ல, அவர்கள் மரித்தவுடன் மாற்றம் அடைவார்கள். ஆகவே இயேசு வந்தப் பின் மரிக்கும் பரிசுத்தவான்கள் ஒரு நொடிப் பொழுதில் மாற்றப்படுவார்கள். அதற்கு முன் உயிர்த்தெழுதலை எதிர்பார்த்து மரண நித்திரையில் இருந்தவர்கள், ஒரு நொடிப் பொழுதில் மறுரூபமாக்கப்படுவதில்லை.

52-ஆம் வசனத்தின் பின் பகுதியில் இந்தச் சிந்தை குறிப்பிடப்படுகிறது. "எக்காளம் தொனிக்கும், அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும்

மறுரூபமாக்கப்படுவோம்." அதாவது நாம் மரிக்கும்போது எந்தத் தாமதமின்றி அழியாமையைப் பெற்றுக்கொள்வோம்). ஆவிக்குரிய நிலையில் உயிர்ப்பிக்கப்பட்டு பரிசுத்தவான்களின் கூட்டத்தில் அவர்களும் சேர்க்கப்படுவார்கள்.

**ஒரு கால பகுதி**

இப்படியாக, பரிசுத்தவான்கள் கிறிஸ்துவோடு சேருவதற்கு ஒரு கால பகுதி உண்டு. இயேசு தம்முடைய வருகையின் போது மாம்சத்திலுள்ள பரிசுத்தவான்கள் நிறைவு செய்யக்கூடிய வேலைகள் அதிக காலம் செல்லும் என்பதை பவுல் அறிந்திருந்ததினால், இதை பவுல் புரிந்துகொண்டிருந்திருக்க வேண்டும். பரிசுத்த வான்கள் வளர்ச்சி அடைந்து பலப்படுவதற்கு சில சத்துள்ள ஆவிக்குரிய போஜனம் இருக்கும் என்பதை லூக்கா 12:36-38-ஆம் வசனங்களிலிருந்து பவுல் அறிந்து கொண்டிருக்க வேண்டும். யூத யுக அறுவடையைப் போல சுவிசேஷ யுக அறுவடையும் நீடித்திருக்கும் என்பதை மத்தேயு 13-ஆம் அதிகாரத்தில் இயேசுவினால் சொல்லப்பட்ட கோதுமை, களைகள் பற்றிய உவமையின் விளக்கத்தை பவுல் அறிந்திருக்க வேண்டும். ஏனெனில் அறுவடையின் போது, அதாவது யுகத்தின் முடிவில் நீடித்த காலமாக அதிகப்பட்சமான வேலைகள் இருக்கும் என்பதை நன்கு அறிந்திருந்தார்.

**ஏனோக்கு மற்றும் எலியா**

ஏனோக்கு மற்றும் எலியா, சபை வகுப்பாரை அடையாளப்படுத்துவதாக அநேக சகோதரர்கள் கருதுகிறார்கள். ஏனோக்கு இரகசியமாகவும், அமைதியாகவும் எந்த விதமான வெளிப்புறமான காட்சி அல்லது ஆரவாரம் இல்லாமல் எடுத்துக்கொள்ளப்பட்டார். கிறிஸ்து தம்முடைய இரண்டாம் வருகையில் எந்த விதமான ஆரவாரமின்றி இரகசியமாகவும், அமைதலோடும், நித்திரையடைந்த பரிசுத்தவான்களை எழுப்பி சென்றது - ஏனோக்குக்கு அடையாளப்படுத்தலாம். ஏனோக்கின் வாழ்நாட்கள் 365 வருடங்கள். அப்போது வாழ்ந்த மனுஷரின் வாழ்நாட்களை ஒப்பிட்டுப்பார்க்கும்போது இது மிக குறுகிய காலமாகும். இவ்வருடங்கள் சூரிய சுற்றை நமக்கு நினைப்பூட்டுகிறது. சூரியன் சுவிசேஷ யுகத்தின் அடையாளமாக இருக்கிறது. இப்போது வளர்ச்சியடைந்த பரிசுத்தவான்கள், "தங்கள் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்" (மத்தேயு 13:43).

இதற்கு எதிரிடையாக, மற்றவர்கள் காணும்படியாக எலியா எடுத்துகொள்ளப்பட்டார். எலியா எடுத்துகொள்ளப்படுவதற்கு முன், அவர் சந்தித்த தீர்க்கதரிசியின் புத்திரர்கள் அனைவரும் எலியா வெகுசீக்கிரத்தில் எடுத்து கொள்ளப் படுவதை அறிந்திருக்கிறார்கள். இப்பொழுது பல கிறிஸ்துவ விசுவாசிகள், சபை எடுத்துக் கொள்ளப்படுவதை எதிர்பார்க்கும் வகையில், ஒருவேளை இந்த யுகத்தின் முடிவில் சுழல் காற்றாகிய உபத்திரவத்திலும், கடுமையான வேதனைகளின் மத்தியில் எடுத்துக்கொள்ளப்படும் பரிசுத்தவான்களை எலியா அடையாளப்படுத்தலாம்.

ஏனோக்கு மற்றும் எலியா இருவருமே பரலோக பரிசைப் பெறவில்லை. "பரலோகத்திலிருந்திறங்கினவரும் பரலோகத்திலிருக்கிறவருமான மனுஷகுமாரனேயல்லாமல் பரலோகத்துக்கு ஏறினவன் ஒருவனுமில்லை" (யோவான் 3:13). ஆனால் எலியா மற்றும் ஏனோக்கின் வாழ்க்கையின் முடிவுகள் மற்றவர்கள் விசுவாசத்திற்கும், தேவனுக்கு முன் விசேஷமாக நிற்பதற்கு சாட்சியாக இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாக இருந்தது. ஆயினும், அவர்களின் எடுத்துக்கொள்ளுதல், பரிசுத்த வான்கள் மகிமைக்குள் அமானுஷ்யமாக மீட்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

**ஏனோக்கு, மெத்தூசலா, லாமேக்கு**

கிறிஸ்துவின் வருகையில் அமைதியாக எடுத்துக்கொள்ளப்படும் பரிசுத்தவான்களை ஏனோக்கு அடையாளப்படுத்தினால் அவருக்குப் பின்வந்த ஏனோக்கின் குமாரன் மெத்தூசலா, இயேசுவின் வருகைக்குப் பின் மரித்த பரிசுத்தவான்களை அடையாளப்படுத்த வேண்டும். இந்த மெத்தூசலா, எதிர்பார்த்த ஜலப்பிரளயம் வருவதற்குமுன் அந்த வருடமே மரித்துப்போனார். (லாமேக்கு பிறந்தபோது மெத்தூசலாவுக்கு 187வயது. நோவா பிறக்கும் போது லாமேக்குக்கு 182 வயது. நோவா 600 வயதாக இருந்த போது ஜலப்பிரளயம் வந்தது. 187, 182 மற்றும் 600 வருடங்களின் கூட்டல் 969 வருடங்களாகும். ஜலப்பிரளயம் வந்த வருடத்தில் மெத்தூசலா மரித்தார் என்பது தெளிவாகிறது (ஆதியாகமம் 5:25, 28; 7:11). அறுவடையின் முடிவில், எடுத்துக்கொள்ளப்பட்ட எலியாவை அடையாளப்படுத்தும் பரிசுத்தவான்களை இங்கு மெத்தூசலா அடையாளப்படுத்தலாம்.

லாமேக்கு 777 வருடம் உயிரோடிருந்தார். பிரசித்தமான எண் 7 திரும்பத்திரும்பக்

கொடுக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தலில் சொல்லப்பட்ட போலியான சபையின் எண் 666 என்றால், உண்மையான சபை லாமேக்கின் 777 என்ற எண் அடையாளப்படுத்தும். இந்த லாமேக்கு, ஜலப்பிரளயம் சம்பவிப்பதற்கு ஐந்து வருடங்களுக்கு முன் மரித்தார். இப்படியாக இந்த லாமேக்கு, ஏனோக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதிலிருந்து ஜலபிரளயம் வரையில் உயிர் வாழ்ந்தார். ஒருவேளை, இந்த லாமேக்கு அறுவடையின் போது வாழும், (அறுவடை முடிவு வரை அல்ல) பரிசுத்தவான்களை அடையாளப்படுத்தலாம். ஆனால் அதன் முடிவுக்கு அடையாளப்படுத்தவில்லை.

(இந்த இரண்டு எண்களையும் 777x 5 பெருக்கினால், 3885 என்ற எண்களின் மொத்த எண்ணாக உள்ளது. மேல் கூறப்பட்டுள்ள அந்த மூன்று (1260, 1290, 1335) எண்களும் இயேசுவின் இரண்டாம் வருகையை நமக்குக் கணக்கிட்டுக் காட்டக்கூடியதாக இருக்கிறது. ஒருவேளை இதிலும், அந்த காலத்தின் துவக்கத்தில் வாழக்கூடிய பரிசுத்தவான்களை லாமேக்கு அடையாளப் படுத்தலாம். அதாவது சுவிசேஷ யுகத்தின் முடிவு காலத்தில் அல்லது அறுவடை வரைக்கும் வாழக்கூடிய பரிசுத்தவான்களை அடையாளப் படுத்தலாம்).

#### மணவாட்டி வகுப்பார் முழுமை அடைதல்

இந்த உலகத்தின்மேல் இறுதி நியாயத்தீர்ப்பு வருவதற்கு முன் வெளிப்படையாக மணவாட்டி வகுப்பார் முழுமைப் பெற்று கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குள் எடுத்துச் செல்லப்படுவார்கள். இந்தக் கருத்தை மூன்று சாட்சிகள் ஆதரிக்கிறது.

(1) மணவாட்டி வகுப்பார் முழுமையடைந்து, ஆயிரவருட ஆட்சியில் கிறிஸ்துவோடு இணைந்து இந்த உலகத்தை ஆசீர்வதிப்பார்கள் என்று வெளிப்படுத்தல் 19:7 பேசுகிறது. இதைத் தொடர்ந்து வரும் 11-ஆம் வசனத்திலிருந்து 19-ஆம் அதிகாரத்தின் முடிவு வரை, இந்த யுகத்தை நிறைவு செய்யும் இறுதியான உபத்திரவங்களையும், அடுத்த யுகத்தையும் அறிமுகப்படுத்துகிறது. வெளிப்படுத்தல் 19:14-ஆம் வசனம். "பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரந் தரித்தவர்களாய், வெள்ளைக்குதிரைகளின்மேல் ஏறி, அவருக்குப் பின் சென்றார்கள்." உபத்திரவ காலம் முடிவு அடையும் போது, பழைய ஒழுங்குகள் அழிக்கப்படுவதற்கு இயேசுவோடு மகிமையடைந்த பரிசுத்தவான்கள் வருவதைக் காட்டுகிறது.

(2) இதே காரியம் 17-ஆம் வசனத்திலும் குறிப்பிடப்படுகிறது. "பின்பு ஒரு தூதன் சூரியனில் நிற்கக்கண்டேன்" - திரைக்கு அப்பால், சென்று மகிமையடைந்த "சூரிய" வகுப்பாரைத் தெளிவாக விவரிக்கிறது. அதற்குப் பின் தேவனுடைய நியாத்தீர்ப்பை அடையாளப்படுத்தும் "மாபெரும் விருந்தைப்" பற்றிய அறிவிப்பு கொடுக்கப்படுகிறது (17-ஆம் வசனம் மற்றும் அதைத் தொடர்ந்து).

(3) எகிப்தின் கடைசி வாதையும் இதே சிந்தையைக் குறிப்பிடுகிறது. முதல் பிறந்த இஸ்ரயேலர்கள் மரணத்தைக் கடந்தது போல, பரிசுத்தவான்கள் மரணத்தைக் கடந்து மகிமையடைந்ததை விவரிக்கிறது. அதற்குப் பின் எகிப்தில் முதல் பிறந்தவர்கள் அனைவரும் அழிக்கப்பட்டார்கள்.


பழைய ஒழுங்குகளை அழிக்கும் அடையாளமாக 7-ஆம் வாதை வெளிப்படுத்தல் 16-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது.

#### அதற்குப் பின்வரும் ஆசீர்வாதங்கள்

இறுதியாக, தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், திரைக்கு அப்பால் மகிமையடைந்தப் பின், இந்தக் களைப்பூட்டும் உலகத்திற்கு ஆசீர்வாதங்கள் பெருகும். "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (வெளிப்படுத்தல் 22:1). நதியின் இருகரையிலும், "யேகோவா தேவனுடைய வேதத்தில் பிரியமாக இருப்பவர்கள்" என்ற சங்கீதம் 1:1-3 வசனங்கள் குறிப்பிடப்படும் ஜீவ விருட்சங்கள் வளரும். இப்படியாக இயேசுவோடு இராஜ்யத்தைப் பெற்றுக்கொள்ளும் விசுவாசமுள்ள சீஷர்களைப் பற்றி விவரிக்கப்படுகிறது. "இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருப்பார்கள்" (வெளிப்படுத்தல் 20:6).

தங்களுடைய உடன்படிக்கையை விட்டுக்கொடுப்பவர்களுக்கும் உள்ள நம்பிக்கை

# திரள் கூட்டத்தாரின் உயிர்த்தெழுதல்



"ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன். அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" (வெளிப்படுத்தல் 7:9-10).

தேவனுடைய பரம அழைப்பு -1,44,000 மணவாட்டியாகிய சிறுமந்தைக்கு மட்டுமே. ஆனால் மிக அருமையாக ஓட்டத்தைத் துவங்கின திரளானோர் வழியில் இடறினாலும், இறுதியில் அனைத்தையும் மேற்கொண்டவர்களுக்கும் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. "**பரலோகத்தில் திரளான ஜனக்கூட்டம்** இடுகிற ஆரவாரத்தைக் கேட்டேன் … பெருவெள்ள இரைச்சல்போலவும், பலத்த இடிமுழக்கம்போலவும், ஒரு சத்தமுண்டாகி: அல்லேலூயா, சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் ராஜ்யபாரம்பண்ணுகிறார்" (வெளிப்படுத்தல் 19:1, 6). அவர்கள் பரலோகத்தில் இருக்கிறார்களோ, அவர்களின் நம்பிக்கை பரலோகத்தில் இருக்கிறதோ - இந்தத் திரள் கூட்டத்தர் பரலோகத்தைச் சேர்ந்தவர்களே.

முதற்பலனான சபையில், ஆவியில் ஜெநிப்பிக்கப்பட்ட, சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தாரும் அடங்குவார்கள். இவர்கள் அனைவரும் பலியினால் உடன்படிக்கை செய்து, பரிசுத்த ஆவியினால் அபிஷேகிக்கப்பட்டு, வருங்கால இராஜ்யத்தில் பூமிக்குரிய வாழ்க்கையின் நம்பிக்கை அனைத்தையும் விட்டுக் கொடுத்தவர்கள். பரலோக வாழ்க்கையை எந்நிலையில் பெறுவதற்கும் மரணபரியந்தம் இருவகுப்பாரும் விசுவாசத்தை நிரூபிக்க வேண்டும்.

இந்தச் சிறுமந்தை முற்றிலும் ஜெயங்கொள்கிறவர்கள். "இவையெல்லாவற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவா`களாயிருக்கிறோமே" (ரோமர் 8:37). இவர்களே மிகச் சிறந்த பரிசைப் பெறுபவர்கள் - தெய்வீக சுபாவத்திலுள்ள அழியாமை. "நீங்களோ, தெரிந்துகொள்ளப்பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1பேதுரு 2:9). திரள் கூட்டத்தார், இறுதியில் தீமையின் வல்லமையை எதிர்த்து ஜெயிப்பதினால், இவர்களும் ஆவிக்குரிய வாழ்க்கையில் பரிசளிக்கப்படுகிறார்கள். ஆனால் அழியா சிறுமந்தையைப் போல அழியாமையைப் பெறாமல், தூதர்களைப் போல, தேவனைச் சார்ந்து ஜீவிப்பார்கள்.

வெளிப்படுத்தல் 7-ஆம் அதிகாரத்தில் இந்தத் திரளான வகுப்பாரைக்குறித்து பேசப் படுகிறது. "அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன் என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான். அதற்கு நான்: ஆண்டவனே, அது உமக்கே தெரியும் என்றேன். அப்பொழுது அவன்: இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்; இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள். ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும் அவருடைய ஆலயத்திலே அவரைச் சேவிக்கிறார்கள்; சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வெளிப்படுத்தல் 7:13-15). இறுதியாக, இந்தத் திரள் கூட்டத்தார் தேவனை அவருடைய மகிமையுள்ள ஆலயத்தில் சேவிப்பார்கள் என்று அந்தக் காட்சிகள் காட்டுகிறது. (பரிசுத்தவான்கள், ஜீவனுள்ள தேவன் வாழும் ஆலயம் - 2 கொரிந்தியர் 6:16).

"திரள் கூட்டத்தாரை இழிவானவர்களாகவோ, ஆண்டவருக்கு நம்பிக்கை துரோகம் செய்தவர்களாகவோ குறைவாக மதிப்பிடக்கூடாது. ஏனெனில், அப்படிப்பட்டவர்கள் நித்தியமான பரலோக ஆசீர்வாதங்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டார்கள். சிறுமந்தையைப் போல சத்தியத்திற்கும், நீதிக்கும் சகோதரர்கள் மேலும் அதே அளவிலான அன்பைக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் சற்றுக் குறைவான அன்பையும், சற்றுக் குறைவான வைராக்கியத்தையும் பெற்றிருப்பார்கள்" என்று சகோ. ரஸல் கூறுகிறார் (4648).

இந்த யுகத்தின் முடிவில் மிகுந்த உபத்திரவத்திலிருந்து, " இந்த வகுப்பார் வெளியேறுவார்கள்." இந்தத் திரள் கூட்டத்தார் அனைவரும் சுவிசேஷ யுகத்தின் முடிவிலோ அல்லது சுவிசேஷ யுகத்தின் துவக்கத்தில் மரித்தவர்கள் பரிசுத்தவான்களோடு 1878-ஆம் வருடத்தில் உயிர்த்தெழுப்பப்படுவார்களோ, நாம் தெளிவாக அறிந்துகொள்ள வாய்ப்பில்லை. ஆயினும், திரள்கூட்டத்தார் அற்புதமான பரலோக பிதாவின்மேல் வைத்திருக்கும் அன்பு மற்றும் பக்தியினிமித்தம், அவர்கள் உயிரோடு எழும்பின பின் மகிழ்சியோடும் ஆரவாரத்தோடும் தங்களுடைய பரிசுகளைப் பெற்றுக்கொள்வார்கள் என்று நாம் நிச்சயித்துக கொள்ளலாம்.

**மற்ற சாட்சிகள்**

* பழைய ஏற்பாட்டிலும், இந்தத் திரள் கூட்டத்தைப் பற்றி சித்திரிக்கப்படுகிறது. ஆபிரகாம், அதற்குப் பின் லோத்தை சந்தித்த தூதர்களைப் பற்றி, ஆதியாகம் 18 மற்றும் 19-ஆம் அதிகாரங்களில் விவரிக்கப்படுகிறது. ஆபிரகாம் மற்றும் பரலோக விருந்தாளிகளுக்கு இடையில் சம்பாஷணைகள் நடந்தது. ஆனால் ஆபிரகாமை தொடர்ந்து வந்த லோத்து, அவரைப் போல நீதிமானாக மதிப்பிடப்பட்டிருந்தாலும் ( 2 பேதுரு 2:7-8) ஆபிரகாமை காட்டிலும் சற்று ஆவியிலும், நடத்தையிலும் குறைவாக காணப்பட்டார்.

* பிரதிஷ்டையின் போது, லேவியர்கள் தங்களுடைய வஸ்திரங்களைத் தோய்ப்பதினால் இவர்கள் திரள் கூட்டத்தாராக அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறார்கள். ஏனெனில், அதே வேலையை திரள் கூட்டத்தாரும் செய்கிறார்கள் (எண்ணாகமம் 8:7; வெளிப்படுத்தல் 7:14). இஸ்ரயேலில் முதல் பிறந்த அனைத்து பிள்ளைகளுக்குப் பதிலாக முழு லேவி கோத்திரமும் முதற்பலன்களாக ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். "லேவியரை ஆரோனிடத்திலும் அவன் குமாரரிடத்திலும் ஒப்புக்கொடுப்பாயாக; இஸ்ரவேல் புத்திரரில் இவர்கள் முற்றிலும் அவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஆரோனையும் அவன் குமாரரையுமோ, தங்கள் ஆசாரிய ஊழியத்தைச் செய்வதற்காக நியமிக்கக்கடவாய் " (எண்ணாகமம் 3:5-10). இப்படியாக திரள் கூட்டத்தார் கிறிஸ்துவையும் சபையையும் சேவிப்பார்கள்.

* எசேக்கியேல் 44-ஆம் அதிகாரத்தில், தீர்க்கதரிசனமாக லேவியர்கள் ஆயிரவருட ஆட்சியில் ஆவிக்குரிய ஆலயத்தைப் பொறுத்த வரையில் ஒரு விசேஷித்த வேலையைச் செய்வதற்கு அழைக்கப்பட்டதினிமித்தம் இவர்கள் திரள் கூட்டத்தாராக அடையாளப்படுத்தப்படுகிறார்கள். "இஸ்ரவேல் வழிதப்பிப்போகையில், என்னைவிட்டுத் தூரமானவர்களும், என்னைவிட்டு வழிதப்பித் தங்கள் நரகலான விக்கிரகங்களைப் பின்பற்றினவர்களுமாகிய லேவியரும் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள். ஆகிலும் அவர்கள் என் ஆலயத்தின் வாசல்களைக் காத்து, என் ஆலயத்தில் ஊழியஞ்செய்து, என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள்; அவர்கள் ஜனங்களுக்காகத் தகனபலிகளையும் மற்றப் பலிகளையும் செலுத்தி, இவர்களுக்கு ஊழியஞ்செய்கிறதற்கு இவர்கள் முன்பாக என் பரிசுத்த ஸ்தலத்திலே பணிவிடைக்காரராயிருப்பார்கள். அவர்கள் இவர்களுடைய நரகலான விக்கிரகங்களுக்கு முன்பாக நின்று இவர்களுக்கு ஊழியஞ்செய்து, இஸ்ரவேல் வம்சத்தாரை அக்கிரமத்தில் விழப்பண்ணினபடியினால், நான் என் கையை அவர்களுக்கு விரோதமாய் உயர்த்தினேன், அவர்கள் தங்கள் அக்கிரமத்தைச் சுமப்பார்கள் என்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். அவர்கள் எனக்கு ஆசாரியராய் ஆராதனை செய்யும்படி என் சமீபத்தில் வராமலும், மகா பரிசுத்தமான ஸ்தலத்தில் என் பரிசுத்த வஸ்துக்களில் யாதொன்றையும் கிட்டாமலும் இருக்கவேண்டும், அவர்கள் தங்கள் இலச்சையையும் தாங்கள் செய்த அருவருப்புகளையும் சுமக்கக்கடவர்கள். ஆலயத்தின் சகல வேலைகளுக்கும் அதில் செய்யப்படவேண்டிய எல்லாவற்றிற்கும் நான் அவர்களை அதில் காவல்காக்கிறவர்களாயிருக்கக் கட்டளையிடுவேன்" (எசேக்கியேல் 44:10-14). அவர்கள் தவிறினாலும், சேவை செய்வார்கள்.

* எதிரிடையாக, இராஜரீகமான ஆசாரியத்துவத்தைப் பற்றி 15-ஆம் வசனம் தொடர்ந்து விவரிக்கிறது. "இஸ்ரவேல் புத்திரரே, என்னைவிட்டு வழிதப்பிப்போகையில், என் பரிசுத்த ஸ்தலத்தின் காவலைக் காக்கிற சாதோக்கின் புத்திரராகிய லேவியரென்னும் ஆசாரியர்களே எனக்கு ஆராதனைசெய்ய என் சமீபத்தில்சேர்ந்து, நிணத்தையும் இரத்தத்தையும் எனக்குச் செலுத்த என் சந்நிதியில் நிற்பார்களென்று கர்த்தராகிய ஆண்டவர் சொல்லுகிறார். இவர்கள் என் பரிசுத்த ஸ்தலத்துக்குள் பிரவேசிப்பார்கள்; இவர்களே எனக்கு ஆராதனை செய்ய என் பீடத்தைக்

கிட்டிவந்து, என் காவலைக் காப்பார்கள்" (எசேக்கியேல் 44:15-16). (தாவீதின் காலத்தில் சாதோக்கு பிரதான ஆசாரியராக இருந்தார்). ஆசாரியத்துவம் மட்டுமே பாவநிவாரண பலியில் பங்கெடுத்துக்கொள்ள முடியும்.

* "நமக்கு ஒரு சிறிய சகோதரியுண்டு, அவளுக்கு ஸ்தனங்களில்லை; நம்முடைய சகோதரியைக் கேட்கும் நாளில் அவளுக்காக நாம் என்ன செய்வோம்?" (உன்னதப்பாட்டு 8:8). இந்த வசனப் பகுதியும் திரள் கூட்டத்தாரைக்குறிப்பிடுகிறது. இவர்கள் மிக சந்தோஷத்துடன் சத்திய வசனங்களை ஏற்றுக்கொண்டாலும், கிறிஸ்துவின் மணவாட்டியாகத் தகுதிப் பெறுமளவுக்கு வளர்ச்சியடைவதில்லை (1கொரிந்தியர் 3:1-3, 10-15)

* "ராஜகுமாரத்தி உள்ளாகப் பூரணமகிமையுள்ளவள், அவள் உடை பொற்சரிகையாயிருக்கிறது. சித்திரத்தையலாடை தரித்தவளாய், ராஜாவினிடத்தில் அழைத்துக் கொண்டுவரப்படுவாள்; அவள் பின்னாலே செல்லும் அவளுடைய தோழிகளாகிய கன்னிகைகள் உம்மிடத்தில் கூட்டிக்கொண்டுவரப்படுவார்கள். அவர்கள் மகிழ்ச்சியோடும் களிப்போடும் வந்து, ராஜ அரமனைக்குள் பிரவேசிப்பார்கள்" (சங்கீதம் 45:13-15). இங்கு இராஜாவின் குமாரத்தி சிறு மந்தையாகவும், அவளோடு கூட இராஜாவின் அரமனைக்குள் செல்லும் தோழிகள் திரள் கூட்டத்தாரையும் அடையாளப்படுத்துகிறார்கள்.


* "நான் நித்திரைபண்ணினேன், என் இதயமோ விழித்திருந்தது; கதவைத் தட்டுகிற என் நேசரின் சத்தத்தைக் கேட்டேன்: என் சகோதரியே! என் பிரியமே! என் புறாவே! என் உத்தமியே! கதவைத் திற; என் தலை பனியினாலும், என் தலைமயிர் இரவில் பெய்யும் தூறலினாலும் நனைந்திருக்கிறது என்றார். என் வஸ்திரத்தைக் கழற்றிப்போட்டேன்; நான் எப்படி அதைத் திரும்பவும் உடுப்பேன், என் பாதங்களைக் கழுவினேன், நான் எப்படி அவைகளைத் திரும்பவும் அழுக்காக்குவேன் என்றேன். என் நேசருக்குக் கதவைத் திறந்தேன்; என் நேசரோ இல்லை, போய்விட்டார்; அவர் சொன்ன வார்த்தையால், என் ஆத்துமா சோர்ந்துபோயிற்று. அவரைத் தேடினேன், அவரைக் காணவில்லை; அவரைக் கூப்பிட்டேன், அவர் எனக்கு மறுஉத்தரவு கொடுக்கவில்லை" (உன்னதப்பாட்டு 5:2, 3, 6). இப்படியாக சிலர் ஆவியினால் ஜெநிப்பிக்கப்பட்டாலும், பாபிலோனை விட்டு வெளியே வருவதற்குத் தாமதித்து, இறுதியாக அதை விட்டு வெளியே வரும் போது அவர்கள் எதிர்பார்த்து வரும் பரம அழைப்புக்குரிய பந்தயப் பொருளைப் பெறும் வாய்ப்பு அடைப்பட்டுவிடும் (வெளிப்படுத்தல் 18:4).

* புத்தியுள்ள கன்னிகைகள் என்ற உவமையில், சிறுமந்தை மற்றும் திரள் கூட்டத்தாருக்குள் வேறுபாடுகள் தெளிவாகக் காட்டப்படுகிறது. "அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும். அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள். புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக் கொண்டுபோகவில்லை" (மத்தேயு 25:1-12). திரி கத்தரிக்கப்பட்டு, எண்ணெயோடிருக்கும் விளக்கு மிகுந்த வெளிச்சத்தைக் கொடுக்கும். எண்ணெய் குறைவாக இருக்கும் விளக்கு புகைந்து, குறைவான வெளிச்சத்தைப் பிரகாசிக்கும். (சில நேரங்களில் நாம் வெளிச்சத்தைக் காட்டிலும் புகையைக் (அனல்) கொடுக்கிறோமா ?)

எண்ணெய் பரிசுத்த ஆவியை அடையாளப்படுத்துகிறது. தேவனால் வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜ்யத்தில் சேருவதற்கு, தேவையான பலத்தைக் கொடுப்பதற்கு இந்தப் பரிசுத்த ஆவிக்குள் ஒருவர் வளர வேண்டும். அது இரவல் வாங்கக்கூடிய பொருள் அல்ல (மத்தேயு 25:1-12). ஆகவே ஆண்டவர் இவர்களை மணவாட்டியாக அங்கீகரிக்கவில்லை. பெரிதான அழைப்புக்குரிய வாசல் அடைப்பட்டது.

ஒரு நல்ல அறிக்கை மற்றும் ஒரு மேலான உயிர்த்தெழுதல்

# முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல்



"இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்; வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள். அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்" (எபிரெயர் 11:39-40).

இயேசுவின் மரணத்திற்கு முன் வாழ்ந்த விவாசமுள்ள யோகோவா தேவனுடைய பக்தர்களை அடையாளம் கண்டுகொள்வதற்கு, "பழைய ஏற்பாட்டு நீதிமான்கள் அல்லது முற்பிதாக்கள்" என்ற வார்த்தைகளை வேத மாணவர்கள் பயன் படுத்துகிறார்கள்.

இதில் முதல் நபரையும், கடைசி நபரையும் நாம் கண்டுபிடித்துவிடலாம். காயீனால் கொலை செய்யப்பட்ட ஆபேல் முதல் நபரும், யோவான் ஸ்நானன் இறுதி நபருமாக இருக்கிறார்கள். அப்போஸ்தலனாகிய பவுல் இவர்களைப் பற்றி ஒருசுருக்கமானக் குறிப்பை எபிரேயர் 11-ஆம் அதிகாரத்தில் கொடுத்திருக்கிறார். வெகு சிலரைப் பற்றி அவர் வரிசைப்படுத்தியிருந்தாலும் அவருடைய சிந்தையில் இன்னும் பலர் இருந்ததாக 32-ஆம் வசனம் குறிப்பிடுகிறது.

"இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்; வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள் " (எபிரெயர் 11:39) என்று பவுல் கூறுகிறார். முற்பிதாக்களுக்கு என்ன வாக்களிக்கப்பட்டது? தெளிவான ஒரு குறிப்பை 13-16 வசனங்களில் நாம் வாசிக்கிறோம். "இவர்களெல்லாரும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக்கொண்டு, பூமியின்மேல் தங்களை அந்நியரும் பரதேசிகளும் என்று அறிக்கையிட்டு, விசுவாசத்தோடே மரித்தார்கள். இப்படி அறிக்கையிடுகிறவர்கள் சுயதேசத்தை நாடிப்போகிறோம் என்று தெரியப்படுத்துகிறார்கள். தாங்கள் விட்டுவந்த தேசத்தை நினைத்தார்களானால், அதற்குத் திரும்பிப்போவதற்கு அவர்களுக்குச் சமயங்கிடைத்திருக்குமே. அதையல்ல, அதிலும் மேன்மையான பரமதேசத்தையே விரும்பினார்கள்; ஆகையால் தேவன் அவர்களுடைய தேவனென்னப்பட வெட்கப்படுகிறதில்லை; அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம்பண்ணினாரே."

முற்பிதாக்கள் இந்த உலகத்தில், "அந்நியரும் பரதேசிகளுமாக" வாழ்ந்தார்கள் என்று பவுல் குறிப்பிடுகிறார். இப்படியாக அவர்கள் இந்த உலகத்தில் வாழ்ந்த போது, தேவனால் கொடுக்கப்பட்ட முழு ஆசீர்வாதத்தைப் பெறவில்லை என்பதை நன்கு அறிந்திருந்தார்கள். அவர்கள் அதைக் காட்டிலும் பரம தேசத்தை விரும்பினார்கள் என்று நாம் வாசிக்கிறோம். அதவாது மற்றொரு நிலை, அதவாது "பரலோக" தேசத்தை வாஞ்சித்தார்கள் என்று வாசிக்கிறோம். முற்பிதாக்களுக்கு பரலோக ஆசீர்வாதங்களைப் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை என்று நாம் எண்ணுகிறோம். ஏனெனில், பரலோக ஆசீர்வாதங்களைக்குறித்த காரியங்கள் இயேசு வரும் வரையில் வெளிப்படவில்லை (2 தீமோத்தேயு 1:10). ஆயினும் தேவன் பரலோகத்தில் வாசம் செய்கிறார் என்றும், அவர் தம்முடைய சித்தத்தை பரத்திலிருந்து செயல்படுத்துகிறார் என்பதை அவர்கள் நம்பினார்கள். இந்தத் தேவன் அவர்களைப் பராமரிப்பார் என்றும் நம்பினார்கள். மேலும் கால போக்கில் அவர்கள் அப்படிப்பட்ட எதிர்காலத்தை விரும்பி வாஞ்சித்தார்கள்.

சுவிசேஷ யுக அறுவடையில் வாழக்கூடிய நமக்கு தெய்வீக திட்டத்தை தெளிவாகப் புரிந்துகொள்ளக்கூடிய ஆசீர்வாதங்களை, வந்திருக்கும் இயேசு நமக்குத் தந்திருக்கிறார். இரண்டு இரட்சிப்புகள் பற்றி நாம் அறிந்திருக்கிறோம். பரம அழைப்பு, பூமிக்குரிய இரட்சிப்பு, இதற்கு இசைவான முற்பிதாக்களின் நம்பிக்கைக்குறித்து எபிரெயர் 11:40-ஆம் வசனத்தில் வாசிக்கிறோம். "அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகாதபடிக்கு விசேஷித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்."

முற்பிதாக்கள் தங்களுடைய கிரியைகளினால் நற்சாட்சிபெற்று, அதன் பரிசாக

"பரிபூரணம் " அடைவார்கள் என்று பவுல் இங்குக் குறிப்பிடுகிறார். ஆனால் சபை பூரணப்படுவதற்கு முன் இவர்கள் பூரணப்படுவதில்லை என்று வாசிக்கிறோம். எந்த விதத்தில் முற்பிதாக்கள் பூரணப்படுவார்கள்? தேவனுடைய இராஜ்யத்தில் அவர்கள் பரிபூரண ஜனங்களாக உயிர்த்தெழுப்பப்படுவார்கள். பரம அழைப்பு கொடுக்கப்படுவதற்கு முன்னதாகவே முற்பிதாக்கள் வாழ்ந்ததினிமித்தம் இவர்கள் சபை வகுப்பினரைப் போல அழியாமை பெறமாட்டார்கள். முற்பிதாக்களில் கடைசியான, யோவான் ஸ்நானன் மிகப் பெரியவராக இருந்தாலும் சபையின் மகிமையை இவர் பெற இயலாது. "ஸ்திரீகளிடத்திலே பிறந்தவர்களில் யோவான்ஸ்நானனைப்பார்க்கிலும் பெரியவன் ஒருவனும் எழும்பினதில்லை; ஆகிலும், பரலோகராஜ்யத்தில் **சிறியவனாயிருக்கிறவன்** அவனிலும் **பெரியவனாயிருக்கிறானென்று** உங்களுக்கு மெய்யாகவே சொல்லுகிறேன்" (மத்தேயு 11:11) என்று இயேசு கூறியிருக்கிறார்.

முற்பிதாக்கள் இந்த உலகத்தைக் காட்டிலும் மேன்மையான உயிர்த்தெழுதலைப் பரிசாகப் பெறுவார்கள். "ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப் பெற்றார்கள்; வேறுசிலர் **மேன்மையான** உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைபெறச் சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்" (எபிரெயர் 11:35) என்று கூறப்படுகிறது.

"மேன்மையான உயிர்த்தெழுதல்," இந்த உலகத்தின் உயிர்த்தெழுதலைக் காட்டிலும் மேலானது. ஏனெனில், இந்த உலக மனுக்குலம் "பரிசுத்தமான பெரும் பாதையில்" பயணித்து, பரிபூரண நிலையைப் பெறுவதற்குக் கிரியைச் செய்ய வேண்டும் (ஏசாயா 35:8). மனித பரிபூரண நிலையில் உயிர்ப்பிக்கப்பட்ட முற்பிதாக்களின் பிரசன்னம் உயிர்த்தெழுந்த மனுக்குலத்திற்கு ஆசீர்வாதமாக இருக்கும். கிறிஸ்துவின் இராஜ்யத்தில் கீழ்ப்படிதலோடு நடந்துகொண்டால், காலபோக்கில், இந்த உலகத்தார் அனைவரும் எதைப் பெற்றுகொள்வார்கள் என்று அறிந்துகொள்வார்கள்.

இதைக்குறித்த சித்திரம், எண்ணாகமம் 29:7-11-ஆம் வசனங்களில் காணப்படுகிறது. "இந்த ஏழாம் மாதம் பத்தாம் தேதி உங்களுக்குப் பரிசுத்த சபைகூடும் நாளாயிருக்கக்கடவது; அதிலே நீங்கள் யாதொரு வேலையும் செய்யாமல், உங்கள் ஆத்துமாக்களைத் தாழ்மைப்படுத்தி, கர்த்தருக்குச் சுகந்த வாசனையான சர்வாங்க தகனபலியாக ஒரு காளையையும், ஒரு ஆட்டுக்கடாவையும், ஒரு வயதான பழுதற்ற ஏழு ஆட்டுக்குட்டிகளையும், அவைகளின் போஜனபலியாக எண்ணெயிலே பிசைந்த மெல்லிய மாவிலே காளைக்குப் பத்தில் மூன்று பங்கையும், அந்த ஒரு ஆட்டுக்கடாவுக்காக இரண்டு பங்கையும்."

**ஒப்புரவாகுதலின் நாளும், முற்பிதாக்களும்**

ஏழாம் மாதம் பத்தாம் தேதி அன்று இந்தப் பலி செலத்தப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. பழங்கால இஸ்ரயேலில் மிக முக்கியமான மூன்று சமய சடங்குகளில் ஒன்று - ஒப்புரவாகுதலின் நாள் - திஷ்ரீ மாதம் பத்தாம் தேதி. இந்த நாள் தேசிய அளவில் சுத்திகரிப்புக்குரிய நாளாகவும், புதுப்பிக்கக்கூடிய நாளாகவும் இருந்தது. இப்படியாக, முழு தேசத்தாரின் கவனத்தையும் பக்தியையும், இந்த நாளில் காரியங்கள் ஆட்கொண்டது. இதைத் தொடர்ந்து எண்ணாகமம் 29-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட இந்தப் பலிகள், ஒப்புரவாகுதலின் நாளுக்குப் பின் செலுத்தப்படும் முதல் பலிகளாகும்.

ஒப்புரவாகுதலின் பலிகள் **கிறிஸ்துவின்** (அபிஷேகிக்கப்பட்டவர்) - தலையாகிய இயேசு மற்றும் அவருடைய சரீரமாகிய சபையின் பலியை அடையாளப்படுத்துகிறது. இந்தச் சுவிசேஷ யுக பலிகள் முடிந்து, சபை தன்னுடைய ஓட்டத்தை நிறைவு செய்யும் போது, இந்தப் பூமியின்மேல் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதை எதிர்பார்க்கலாம். அப்போது முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் நடைபெறும்.

ஆகவே ஒப்புரவாகுதலின் பலிகளுக்குப் பின் உடனடியாக வரும் முதல் பலி, ஆயிரவருட யுகத்தைப் பிரதிபலிக்க வேண்டும். அதில் முதல் பலி **காளையுடையது**. காளை பரிபூரண மனுஷனைக் குறிக்கும். இப்படியாக இந்தப் பரிபூரண மிருகத்தின் பலி, பரிபூரணமான, முற்பிதாக்களின் உயிர்த்தெழுதல் என்பது தெளிவாகிறது. சபை நிறைவடைந்தப் பின், பரிபூரண மனுஷராக முதன் முதலில் இந்த முற்பிதாக்கள் உயிர்த்தெழுப்பப்படுவார்கள் (சங்கீதம் 51:19 வசனத்தை ஒப்பிட்டுப்பார்க்கவும்).

காளையின் பலியோடு, ஆட்டுக்கடா மற்றும் ஏழு ஆட்டுக்குட்டிகளின் தகன பலிகளும்

குறிப்பிடப்பட்டுள்ளது. உயிர்த்தெழும் முற்பிதாக்கள், ஆட்டுக்கடாவாகிய இயேசுவையும், ஏழு ஆட்டுக்குட்டிகள் வல்லமை மற்றும் அதிகாரத்தின் உண்மையான ஊற்றுமாகிய சபையையும் அறிந்துகொள்வார்கள் என்று நாம் கருதுகிறோம்.

தகன பலிகளோடுச் செலுத்தப்பட்ட போஜனபலி, நம்முடைய சிந்தைக்கு மற்றொரு கோணத்தைக் கொண்டுவருகிறது. காளைக்கு 3/10, ஆட்டு கடாவுக்கு 2/10, ஏழு ஆட்டுக்குட்டிகள் ஒவ்வொன்றுக்கும் 1/10, ஆக மொத்தத்திற்கு 12/10 அல்லது 12 ஓமர் (2.2 லிட்டர்) மா செலுத்தப்பட்டது. 12 என்ற எண் தேவனால் கொடுக்கப்பட்ட பரிபூரண ஆட்சியின் எண்ணாகும். கோத்திரங்கள், அப்போஸ்தர்கள், புதிய எருசலேமின் சுவர்களின் அளவுகள் (12 x 12) அனைத்திலும் 12 என்ற எண் பயன்படுத்தப்பட்டுள்ளது. ஆகவே பூமியின்மேல் பிரபுக்களாக இருக்கும் முற்பிதாக்கள் தேவனுடைய பரிபூரணமான ஆட்சியை அடையாளப்படுத்துவார்கள்.

எண்ணாகமம் 29-ஆம் அதிகாரத்தில் கடைசியாக நாம் அறிந்துகொள்வது என்னவெனில், இதுவரையில் அவர்கள் செலுத்தின பலிகள், தகனபலிகள் ஆகும். ஆனால் 11-ஆம் வசனத்தில், ஒரு பாவநிவாரண பலி தேவைப்படுகிறது. இந்த முறை ஒரு ஆடு பலி செலுத்தப்படுகிறது. எதற்காக இது தேவைப்படுகிறது? இராஜ்யத்தில் முற்பிதாக்களைப் பொறுத்தவரையில், "அவர்கள் தவறுகள் செய்வதற்கு வாய்ப்பில்லை. ஆனால் அவர்கள் உயிர்த்தெழுப்பப்படும் போது, உடனடியாக அவர்கள் யேகோவா தேவனின் பக்கம் திரும்ப வேண்டும், ஆதாமின் விஷயத்தில் நடந்தது போல, சிறிய அளவிலான திசை மாற்றங்கள் கூட மரணம் என்று பொருள்படும். கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியில், புதிய உடன்படிக்கையின் ஏற்பாட்டின் கீழ் இருக்கும் சாதகமான சூழ்நிலையைக் காட்டிலும், இவர்களின் நிலை, சற்றுக் குறைவாகவே இருக்கும். அவர்களின் சிறந்த ஆர்வத்திற்கு, இது ஒரு கிருபையான ஏற்பாடாகும். எந்த ஒரு தவறுகள் நேர்ந்தாலும் கிறிஸ்துவின் மத்தியஸ்த வேலை அவைகளை மூடி மரணத்தீர்ப்பின் கீழ் இருந்து தப்புவிக்கும்" (R5074).

அங்கு ஒரு ஆடு ஏன் பலிசெலுத்தப்பட வேண்டும்? அதற்குப் பதிலாக மற்றொரு காளை ஏன் பலி செலுத்தப்படவில்லை என்று ஒருவர் சிந்திக்கலாம். ஒப்புரவாகுதலின் நாளின் பலிகளை நாம் பார்க்கும் போது, காளையின் பலி, "ஆரோனுக்கும் அவன் வீட்டாருக்காவும்," ஆட்டின் பலி, ஜனங்களுக்காகவும் செலுத்தப்பட்டது. பாவநிவாரண பலியின் வரிசையைப்பார்க்கும் போது, இயேசுவின் இரத்தம் முதலாவது சுவிசேஷ யுகத்திலுள்ள சபைக்கு விசேஷமாகக் கொடுக்கப்பட்டது. ஆனால் சுவிசேஷ யுகத்தில் இயேசு பெற்றிராத மனித பலவீனங்கள் மற்றும் தோல்விகளை முன்னதாகவே சபை அனுபவம் பெற்றிருப்பதினால் ஆயிரவருட ஆட்சியில் சபை இயேசுவோடு கூட செயல்படுவார்கள். ஆகவே இந்த உலகம் மற்றும் முற்பிதாக்களின் விஷயத்தில், குறிப்பாக சபை இவர்களுக்கு உதவிச் செய்வதை பலி செலுத்தப்படும் ஆடு அடையாளப்படுத்தக்கூடும்.

**பிரபுக்கள்**

பாவம் மற்றும் மரணத்தின் யுகத்தில் விசுவாசத்தைக் காத்துக்கொண்ட முற்பிதாக்கள், தேவனுடைய இராஜ்யத்தில், மேலும் சில சிறப்பான சிலாக்கியத்தைப் பெறுவார்கள். கண்ணுக்குப் புலப்படாத ஆவிக்குரிய ஆளுநர்களின், காணக்கூடிய பிரதிநிதிகளாக இந்த உலகத்தை ஆட்சி செய்வார்கள். அனைத்து வகுப்பினரும் ஆசீர்வதிக் கப்பட்டு, பரிசளிக்கப்படுவார்கள் என்று மோலோட்ட மான கண்ணோட்டத்தை 45-ஆம் சங்கீதத்தில் காணலாம். 1-9 வசனங்கள், இராஜாவாகிய இயேசுவையும், 10-14 வசனங்கள் சபையையும், 14-ஆம் வசனத்தின் பின் பகுதியும், 15-ஆம் வசனமும், திரள் கூட்டத்தாரை - "கன்னிகைகளாகிய அவளுடைய தோழிகள்" என்று விவரிக்கப்படுகிறது.

சங்கீதம் 45:16-ஆம் வசனத்தில், முற்பிதாக்களுக்கு நியமிக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை காணலாம். "உமது பிதாக்களுக்குப் பதிலாக உமது குமாரர் இருப்பார்கள்; அவர்களைப் பூமியெங்கும் பிரபுக்களாகவைப்பீர்." "பிரபுக்கள்" என்ற வார்த்தை இராஜ்யத்தில் அவர்களின் பங்கை தெளிவாக விவரிக்கிறது. ஒரு பிரபு இராஜரீகமான குடும்பத்தின் ஒரு அங்கம். அவர்களுக்கு நியமிக்கப்பட்ட பொறுப்புகளை நிறைவேற்றுவதற்கு இராஜரீகமான அதிகாரத்தை அவர்கள் பெற்றிருப்பார்கள். அவர்களுக்கு நியமிக்கப்பட்ட பொறுப்புகள் என்ன? இராஜ்யத்தில் அவர்கள் செய்யும் வேலைகளைக்குறித்து பல வசனப் பகுதிகள் நமக்குக் காட்டுகிறது.

* ஏசாயா 1:25-27 - "நான் என் கையை உன்னிடமாய்த் திருப்பி, உன் களிம்பு நீங்க உன்னைச் சுத்தமாய்ப் புடமிட்டு, உன் ஈயத்தை யெல்லாம் நீக்குவேன். உன் நியாயாதி பதிகளை முன்னிருந்ததுபோலவும், உன் ஆலோசனைக் காரரை ஆதியில் இருந்தது போலவும் திரும்பக் கட்டளையிடுவேன்; பின்பு நீ நீதிபுரம் என்றும், சத்தியநகரம் என்றும் பெயர்பெறுவாய். சீயோன் நியாயத்தினாலும், அதிலே திரும்பிவருகிறவர்கள் நீதியினாலும் மீட்கப்படுவார்கள்." யாக்கோபின் இக்கட்டு காலத்தில் தேவன் மாம்ச இஸ்ரயேலர்களைச் சுத்திகரிக்க துவங்குவார் என்பதை இந்த வசனத்தின் துவக்க பகுதி காட்டுகிறது (எரேமியா 30:7). இந்த உபத்திரவத்தை முற்பிதாக்கள் முடிவுக்குக்கொண்டு வருவார்கள். இந்த வசனத்தில் சொல்லப்படும் ஆலோசகர்கள் இவர்களே. தேவனுடைய இராஜ்யத்தில் பிரபுக்களாக நியமிக்கப்பட்டவர்களுக்கு இந்தப் பங்கு சிறப்பாகப் பொருந்துகிறது. "அதற்குப் பின் நீ (இஸ்ரயேல்) நீதிபுரம் என்று அழைக்கப்படுவாய்."

* இந்த மீட்பை எடுத்துக்காட்டும் மற்றொரு வசனப்பகுதி, மீகா 5:5 - "இவரே சமாதான காரணர்; அசீரியன் நம்முடைய தேசத்திலே வரும் போதும், நம்முடைய அரண்மனைகளை மிதிக்கும்போதும், ஏழு மேய்ப்பரையும் மனுஷரில் எட்டு அதிபதிகளையும் அவனுக்கு விரோதமாக நிறுத்துவேன்." யாக்கோபின் உபத்திரவ காலத்தில் இறுதி அனுபவமாக, "ஆசிரியர்கள் வருவார்கள்" ஏழு மேய்ப்பர்களும், எட்டு பிரபுக்களும் இஸ்ரயேலை மீட்கக்கூடியவர்களாக இருப்பார்கள். இந்த எட்டு பிரபுக்களும் - முற்பிதாக்கள். சங்கீத புஸ்தகத்தில் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைகள் இந்த வசனப் பகுதியிலும் காணலாம். எட்டு என்ற எண் "புதியது" பற்றிப் பேசுகிறது. குறிப்பாக இங்கு, உயிர்த்தெழுதலை அடையாளப்படுத்துகிறது. ஏழு மேய்ப்பர்கள் மகிமையடைந்த சபையாகும். (எண்ணாகமம் 29-ஆம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட ஏழு ஆட்டுக்குட்டிகளை நினைவில்கொள்ளவும்).


* தேவனுடைய இராஜ்யத்தில் முற்பிதாக்கள், காணக்கூடிய பிரதிநிதிகளாகப் பங்கெடுப்பதைக் காட்டுகிற கடைசி வசனப் பகுதி - எசேக்கியேல் 44:1-3) "பின்பு, அவர் என்னைக் கிழக்குக்கு எதிரே பரிசுத்த ஸ்தலத்துக்குப் புறவாசல் வழியே திரும்பப்பண்ணினார்; அது பூட்டப்பட்டிருந்தது. அப்பொழுது கர்த்தர் என்னைநோக்கி: இந்த வாசல் திறக்கப்படாமல் பூட்டப்பட்டிருக்கும்; ஒருவரும் இதற்குள் பிரவேசிப்பதில்லை; இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் இதற்குள் பிரவேசித்தார், ஆகையால் இது பூட்டப்பட்டிருக்கவேண்டும். இது அதிபதிக்கே உரியது, அதிபதி கர்த்தருடைய சந்நிதியில் போஜனம்பண்ணும்படி இதில் உட்காருவான்; அவன் வாசல் மண்டபத்தின் வழியாய்ப் பிரவேசித்து, மறுபடியும் அதின்வழியாய்ப் புறப்படுவான் என்றார்."

கிழக்கு வாசல், சுவிசேஷ யுகத்தின் பரம அழைப்பை அடையாளப்படுத்துகிறது. அந்தக் கதவு அடைப்படும் காரியம் - பரம அழைப்பு நிறைவு பெற்றதைக் காட்டுகிறது. ஆனால், "பிரபு"வாகிய முற்பிதாக்கள், கிழக்கு வாசலின் மண்டபத்தின் வலது புறமாக அமர்ந்திருக்கக் கூடிய காரியமானது, மகமையடைந்த கிறிஸ்துவோடும், உலகத்தின் மனுஷரோடும் அவர்கள் கொண்டிருக்கும் தொடர்பையும், பெற்ற அதிகாரத்தையும் காட்டுகிறது.

அனைவரும் நன்மையடைய வேண்டாமோ?

# முழு உலகத்தின் உயிர்த்தெழுதல்

"இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்படவேண்டாம்; ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்; அப்பொழுது, நன்மைசெய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும், தீமைசெய்தவர்கள் ஆக்கினையை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்" (யோவான் 5:28-29).



Brian Montague

குடும்பத்தின் நபர்கள், அன்பான சிநேகிதன் அல்லது தனிப்பட்ட தொடர்பைக்கொண்டிருக்கும் பொது நபர், இவர்களின் மரணம் - மனுக்குலம் எதிர்நோக்கக்கூடிய கடுமையான சவாலாகும். இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், உணர்ச்சிகள் உச்சக்கட்ட சோகத்திற்கும், மன அழுத்தங்களுக்கும் கொண்டுச் செல்லலாம். துக்கங்கள் அதிகரித்து இருதயத்தில் வழிய துவங்கும். இந்த வேதனையைத் தணிக்க, ஜனங்கள் பல முறைகளைப் பயன்படுத்தி வருகிறார்கள். அவர்களால் நேசிக்கப்பட்டவர்களை இனி ஒருபோதும் காணமாட்டோம் என்ற துக்கம் நீடித்திருக்கலாம். இப்படிப்பட்ட சந்தேகங்கள் புரிந்துகொள்ள இயல்பாக இருந்தாலும், மரித்தோர் நிச்சயமாக உயிர்த்தெழுவார்கள் என்பதற்கான அருமையான தெய்வீக வாக்குத்தத்தங்களை வேதாகமம் கொண்டிருக்கிறது. தேவனுடைய ஏற்பாட்டின் கீழ் அவருக்கு இசைவாக இருக்கும் யாவருக்கும் அந்தப் பரிபூரணமான பூமியில் நித்திய ஜீவனைப் பெறுவதற்கு ஒரு வாய்ப்பளிக்கப்படும். மரணம் எனும் மிகப் பெரிய எதிரிக்கு இறையான அனைவருக்கும் மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கும்.

"உயிர்த்தெழுதல்" என்ற வார்த்தை புதிய ஏற்பாட்டில் 41முறைகள் காணப்படுகிறது. ஆயினும், உயிர்த்தெழுதலைப் பற்றிய, செய்தி பழைய ஏற்பாட்டின் காலம் முழுவதும் பிரகடனம் படுத்தப்பட்டது.

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோத்தேயு 2:15) என்று அப்போஸ்தலனாகிய பவுல் நம்மை ஊக்குவிக்கிறார். இந்தத் தலைப்பை நாம் கவனமாக ஆராய்ந்துப் பார்க்கும் போது, மரணம் மற்றும் அதனால் நஷ்டப்பட்ட அனுபவங்கள் தொடர்புடைய வேதனையான சூழ்நிலைகளைக் காட்டிலும், மனுக்குலத்தின் மீட்புக்கான தெய்வீக நோக்கத்தை நாம் அறிந்துகொள்ளலாம்.

"உயிர்த்தெழுதல்" என்பதற்காகப் பயன்படுத்தப்பட்ட அனாஸ்டாசிஸ் என்ற கிரேக்க வார்த்தை ஸ்டிராங்க்ஸ் 386-இல் குறிப்பிடப் பட்டுள்ளது. இதற்கு, "மீண்டுமாக **எழுந்து நிற்பது**" என்று பொருள். மரணத்திலிருந்து உயிர்த்தெழுவது என்றால், ஜீவனுக்குள் மீண்டும் எழுந்திருப்பதாகும். உயிர்த்தெழுதல் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டில் காணப்படாமல் இருந்தாலும், "திரும்புதல்" என்ற வார்த்தையும் அதே பொருளைக்கொண்டுள்ளது. அனாஸ்டாசிஸ் என்ற கிரேக்க வார்த்தைக்கும் ஸ்டிராங்க்ஸ் 7725-யிலிருந்து வரும் வார்த்தையும் ஒரே அர்த்தத்தைக்கொண்டுள்ளது. திரும்ப வருதல், திரும்பகொடுத்தல் அல்லது புதுப்பித்தல் என்ற பொருள்படுகிறது.

எடுத்துக்காட்டாக, மனிதன் கல்லறையிலிருந்து திரும்பி வருவான் என்ற நம்பிக்கையை வெளிப்படுத்தி மோசே தேவனிடத்தில் ஜெபித்ததை சங்கீதம் 90:3-இல் காணலாம். அதுபோல, ஆண்டவரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி வருவதோடு மட்டுமல்ல, அனைத்து மனுக்குலமும் தேவனைப் புகழ்ந்து பாடும் பாடலோடு கல்லறையிலிருந்து திரும்புவார்கள் என்று ஏசாயா கூறுகிறார் (ஏசாயா 35:10). இவர்கள் நித்தியமான மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் திரும்புவார்கள். துக்கமும் அழுகையும் இனி இராது.

கடந்த 6000 வருடங்களாக மரித்துப் போன ஜனங்கள், மீண்டுமாக கல்லறையிலிருந்து வந்து சீர்பொருந்துவதற்கான காரியங்கள் மிகப் பிரமாண்டமாகத் தோன்றுகிறது. வாஷிங்டனில் ஜனத் தொகையைக் கணக்கிடக்கூடிய ஒரு ஆராய்ச்சிக் குழு (Population Reference Bureau), இந்தப் பூமியின்மேல் வாழ்ந்த ஜனங்களின் எண்ணிக்கையை அறிந்துகொள்வதற்கு அடிக்கடி திட்டமிட்டார்கள். நீடித்த காலமாக, அடிக்கடி ஆராய்ச்சி செய்துவரும் காரியமாக இருப்பினும் இது மிகவும் குழப்பமாகவே உள்ளது என்ற இலாபமற்ற அமைப்புகள் உறுதியளிக்கிறது. 2011-ஆம் வருஷம் வெளியிடப்பட்ட பிரதியில், 1900 ஆண்டுகள் வரைக்கும் எறக்குறைய 14 பில்லியன் ஜனங்கள் பிறந்திருக்க வேண்டும் என்று அனுமானிக்கப்படுகிறது.

அதேநேரத்தில், மற்றொரு ஆராய்ச்சிக் குழு (PRB) 1886-ஆம் வருடம் வரையில் 142 பில்லியன் ஜனத்தொகை இருந்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறது. இதை நம்முடைய சகோதரர் ரஸல் தம்முடைய முதல் தொகுப்பிலும் குறிப்பிட்டிருக்கிறார். (ஜலப்பிரளயத்தில் காக்கப்பட்ட 8 பேரிலிருந்து (கிமு 2472) கிபி 1886-ஆம் வருடம் வரைக்கும் 1,424 பிலியன் ஜனங்கள் பெருகியிருந்தால், அதுவரையில் இருந்த ஜனதொகை 6.5 - 13 பில்லியனாக மட்டுமே இருந்திருக்க வேண்டும். (வாழ்நாள் 50-25 வருடங்கள் என்று கணக்கிட்டால்) (10.20%) ஆகவே, இப்போது 160 பில்லியனாக ஜனத்தொகை அதிகரிக்குமேயானால், தொகை மிகவும் அதிகமாக உள்ளதே என்ற ஒரு சிறிய சந்தேகம் எழும்புகிறது. அதற்குப் பின் அனைவரின் உயிர்த்தெழுதல் இதுவரையில், மனிதரின் கண்களின் வழியாக காணாத ஒரு உலகளாவிய அற்புதமாக இருக்கும்.

இந்த முழு மனித குடும்பத்தின் இரட்சகராகிய நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் அன்பும், அவருடைய மனப்பூர்வமான பலியுமே இந்த உலகத்தின் உயிர்த்தெழுதலைச் சாத்தியமாக்கியது. "ஆட்டுமந்தையைப்போலப் பாதாளத்திலே கிடத்தப்படுகிறார்கள்; மரணம் அவர்களை மேய்ந்துபோடும்; செம்மையானவர்கள் அதிகாலையில் அவர்களை ஆண்டுகொள்வார்கள்; அவர்கள் தங்கள் வாசஸ்தலத்தில் நிலைத்திருக்கக்கூடாதபடி அவர்களுடைய ரூபத்தைப் பாதாளம் அழிக்கும்" (சங்கீதம் 49:14) என்று கோராகின் புத்திரர் கூறுகிறது போல கல்லறையில் இருக்கும் மரித்தோர் எந்த விதமான உணர்வுகளுமின்றி இருப்பதனால், (பிரசங்கி 9:5) அவர்கள் சார்பில் நம்முடைய ஆண்டவர் கொடுத்திருக்கும் ஈடுபலியின் புண்ணியத்தினால் சீக்கிரத்தில் உயிர்த்தெழுப்பப்படுவார்கள்.

இந்த உலகத்தின் உயிர்த்தெழுதல் - அவிசுவாசிகளினால் புறக்கணிக்கப்பட்டாலும் சரி, அல்லது கடவுள்மேல் நம்பிக்கைக்கொண்ட பலர் அதைப்பற்றித் தெளிவாகப் புரிந்துகொள்ளாவிட்டாலும் சரி, இது ஒரு இணையற்ற வாக்குத்தத்தமாக இருக்கிறது. தேவன் இல்லை என்றும், வாழ்க்கை மரணத்தில் முடிவடைகிறது என்றும், பூமிக்குத் திரும்பின மூலக்கூறுகளால் மறுமடியும் புதுப்பிக்கப்பட்டு, புதிய உயிரினங்களாக எழும்புகிறது என்றும், அவிசுவாசிகள் தங்களுடைய நம்பிக்கையைத் தொடருகிறார்கள். இப்படிப்பட்ட நம்பிக்கைகள் இருந்தபோதிலும் (சங்கீதம் 14:1) கல்லறையில் இருக்கும் அனைவரும் வெளியே வரக்கூடிய காலம் வரும். அப்பொழுது நம்முடைய ஆண்டவரின் விசுவாசமுள்ள சீஷர்கள், ஆவிக்குரிய ஒரு வாழ்க்கைக்குப் பாத்திரவான்களாக எண்ணப்படுவார்கள். மீதியிருக்கும் மனுக்குலம் கற்றுக்கொள்வதற்கும், சோதிக்கப்படுவதற்கான ஒரு காலத்திற்குள் எழுந்திருப்பார்கள். இவர்கள் நித்தியமான ஜீவனைப் பெறுவார்களா இல்லையா என்ற இறுதியான தீர்ப்பு, கிறிஸ்துவின் இராஜ்யத்தின் முடிவில் தீர்மானிக்கப்படும். கீழ்ப்படிந்து, பாத்திரவான்களாக காணப்படக்கூடிய அனைவரும் இந்தப் பூமியின்மேல் பரிபூரண ஜீவனைப் பெறுவார்கள். கீழ்ப்படியாமையினால், அபாத்திரராக காணப்படுபவர்கள் நித்தியமான அழிவுக்குத் தீர்ப்பளிக்கப்படுவார்கள் (யோவான் 5:28-29).

சாத்தான் இந்த உலகத்திற்கு அதிபதி என்றும், அவனே பலருடைய கண்களைக் குருடாக்கினவன் என்றும் வசனங்கள் வெளிப்படுத்துகிறது (2 கொரிந்தியர் 4:4 ). ஆனால், இவர்களை ஒப்பிட்டுப்பார்க்கும் போது வெகு சிலர், மனுக்குலத்தைச் சீர்படுத்துவதற்கான அருமையான தேவனுடைய திட்டத்தைப் புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால், பலர் தவறான எண்ணங்களை ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பளித் திருக்கிறது. இதற்கான ஒரு எடுத்துக்காட்டை, சதுசேயர்களின் போதனையில் காணலாம் - (இவர்கள் உயிர்த்தெழுதல் இல்லை என்று சாதிப்பவர்கள்) (லூக்கா 20:27-40). இவர்கள் உயிர்த்தெழுதலைக் குறித்து, இயேசுவின் போதனைகளைப் பரியாசம் பண்ணினார்கள்.

தேவன் ஆபிரகாமின் தேவனும், ஈசாக்கின் தேவனும், யாக்கோபின் தேவனும் என்று அழைக்கப்பட்டார் என்று, எரிகிற முட்புதரிலிருந்து தேவன் மோசேயிடம் பேசின வார்த்தைகளைக் கொண்டு இயேசு அவர்களுக்குப் பதிலளித்தார். அவர்களுக்குத் தேவன்மேல் இருந்த விசுவாசத்தின் பொருட்டு, தேவன் அவர்களைக் கல்லறையில் விடுவதில்லை. இவர்கள் மீண்டும் ஒருநாள் ஜீவனோடு எழுந்திருப்பார்கள். நிச்சயமாக, அக்காலத்தில் தேவன் ஒருவர் இல்லை என்றும், அவருடைய வல்லமையை நம்பாமல் இருக்கும் அனைவரும், மரணத்திற்குப்பின் ஜீவன் உண்டென்று வேதாகமத்தில் மீண்டும் மீண்டுமாகச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்திற்கு நாங்கள் குருடர்களாக இருந்தோம் என்று வருத்தத்தோடு ஒத்துக்கொள்வார்கள் (யோவான் 12:38-40).

ஆர்வ மூட்டும் வகையில், உயிர்த்தெழும் மரித்தோர், நீதியுள்ளவர்களானாலும் சரி, அநீதியுள்ளவர்களானாலும் சரி, அனைவரும் உயிர்த்தெழுவார்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் போதிக்கிறார். "நீதிமான்களும்

அநீதிமான்களுமாகிய மரித்தோர் உயிர்தெழுந் திருப்பது உண்டென்று இவர்கள் தேவனிடத்தில் நம்பிக்கைக்கொண்டிருக்கிறது போல, நானும் நம்பிக்கைக்கொண்டிருக்கிறேன்" (அப்போஸ்தலர் 24:15). வரலாற்றின் பக்கங்களில், நீரோ, இவான் 4, ஸ்டாலின், ஹிட்லர், மற்றும் பின்லேடனைப் போல பிரபலமான நபர்களின் பெயர்களைப் பதித்து வைத்திருக்கிறது.

இவர்கள் மனித நேயத்திற்கு எதிராக, மிகக் கொடிய குற்றங்களைப் புரிந்தார்கள் என்று பிரபலமாக அறியப்பட்டிருக்கிறது. இந்த நபர்கள் அநீதியானவர்கள் என்றும், மீண்டும் உயிர் வாழ்வதற்குத் தகுதியற்றவர்கள் என்றும் பலர் முடிவு செய்யலாம். ஆயினும், "நீதியுள்ளவர்கள் மற்றும் அநீதியுள்ளவர்கள்" ஆகிய இரு வகுப்பாருமே உயிர்த்தெழுவார்கள் என்று அப்போஸ்தலரின் புத்தகம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. சுவிசேஷ யுகத்தில் தங்களை விசுவாசமுள்ளவர்கள் என்று நிரூபித்து, ஆவிக்குரிய பரிசைப் பெறகூடியவர்கள் நீதிமான்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். எஞ்சியுள்ள மனுக்குலம் அதாவது, கொடுமையான தீய செயலைப் புரிந்தவர்கள், "அநீதியுள்ள வகுப்பார்" உட்பட அனைவரும் உயிர்த்தெழுதலைப் பெறுவார்கள். நேர்மையானவர்களைப் போல தோன்றினாலும், தேவனுடைய கண்ணோட்டத்தில் பரிசுத்தமற்ற வாழ்க்கையை வாழ்ந்துக் கொண்டிருக்கிறார்கள். "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி" (ரோமர் 3:23) என்று பவுல் கூறுகிறார். பிதாவாகிய தேவன் தம்முடைய மிகுந்த தயவினாலும் கிருபையினாலும், இந்த மனுக்குலத்தின் சார்பாக இரட்சகராம் இயேசுவின் ஜீவனைக் கொடுப்பதற்கு அனுப்பாவிட்டால், ஒருவரும் மரணத்திலிருந்து எழுந்திருக்க தகுதி பெற்றிருக்கமாட்டோம்.

### மண்ணிலிருந்து திரும்பி


தானியேல் தீர்க்கதரிசி, உயிர்த்தெழுதலை ஒரு தனிப்பட்ட நபர் நித்திரையிலிருந்த விழித்திருப்பதற்கு ஒப்பாகப் பேசுகிறார் (தானியேல் 12:2). மரித்த அனைவரும் "மண்ணில் நித்திரையாக" இருக்கிறார்கள் என்று அவருடைய வார்த்தைகள் நமக்கு நினைப்பூட்டுகிறது. கீழ்ப்படியாமையின் பலனாக, "நீ மண்ணுக்குத் திரும்புவாய்" என்ற அவருடைய வார்த்தைகள் நமக்கு நினைப்பூட்டுகிறது (ஆதியாகமம் 3:19) என்று ஆண்டவர் ஆதாமிடம் சொன்ன வார்த்தைகளை, மேலே கூறப்பட்டுள்ளவைகள் நினைப்பூட்டுகிறது. பூமியின் தூளிலிருந்து இந்த முழு உலகத்தின் மனுக்குலம் எழுந்திருக்கும் என்ற நற்செய்தியையே தேவன் வாக்களித்திருக்கிறார் (சங்கீதம் 113:7). "தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; இதோ, எல்லா ஜனத்துக்கும் **மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை** உங்களுக்கு அறிவிக்கிறேன்" (லூக்கா 2:10) என்பதை தான் தூதர்கள் பொருள்படுத்தினார்கள்.

மரித்தவர்களை நித்திரையில் இருப்பதாக இயேசுவும் விவரிக்கிறார். அவருடைய நண்பராகிய லாசரு மிகவும் வியாதிப்பட்டிருந்தார். அதனால் அவருடைய சகோதரிகளாகிய மரியாளும், மார்த்தாளும் அவருக்கு ஆள் அனுப்பினார்கள். அந்தச் சூழ்நிலையை இயேசு சீஷர்களுக்கு விவரிக்கும்போது, "லாசரு நித்திரை செய்கிறார்" என்றும், அவரை நித்திரையிலிருந்து எழுப்பப்போவதாகவும்" கூறினார். லாசரு உண்மையில் மரித்துவிட்டார் என்று இயேசு தெளிவாக சீஷர்களிடம் கூறும்வரையில் அவர்கள் குழப்பத்தில் ஆழ்ந்தார்கள். மரணத்தை, நித்திரைக்கு ஒப்பிட்டுப் பேசுவதைக்குறித்து துவக்கத்தில் சீஷர்கள் புரிந்துகொள்ளவில்லை. இறுதியாக, இயேசு லாசருவை மரித்தோரிலிருந்து அழைத்தார். இனி வருங்காலத்தில் கல்லறையில் நித்திரை செய்யும் அனைவரும், உயிர்த்தெழுவதற்கு இந்தச் சம்பவம் ஒரு அருமையான சித்திரமாக உள்ளது (யோவான் 11:37-44).

வருங்காலத்தில் பொதுவான உயிர்த்தெழுதலை எடுத்துக்காட்டும், இயேசு செய்த மற்றொரு அற்புதத்தை சுவிசேஷம் குறிப்பிடுகிறது. கப்பர்நகூமில் ஜெப ஆலயத்தலைவன் , யவீரு இயேசுவைப் பற்றி நன்கு அறிந்தவரும் அவர்மேல் விசுவாசமுள்ளவராகவும் இருந்தார். அவருடைய 12 வயதான ஒரே மகள் வியாதிப்பட்டதினிமித்தம் அவர் இயேசுவை அழைத்தனுப்பினார். இதைக்குறித்து மத்தேயு பதிவு செய்திருக்கும் குறிப்புகள், மாற்கு மற்றும் லூக்காவைக் காட்டிலும் சற்று வித்தியாசமாக உள்ளது. யவீரு இயேசுவிடம் ஆள் அனுப்பியபோது, அவருடைய மகள் உயிரோடிருந்தாள் என்று மாற்கும், லூக்காவும் குறிப்பிடுகிறார்கள் (மத்தேயு 9:18; மாற்கு 5:23; லூக்கா 8:42). ஆனால், இயேசு வந்தபோது அந்தச் சிறுமி மரித்திருந்தார் என்பது தெளிவாக காணப்படுகிறது. மரித்த அந்தக் குழந்தை பரலோகத்திலோ, உத்தரிக்கும் ஸ்தலத்திலோ, நரகத்திலோ இருப்பதாக இயேசு அறிவிக்காமல், அவள் நித்திரை செய்வதாகக் கூறினார். இதினிமித்தம் அங்குக் கூடியிருந்த கூட்டத்தார், இயேசுவை, அவமதித்து இகழ்ந்தார்கள். இருப்பினும் இயேசு அனைவரையும் வெளியே அனுப்பிட்டு அந்தக் சுபாவத்தைப் பெறுவார்கள் (1கொரிந்தியர் 15:42-44).

தீங்கு செய்பவரும் இல்லை கேடுசெய்பவரும் இல்லை

# இறுதிப் பரீட்சைக்குப் பின்



Brian Montague

"ஏழாம் தூதன் எக்காளம் ஊதினான்; அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம் பண்ணுவார் என்னும் கெம்பீர சத்தங்கள் வானத்தில் உண்டாயின" (வெளிப்படுத்தல் 11:15).

ஏதேனின் தொலைந்த மனித புராணம், கிறிஸ்துவின் ஆயிரவருட ஆட்சியின் முடிவில் மனுக்குலத்திற்குத் திரும்பக் கொடுக்கப் பட்டதற்குப் பின், சாத்தான் கட்டவிழ்க்கப்படுவான். "சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்" (வெளிப்படுத்தல் 20:13). சீர்பொருந்தப்பட்ட உலகத்திற்கு, இது இறுதி பரீட்சையாக இருக்கும். மிகச் சிறிய அளவில் வேதாமத்தில் குறிப்பிடப்படும் இந்தச் சம்பவம் பழைய ஏற்பாட்டின் ஒரு நிழலிலும், (சிவந்த சமுத்திரத்தில் நடந்த ஒரு சம்பவம்) மத்தேயுவில் சொல்லப்பட்ட ஒரு உவமையிலும் (மத்தேயு 25:31-46), ஏசாயா 22 மற்றும் வெளிப்படுத்தல் 20-ஆம் அதிகாரங்களிலும் சொல்லப்பட்ட தீர்க்க தரிசனங்களிலும் காணலாம். அதற்குப் பின்வரும் தேவனுடைய நித்திய இராஜ்யத்தைக்குறித்து வேதாகமம் நமக்கு அதிகமாக ஒன்றும் சொல்லாத பட்சத்தில், வெகு சில முத்துக்களையே காணலாம்.

தேவன் ஆபிரகாமுக்கு வாக்களித்த வாக்குத்தத்தங்களின் உச்சக்கட்டம் நிறைவேறும். "நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் **சந்ததிக்குள்** பூமியிலுள்ள சகல ஜாதிகளும் **ஆசீர்வதிக்கப்படும்** என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஆதியாகமம் 22:18). கிறிஸ்துவும் அவருடைய விசுவாசமுள்ள சபை, ஆபிரகாமின் பரலோக சந்ததியாகும். மேலும், "தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள் " (வெளிப்படுத்தல் 22:5) என்று வாக்களிக்கப்பட்டிருக்கிறது. ஜனங்கள் பரலோகத்திலிருந்து ஆசீர்வதிக்கப்படுவார்கள். இது மட்டுமல்ல, அவர்கள் பரிசுத்தமான பெரும்பாதையில் பயணிக்கும்போது, ஒருவரை ஒருவர் ஆசீர்வதிப்பார்கள். இதுவே துவக்கத்திலிருந்து தேவனால் வகுக்கப்பட்ட திட்டம்.

எகிப்தும் மற்ற தேசங்களும் வெட்கப்படுத் தப்படும்போது, அப்போது மாம்ச இஸ்ரயேலோ, "கர்த்தராலே நித்திய இரட்சிப்பினால் இரட்சிக்கப்படுவான்; நீங்கள் **என்றென்றைக்கு முள்ள சதாகாலங்களிலும்** வெட்கப்படாமலும் கலங்காமலும் இருப்பீர்கள்" (ஏசாயா 45:17).

"என் பரிசுத்த பர்வதமெங்கும் தீங்குசெய்வாருமில்லை; கேடுசெய்வாருமில்லை; சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந் திருக்கும்" (ஏசாயா 11:9; 65:25).

### யாத்திராகமத்திலிருந்து கவனமான ஒரு ஆய்வு

வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள மிக நீண்ட இரண்டு நிழல்களில் ஒன்று, யாத்திராகமம் 7:14 - 15:22 அதிகாரங்களில் கொடுக்கப்பட்டுள்ளது. மோசே எகிப்திற்கு வந்து நடத்தின பத்து வாதைகள், இயேசுவின் முதலாம் வருகையையும், சுவிசேஷ யுகத்தில் நடக்கும் தீமைகளையும் காட்டுகிறது. எகிப்தை விட்டு இஸ்ரயேலர்கள் புறப்பட்ட பின், சிவந்த சமுத்திரத்தை அவர்கள் வந்து சேரும் மூன்று நாள் வரையில், அவர்களில் ஒருவரும் பார்வோனும் கட்டுபாட்டிற்குள் இருக்கவில்லை. இச்சம்பவம், இந்த உலக ஜனங்கள் தங்களுடைய ஆயிரவருட ஆட்சியின் போது, பிரயாணிக்கக்கூடிய காலம். அதாவது, சாத்தான் கட்டப்பட்ட அந்தக் காலத்தைச் சித்தரிக்கிறது. இஸ்ரயேலர்கள் சிவந்த

சமுத்திரத்தைக் கடந்து. அவர்களுக்குப் பின்சென்ற பார்வோனும் அவன் சேனைகளும் கடலில் மூழ்கின காரியங்களைச் சாத்தானுடைய கொஞ்ச காலமும், அவனுடைய அழிவையும் காட்டுகிறது.

"நாங்கள் வனாந்தரத்தில் மூன்று நாள் பிரயாணம்போய், எங்கள் தேவனாகிய கர்த்தர் எங்களுக்கு விதிக்கிறபடியே அவருக்குப் பலியிடுவோம்" (யாத்திராகமம் 7:16; 8:27) என்று துவக்கத்தில் ஒரு இலக்கு குறிக்கப்பட்டது. காலபோக்கில், "மோசே இஸ்ரவேல் ஜனங்களைச் சிவந்த சமுத்திரத்திலிருந்து பிரயாணப்படுத்தினான். அவர்கள் சூர்வனாந்தரத்துக்குப் புறப்பட்டுப்போய், மூன்றுநாள் வனாந்தரத்தில் தண்ணீர் கிடையாமல் நடந்தார்கள்" (யாத்திராகமம் 15:22-23) (ஒரு புதிய அனுபவத்திற்குள் சென்றார்கள்). இப்படியாக, "வரக்கூடிய யுகங்களில்" மனுஷனுக்காக தேவனுடைய ஆதிகால திட்டம் முழுமையாகப் பலனளிக்கும்.

புளிப்பில்லா அப்பப்பண்டிகை, ஏழு நாட்கள் அனுசரிக்கப்பட்டது. அதில் முதல் நாளும், இறுதி நாளும் பரிசுத்த சபை கூடுதலாக அநுசரிக்கப்பட்டது. முதலாம் நாள் இந்த உலகத்தின் உயிர்த் தெழுதலையும், அதில் ஏற்படும் மகிழ்ச்சியையும் ஆரவாரத்தையும் நிழலிடுகிறது. சிவந்த சமுத்திரத்திற்கு மூன்று நாள் பயணம், அதற்குப் பின் மற்றொரு மூன்று நாட்களில் முழு மனுக்குலமும் நித்திய நித்தியத்திற்கும் மகிழ்ச்சியோடு வாழக்கூடிய, பரிசுத்தசபை கூடுதலுக்கான நாளாகும் (யாத்திராகமம் 2:15-16).

ஆயிரவருட ஆட்சியின் போது, "வீடுகளைக் கட்டி, அவைகளில் குடியிருப்பார்கள், திராட்சத் தோட்டங்களை நாட்டி, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்" (ஏசாயா 65:21). மனுக்குலத்தில் கட்டுவதும் நாட்டுவதும் நித்தியமான ஒரு தொடர் காரியமாக இருக்கும் என்று நியாயமாக நாம் எண்ணுகிறோம்.

"இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின. "இதை உறுதிப்படுத்தும்படியாக, "பரிகரிக்கப்படுங் கடைசிச் சத்துரு மரணம்" (வெளிப்படுத்தல் 21:4; 1கொரிந்தியர் 15:26).

அர்மகெதோனுக்குப் பின்வரும் காரியங்களை நாம் அறிந்திருக்கிறபடியால்,கொஞ்சகாலத்திற்கு சாத்தான் கட்டவிழ்க்கப்பட்டாலும், "இந்த வார்த்தைகளைச் சொல்லி ஒருவரையொருவர் தேற்றி," இந்த உலகத்தின் ஜனங்களோடு சமாதானமாகப் பேச வேண்டும்.

## தீர்க்கதரிசனத்தில் இன்று

# இவ்வுலகில் ஏற்பட்டுள்ள தலைமைக்கான நெருக்கடி

"நீதிமான்கள் பெருகினால் ஜனங்கள் மகிழுவார்கள்; துன்மார்க்கர் ஆளும்போதோ ஜனங்கள் தவிப்பார்கள்" நீதிமொழிகள் (29:2).

உலகளாவிலான செயல்திட்டத்திற்கான கருத்தாய்வு ஒன்றிற்குப் பதிலளிக்கையில், ஐம்பத்துஆறு சதவிகித மக்களுக்கு, இவ்வுலகில் தலைமைக்கான நெருக்கடி ஏற்பட்டுள்ளது என்பதை ஆமோதித்தார்கள். இன்று உலகில் நடைபெறும் மாபெரும் வழக்கு என்னவென்றால் - பொருளாதாரத்தில் சமநிலை அற்ற தன்மை மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் நடக்கும் வன்முறைகள் - பல நாடுகள் இதைப் பற்றி பயனுள்ள முறையில் விமர்சிக்க தவறிவிட்டனர்.

அரசாங்கங்கள் வளர வளர, போட்டியிடும் நாடுகளில் இருக்கும் ஒரு தரப்பினருக்கு மட்டும் ஏற்படும் சீரமைப்பு மற்றும் ஆழமான ஊழலால், அவர்கள் முன்பே தீர்மானித்திருக்கும் தீர்வுகளைச் செயல்படுத்த முடியாமல் இருக்கின்றன. எடுத்துக்காட்டாக, சீனாவில், நடத்தப்பட்ட பியூ என்னும் கருத்தாய்வு ஒன்றில் தொன்னூறு சதவிகித மக்கள் ஊழலால் அந்தநாட்டில் பல பிரச்சனைகள் வருகின்றது என்கின்றனர். இரண்டு வளர்ந்து வரும் நாடுகளாகிய இந்தியாவில் (83%) மற்றும் பிரேசிலில் (78%) மேற்கூறப்பட்ட கருத்தை ஆமோதித்தனர்.

அரசியல் துறை என்பது சேவை மனப்பான்மையைக் காட்டிலும் ஒரு தொழிலாக மாறிவரும் இந்த வேளையில் மக்களின் முன்னேற்றங்களுக்காக எடுக்கப்படும் பல நீண்ட கால திட்டங்கள் குறைந்துகொண்டே போகிறது. "குவளையை உதைத்து சாலையில் தள்ளு" என்ற மங்கலமொழி வழக்கு, வயது முதிர்ந்தவர்களுக்காக தீட்டப்படும் எதிர்கால திட்டங்களுக்கு ஆய்வாளர்களும் கூறும் பொதுவான விளக்கமாய் மாறியுள்ளது. வறுமையைப் பற்றியும், பொருளாதார சமநிலையற்ற தன்மையாய் இருந்தாலும், குறைந்துகொண்டிருக்கும் இயற்கை வளங்களைப் பற்றியானாலும் சரி, அரசியல்வாதிகள் உரையில் இதைப் பற்றி பேசினால் ஒன்று சேர்தல் என்பது விரைவில் வருவதற்கான அறிகுறி அல்லது தங்கள் பதவியை தக்க வைத்துக்கொள்ளும் நிலையில் இருப்பார்கள்.

Years of Renewal என்னும் வரலாற்றுக் குறிப்பு எழுதிய ஹென்றி கிஸ்சிங்கர் என்ற முன்னாள் அமெரிக்க செயலாளர் ஒருவர் கூறும் பொழுது - "முன்னாளில் வசித்து வந்த உயர்ந்த குடிமக்கள் தங்களையே ஒரு கதாநாயகர்களாய் நினைத்துக்கொண்டு சமுதாயத்தில் தெரிந்தவர்கள் மற்றும் தெரியாதவர்கள் அனுபவித்து வரும் துயரமான பயணத்தை தங்கள் சுமையாகக் கருதினார்கள். ஆனால் இன்றிருக்கும் அரசியல்வாதிகள் தங்களை கதாநாயகன் என்றுகூட கருதாமல், தாங்கள் ஒரு உயர்ந்த நட்சத்திரம் என்றே கருதிகிறார்கள். கதாநாயகர்கள் தனியே நடக்கிறார்கள். ஆனால் நட்சத்திரங்கள் தங்கள் தகுதியை பாராட்டின் மூலம் பெறுகிறார்கள். அவன் உள்ளிருக்கும் தகுதியைக்கொண்டு ஒரு கதாநாயகன் தீர்மானிக்கபடுகிறான். நட்சத்திரங்களின் கருத்தைக்கொண்டு தீர்மானிக்கப்படுகிறார்கள். தொலைக்காட்சியில் நிகழ்ச்சியை நடத்துபவர்கள் ஒரு வேட்பாளர் பற்றின கருத்தை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறும்பொழுது அங்கு அந்த வேட்பாளரின் பாதுகாப்பற்ற தன்மை மற்றும் ஆழமற்ற தன்மை அவர்கள் பிறவி குணம் போல் வெளிப்படுகிறது.

உலகளவிலான செயல்திட்டத்தின் ஆய்வுபடி தலைவர்களை வரிசைப்படுத்துவதில் அரசாங்க தலைவர்களைவிட மதத் தலைவர்களைச் சற்று குறைவான இடத்திலேயே வைக்கிறார்கள். மதத்தலைவர்கள் தங்கள் பதவிகளை தகாத வழியில் உபயோகப்படுத்துகிறார்கள் என்றே அந்த ஆய்வில் ஐம்பத்தெட்டு சதவிகித மக்கள் பதிலளிக்கிறார்கள். மத தீவிரவாதம் மற்றும் மத குருக்கள் தகாத வழியில் நடந்து கொண்டிருப்பது பெருகிக்கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில், ஏதேனும் ஒரு வழக்கில் மக்களுக்கு வழிகாட்டவே, ஞானத்தோடு உபதேசிக்கவோ சீரமைக்கப்பட்ட மதத்தலைவர்களை நம்புவதில் மிக எச்சரிப்பாய் உள்ளனர். உலக தலைவர்கள் மக்கள் பிரச்சனைகளுக்கு ஒரு தற்காலிக தீர்வைக்கொண்டுவரும் சுபாவம் தற்சமயம் கிரேக்க நாட்டில் நிகழ்ந்தேறிய பொருளாதார நெருக்கடியில் நிரூபணமானது. நீண்ட கால வழக்குகளுக்கு அவர்கள் நிர்ணயித்த தீர்வு மக்களுக்குக் கஷ்ட நிலையையே உருவாக்கிக் கொடுத்தது.

ராபர்ட் கிரீன்லீஃப் என்பவர் 1970-ஆம் ஆண்டு, "The Servant as Leader" என்ற கட்டுரையில் தலைவர்களின் குணங்களை இவ்வாறாக காண்பித்தார். "ஒரு ஊழியத் - தலைவன் முதலில் ஒரு ஊழியன் சேவை செய்யும் குணம் ஒரு இயற்கையான உணர்வாக முதலில் அவர்களிடம் இருக்க வேண்டும். இந்த விருப்பம் உள்ளுணர்வில் இருந்தால்தான் தலைமை தாங்கும் ஆசை எழ வேண்டும். இந்தக் குணங்களையுடைய ஒரு மனிதன் மற்றவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டவனாக இருப்பான். ஏனென்றால் அவனுக்குப் பதவியின் மேலோ, பொருட்களைச் சேமித்து வைப்பதிலோ ஆர்வம் இல்லாதவராய் இருப்பார்.

ஒரு ஊழிய - தலைவன் முதலில் தன்னைச் சார்ந்த மக்களின் வளர்ச்சியிலும், நல் வாழ்விலும் மட்டுமே தனது நோக்கத்தைச் செலுத்துவான். ஒரு கூம்புவடிவ கோபுரத்தின் மேலே இருந்தாலும் தன்னுடைய அதிகாரத்தை நடைமுறை

படுத்துவதில் கவனம் செலுத்த மாட்டான். ஒரு ஊழிய - தலைவன் மற்றவரை முதல் இடத்தில் வைப்பான், மக்களை மேன்மைபடுத்துவதற்கு உதவி செய்வான் மற்றும் தன்னால் எவ்வளவு இயலுமோ அவ்வளவு செயல்களில் ஈடுபடுவான்.

**கிறிஸ்துவின் ஆயிரம்வருட ஆரசாட்சி**

கிறிஸ்துவின் பூமிக்குரிய ஊழியம் மற்றவர்களுக்குச் சேவை புரிவதாக இருந்தாலும், ஒரு உயர்தரமான வாழ்வு கொடுக்கவே எல்லோரும் அழைக்கப்பட்டனர் (மத்தேயு 4:19). அவருடைய ஊழியம் ஒரு சிறந்த நோக்கத்தோடும் ஒரு அர்ப்பணமான ஊழியமுமாய் இருந்தது (மத்தேயு 15:24). தனது எடுத்து காட்டின் மூலம் மனிதன் சிந்திக்கும் வழியை மாற்றினார் (மாற்கு 2:15-17). பணிவு, தாழ்மை என்ற வாழ்வு வாழ்ந்தாலும் தேவைப்படும் நேரங்களில் தலைமைத்துவத்தையும், அடக்குமுறைகளையும், ஏன் அதிகாரத்தையும் கூட அவர் கையாண்டார் (மாற்கு 1:23-25).

**இன்றைய உலகில் தலைமைத்துவத்திற்கு நெருக்கடி உள்ளதா - ஆம் என்று கூறும் மக்கள்**

61% - ஆசியா - 55% - ஐரோப்பா - 57% - இலத்தீன் அமெரிக்கா - 44% - மத்திய கிழக்கு மற்றும் வட ஆபிரிக்கா - 57%- வட அமெரிக்கா - 65% - சப் - சஹாரான் ஆபிரிக்கா

கிறிஸ்து பரிசுத்த ஆவியில் நிறைந்தவராய், தன்னைப் பின்பற்றுமாறு மற்றவர்களுக்கு ஊக்கமூட்டினார் (மத்தேயு 8:10). "ஊக்கமூட்டுவது" என்ற வார்த்தையின் அடித்தளம் "ஆவி" என்பதாகும். பெந்தெகொஸ்தே நாளன்று அப்போஸ்தலர் தூய ஆவியைப் பெற்றவுடன், அவர்களின் ஊழியத்திற்குப் பெலன் உள்ளதாயும் ஊக்கமளிப்பதாயும் இருந்தது. தங்களின் தனிப்பட்ட ஊழியங்களாலும், கடிதங்கள் மூலமாகவும் பல தனிப்பட்ட சபைகளுக்கு ஊழியம் செய்தார்கள். கிறிஸ்து, மற்ற எல்லாரையும் விட, மனிதர்களின் இருதயத்தை அறிந்தவராய் இருந்தார் (மாற்கு 12:34). கிறிஸ்து தன் சீஷர்களிடம் ஆசைகளைத் தூண்டும் ஆவிகளை அடக்கிவிட்டு தன்னைப் பின்பற்றி தனக்குள் இருக்கும் சமாதானத்தை கண்டுபிடிக்கச் சொன்னார் (மாற்கு 1:18). கிறிஸ்துவின் முதன்மையான விருப்பம் கடவுளின் சித்தம் செய்வதும் மற்றும் தன்னைப் பின்பற்றுமாறு பிறரை ஊக்கமளிப்பது. கிறிஸ்து ஒரு பரிபூரண மனிதனாய் இருந்ததால் தனது முன்மாதிரியான வாழ்வைக்கொண்டு எல்லோருக்கும் வெளிச்சமாய் இருந்தார், தம்முடன் இருந்த அப்போஸ்தலர்களுக்கு அந்த வெளிச்சம் மிகப் பிரகாசமாக மின்னியது. வாழ்விற்குச் செல்ல வேண்டிய பாதையில் நாம் அனுபவிக்கும் கஷ்டங்களான ஆபத்து, ஏமாற்றம், நன்றியற்ற நிலை, சேவை மனப்பான்மை போன்றவற்றை மக்களுக்கு உணர்த்தினார். அந்தப் பாதையில் செல்ல அனைவரையும் உற்சாகப்படுத்தினார். இதுவரை உலகம் பார்த்த மிக மேன்மையான ஆசிரியர் இயேசு கிறிஸ்துதான். மேலும் அவர் தன் வாழ்வின் எடுத்துகாட்டின் மூலம் அனைவரையும் வழிகாட்டினார். இந்த எடுத்துக்காட்டான வாழ்வே பிறருக்கும் அவர்கள் வாழ்வை மற்றவர்களின் சேவைக்காக பலி செலுத்துவதற்கு ஊக்கமளிப்பதாய் இருந்தது. பின்வரும் காலத்தில் இதே போன்று ஒரு மாபெரும் பொறுப்பினை ஏற்றுக்கொள்ள தயாராகிறார்கள் (வெளிப்படுத்தல் 5:9-10).

உலகில் தற்சமயம் நிகழ்ந்துகொண்டிருக்கும் பிரச்சனைகள் மற்றும் துன்பங்களுக்கு மத்தியில் இயேசு தமது மணவாட்டியை அழைத்து தேர்வு செய்து கொண்டிருக்கிறார் (மத்தேயு 25:1-13). கிறிஸ்துவின் மணவாட்டி அவருடன் மகிமையில் சேர்ந்தவுடன் (யோவான் 14:2-3) இதுவரை வாழ்ந்த அனைவரும் உயிர்தெழுவர். அதன் பின், மனுகுலம் அனைத்திற்கும் நீதியைக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும், பாவத்தினால் அவர்கள் பெலவீனம் அடைந்ததிலிருந்தும், மரணத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் அவர்கள் எழுப்பப்படுவார்கள் (யோவான் 5:28-29); (மத்தேயு 25:31-46). இந்த நேரத்தையே வேதாகமத்தில், "மீட்பளிக்கும் நேரம்" என்று கூறப்படுகிறது. தொலைந்து போனவை திரும்ப கிடைக்கும் காலம் (அப்போஸ்தலர் 3:21). மேசியா தலைமைத் தாங்கி ஆட்சி செய்யும் அந்த ஆயிரம் ஆண்டுகளில் உலகம் முழுவதும் பரிபூரணத்திற்குக்கொண்டு வரப்படும்.

இயேசு கிறிஸ்து தன்னைப் பின் செல்பவர்களை இவ்வுலகின் உப்பு என்று அழைத்தார் (மத்தேயு 5:13). கறைப்பட்ட மாம்சத்தின் மீது உப்பு தூவப்பட்டால் அது தூய்மையாகாது. ஆனால் மேலும் உருக்குலைந்து போகாமல் தடுக்கும் மற்றும் ஊழலால் ஏற்பட்ட விளைவுகளை ஒரு முகமூடி போல் மறைத்துவிடும், அவரைப் பின்தொடர்பவர்கள் இக்காத்தில் அனுபவிக்கும் சோதனைகள், அவர்களின் மெல்கிசேதேக்கின் ஆசாரியத்துவத்திற்கு அவர்களைத் தயார் செய்து, அவருடைய ஆயிரவருட அரசாட்சியில் உலகத்தைப் பாவத்திலிருந்து விடுதலை செய்ய அவர்களை வழிநடத்தும் (எபிரெயர் 7:11, 15:17, 19:22, 24:28, 8:6, 10:12, 9:11:15). இந்தப் பூமியின் மகிமை நிறைந்த உப்பாகத் திகழும் கிறிஸ்து மற்றும் அவருடைய திருச்சபையின் தலைமையில் உயிர்த்தெழுந்த மனுக்குலம் முழுவதும் நீதியைக் கற்றுக்கொள்ளும் (2 இராஜாக்கள் 2:19-22).

எரிகோவில் குடிக்க முடியாத நீரில் உப்பைப் பயன்படுத்தி எலிசா தூய்மைப்படுத்தினாரே, அதுபோல் தேவன் கிறிஸ்துவின் இராஜ்யத்தில் உண்மையை விளங்கச் செய்வார். இந்தச் சத்தியமானது முதலில் மகிமையான கிறிஸ்துவிடமிருந்து வெளிப்பட்டு, பின்னர் முற்பிதாக்களின் மூலமாய் இஸ்ரயேல் மக்களுக்கும் பின்பு முழு மனுக்குலத்திற்கும் பாவங்கள் அனைத்தும் கழுவப்பட்டு, மக்களுக்கு நீதியைக் கற்றுக்கொடுக்கும் (ஏசாயா 2:3).

"என் ஆத்துமா இரவிலே உம்மை வாஞ்சிக்கிறது; எனக்குள் இருக்கிற என் ஆவியால் அதிகாலையிலும் உம்மைத் தேடுகிறேன்; உம்முடைய நியாயத்தீர்ப்புகள் பூமியிலே நடக்கும் போது பூச்சக்கரத்துக்குடிகள் நீதியைக் கற்றுக்கொள்வார்கள்" (ஏசாயா 26:9).